உ


சுவாமியே சரணம் ஐயப்பா

## சபரிமலை ஸ்ரீ ஐயப்பன்

# விரதமஹத்துவம்

16வது ஆண்டு

மண்டல பூஜை



சிறப்பு மலர்

வெளியிடுவோர்:


அகில இலங்கை ஐயப்ப சேவா சங்கம்

சபரிமலை தீர்த்தயாத்திரைக் குழு

"ஐயப்பன் இல்லம்"

இல. 69, வன்றோயன் வீதி, கொழும்பு-13, ஸ்ரீ லங்கா.

27-12-1991

இலவச வெளியீடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




With Best Compliments From

**AMBAL CAFE**
**AC COMMUNICATIONS**
**AC VIDEO VISION**

**104, Armour Street,**
**Colombo 12.**
**Telephone: 447367 447550**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஓம் கன்னிமூல கணபதி பகவானே சரணம் ஐயப்பா

## சபரிமலை ஸ்ரீ ஐயப்பன்

# விரதமஹத்துவம்

## 16வது ஆண்டு

# மண்டல பூஜை
# சிறப்பு மலர்


தொகுத்தவர்:

**க. ரவீந்திரகுமார் ஐயப்பனடிமை**

(சபரிமலை தீர்த்தயாத்திரை குருசுவாமியும்,
அகில இலங்கை ஐயப்ப சேவா சங்க செயலாளரும்)



வெளியிடுவோர்:

**அகில இலங்கை ஐயப்ப சேவா சங்கம்**
**சபரிமலை தீர்த்தயாத்திரை குழு**

''ஐயப்பன் இல்லம்''
69, வன்றோயன் வீதி,
கொழும்பு-13,
ஸ்ரீ லங்கா.

அச்சிட்டோர்:

**ஸ்ரீ சக்தி பிரிண்டிங் இண்டஸ்றீஸ்**
61/1 - F, பீர்சாய்பு வீதி,
கொழும்பு - 12.
தொலைபேசி: 438967

*27 - 12 - 91* இலவச வெளியீடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





With Best Compliments From

**SRI SAKTHI**
**PRINTING INDUSTRIES**
Off-set & Letter Press Printers
**61/1F, Peer Saibo Street,**
**Colombo 12, Sri Lanka.**
**Telephone: 438967**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



With Best Compliments From

**AMBIGA JEWELLERS**

JEWELLERS DEALERS IN EVERSILVERWARE

**No. 25, MAIN STREET, GALAHA.**

**TELEPHONE: 0867-327 T. GRAMS: 'AMBIGA'**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமியே சரணம் ஐயப்பா

# முன்னுரை

பரித்ராணாய ஸாதூனாம் விநாசாய ச துஷ்க்ருதாம்
தர்ம - ஸம்ஸ்தர்பனார்தாய ஸம்பவாமி யுகே யுகே.

நல்லோரை பாதுகாத்து, தீயோரை ஒழித்து தர்மத்தை நிலை நாட்ட யான் யுகந்தோறும் அவதரிக்கிறேன் என்கிறார் கிருஷ்ண பரமாத்தா.

கடவுளை பற்றிய சிந்தனையுடையவனே அதர்மத்துக்கு அஞ்சவும் தர்மத்தை போற்றவும் துணிகிறான். தற்கால மனிதன் வாழ்க்கை முறை தர்மத்தை பேணவிடாமல் அதர்மத்தை செய்யவே தூண்டுகிறது. மனித மனம் எப்பொழுதும் சஞ்சலமுடையது. சந்தோஷம், விருப்பு, வெறுப்பு, இன்பம், துன்பங்களில் உழன்று வருகிறது. மனதை ஒருவழிப்படுத்த இறைவழிபாட்டில் மட்டுமே முடியும். எனவேதான் மேலத்தேய நாட்டினர் அமைதி வேண்டி ஆச்சிரமங்களை நாடுவது கண்கூடாகக் காணமுடிகிறது.

இறைவனை வழிபட அன்பு வேண்டும்
இறை பணி செய்ய வேண்டும்
இறைவனை வாயாலும் மனதாலும் போற்றவேண்டும்.

என்புருகப் பணிந்து போற்றின் இறைவன் இன்னருள் எளிதில் கிடைப்பது திண்ணம்.

அகமும் புறமும் தூய்மைபெறின் இறையருள் தானாகவே வந்தடைகிறது. பக்தர்களின் அறிவுக்கும், ஆற்றலுக்கும் தகுந்தவாறு பல நாமங்களில் உருவங்களில் ஈசன் அருள்பாலித்துக் கொண்டிருக்கிறார்.

இக் கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாக விளங்கி நாடி வருவோருக்கு கோடி இன்பம் தந்தருளும் சபரிமலை ஸ்ரீ ஐயப்பன் சத்தியமான 18 படிகள்மேல் பத்மாசனம் கொண்டு நிஷ்டையிலிருந்து அருளாட்சி புரிவதை யாவரும் அறிவர்.

ஹரிஹர புத்திரனாகிய ஸ்ரீ ஐயப்ப சுவாமியை காணச் செல்வோர் அவன் பூவுலகில் அவதரித்து அருளிய உபதேசங்களை செவ்வனே கடைபிடித்து யாத்திரை செய்தால் மட்டுமே அவன் ஜோதி வடிவாய் அருட்காட்சி கொடுத்து ஆட்கொண்டருள்வான் என்பது யாம் கண்டறிந்த உண்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபரிமலை ஸ்ரீ ஐயப்பன் வழிபாடு மானிடர்களுக்கு கிடைத்தற்கரிய பேறாகும். ஐயன் புகழ்பாடி, ஆடி அவன் திருவடியை நாடினால் கிடைக்காத பேறு ஏதுமில்லை. ''அமுதால் உன்னைப் பெறலாம்'' என்று சான்றோர்கள் கூறினார்கள்.

ஆம் ஐயனின் அருளைப் பெறச் செல்லும் அடியார்கள் அழாமல் சென்று வரமுடியாதுதான். வாழ்க்கையில் இன்பதுன்பங்கள் குறுக்கிடுவதுபோல் காடுகளையும், மலைகளையும் கடந்து செல்ல வேண்டும், சைவரும், வைணவர்களும் ஏனைய மதத்தோறும் இறைவன் ஒன்றே என்ற மேலான நோக்கோடு பணிந்து போற்றிவரும் ஸ்ரீ ஐயப்பன் பெருமையை வர்ணிக்க இயலாத காரியமாகும். ஐயனின் அருள் எத்தகையது என்பதை அனைவரும் அனுபவத்தால் உணர்ந்து பேரருள் பெற்றுய்கின்றனர்.

ஹரிஹர புத்திரனான ஸ்ரீ ஐயப்பனுடைய பெருமைகளையும் திருவருட் சிறப்புகளையும் அனைவரும் அறிந்து அவனருளாலே அவன் தாழ் வணங்கி ஈற்றில் பேரின்பப் பெருவாழ்வு பெற்றுய்ய வேண்டும் என்ற நோக்கோடு அடியேன் வடந்தோறும் வெளியிடும் நூல், இவ்வருடம் சிறப்பாக மலர ''சபரிமலை ஸ்ரீ ஐயப்பன் விரத மஹத்துவம்'' என்ற சிறப்புமலர் இறைச் செல்வர்களாகிய உங்கள் முன் சமர்ப்பிக்கிறேன்.

பாடும் பணியே பணியாய் அருளாய் என்கிறார் அருணகிரிநாதர் அடியேனுக்கும் இப்பணியை செய்வதற்கு வாய்ப்பளித்த எம்பெருமானை வாழ்த்தி வணங்குகிறேன்- 16வது வருடங்களாக அடியேனை மகரஜோதி தரிசனம் காண கட்டளையிடும் பகவானின் திருவடியை சரணடைகிறேன்-

இந்நூல் அறிஞர்கள், குருமார்கள், பெரியோர்களின் நூலிருந்தும் என் சிற்றறிவுக்கு எட்டிய அனுபவங்களையும் கொண்டு தொகுத்துள்ளேன். ஸ்ரீ ஐயப்பன் பெருமையை உலகுக்கு எடுத்தியம்ப வேண்டும் என்ற ஆவலினால் மலர்ந்த இந்நூலில் சொற்பிழை, பொருட்பிழையேதும் இருப்பின் குற்றங்களைந்து குணங்கொள்ளுமாறு நல்லவராகிய உலகத்தோரை பணிவன்புடன் வேண்டுகிறேன். எல்லோரும் ஓர்குலம், ஓர்நிறை என்ற ஐயப்பனின் அருள்வாக்கை நினைவிற்கொண்டு நாட்டில் சாந்தியும், சமாதானமும் தளைக்க ஸ்ரீ ஐயப்பனைப் பிரார்த்திடபோமாக. மெய்ப்பொருளாகிய ஸ்ரீ ஐயப்பன் உலகெங்கும் மங்களம் தங்கும்படி அருள்புரிவாராக.

அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகனே சரணம் ஐயப்பா.

அகில இலங்கை ஐயப்ப சேவா சங்கம்
சபரிமலை தீர்த்த யாத்திரைக் குழு
''ஐயப்பன் இல்லம்''
69, வன்றோயன் வீதி,
கொழும்பு-13.
27-12-1991

**க. ரவீந்திர குமார்**
ஐயப்பனடிமை
(சபரிமலை தீர்த்த யாத்திரைக் குழு
குருசுவாமியும், அகில இலங்கை
ஐயப்ப சேவா சங்க செயலாளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

சபரிமலை ஸ்ரீ ஐயப்பனின் மகிமையை பாரதநாடு நன்கறியும், இலங்கையிலும் வேரூன்றி பரவத் தொடங்கியுள்ளது. நாளுக்கு நாள் ஐயப்பன்மாரின் தொகையும் கூடிக்கொண்டு வருவதற்கு காரணம் எண்ணியதை எண்ணியபடி நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்.

பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு ஓரிரு பக்தர்களே சென்றனர். இன்றோ நூற்றுக்கணக்கானோர் விரதம் அனுஷ்டித்து வருகிறார்கள். வருங்காலத்தில் ஆயிரக்கணக்கானோர் ஐயப்பனை தரிசிக்கச் செல்வார்கள் என்பதில் ஐயமில்லை.

இந்நூல் வெளியிடுவதற்கு காரணம் ஐயனின் அருமை, பெருமைகளை படித்தவர் மட்டுமின்றி, பாமரர்களும் அறியவேண்டும் என்ற நோக்கோடு உங்கள் கரங்களில் சமர்ப்பிக்கிறோம். கடந்த காலங்களில் நல்ல விளைவைக் காட்டியமையால் புதிய கருத்துக்கள் சிலவற்றை சேர்த்து புது மெருகூட்டியுள்ளோம். இந் நூலில் விரதம் எப்படி அனுஷ்டிக்க வேண்டிய காலம், வேண்டாத காலத்தை மட்டுமன்றி தத்துவங்களையும் உள்ளடக்கியுள்ளது.

எங்கள் தீர்த்த யாத்திரைக் குருவின் குருசுவாமி க. இரவீந்திரகுமார் ஐயப்பன் அடிமை அவர்கள் ''சபரிமலை ஸ்ரீ ஐயப்பன் விரத மஹாத்துவம்'' என்னும் புனித நூலில் நெஞ்சுக்கினிய புதிய பஜனைப் பாடல்கள், தத்துவங்கள், சிறுகதைகள் முதலியவற்றை தொகுத்துள்ளார் என்பதில் பேரானந்தம் அடைகிறோம்.

இம்மலர் இலவசமாக வெளியிடுவதற்கு பேருதவி புரிந்த வணிகப் பெருமக்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் மட்டுமன்றி இரவு பகல் பாராது சிறந்த முறையில் அச்சிட்டு வழங்கிய அச்சகத்தாருக்கும், சகல ஊழியர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வருடமும் பூஜைகள், அன்னதானங்கள் முதலியவற்றை வெகு விமரிசைமாக நடத்துவதற்கு ஜெயந்திநகர் ஸ்ரீ சிவசுப்பிரமணிய கோவிலில் மண்டபம் தந்துதவிய ஆலய தர்மகர்த்தா அருட்செல்வர் உயர்திரு V. T. V. தெய்வநாயகம் பிள்ளை ஐயா அவர்களுக்கும், ஆலய பரிபாலன சபையினருக்கும், குருக்களுக்கும் எமது அன்பான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இங்ஙனம்

**அகில இலங்கை ஐயப்ப சேவா சங்கம்**

**தீர்த்த யாத்திரைக் குழு**

(மலர் வெளியீட்டுப் பிரிவு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சற்குருநாதனே சரணம் ஐயப்பா

# எல்லாப் புகழும் எங்கள் குருநாதருக்கே

தெய்வீகத் தொண்டாற்ற மண்ணுலகுக்கு பிள்ளையாய் ஈன்ற மாதா, பிதாவை வணங்குகிறோம் அறியாமை இருளில் மூழ்கிக் கிடந்தவன் கண்களை திறந்த மேலோனாகிய குருவை வணங்குகிறோம். ''சபரிமலை ஸ்ரீ ஐயப்பன் விரத மஹத்துவம்'' எனும் ஸ்ரீ ஐயப்பன் புகழ்பாடும் இந்நூலை வெளியிட வழிக்காட்டியாகத் திகழ்ந்த மதிப்புக்குரிய குருநாதர் உயர்திரு. நா. தர்மலிங்கம் ஐயப்பன் அருள்வாரி (குருசுவாமி இராமேஸ்வரம்) அவர்கள் நல்லாசியுடன் அவர் பாதம் பணிந்து உங்கள் முன் சமர்ப்பிக்கிறோம்.

கடந்த இருபத்தொரு ஆண்டுகளாக தொடர்ச்சியாக பெருவழிப் பாதையில் பல நூற்றுக்கணக்கான ஐயப்பனடியார்களை அவனருளால் அழைத்துச் சென்று மகரஜோதி கண்டுவரும் பாக்கியம் பெற்றவர். சோதனை வரினும் வேதனை தரினும் நற்போதனைப் படி நடந்து சாதனை பல புரிந்துவரும் எங்கள் குருநாதர் இளமை குன்றாத மணிகண்டன் அன்பில் சிறந்தவர்; பண்பில் உயர்ந்தவர். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு நிறைந்த தர்மதேவன். இந்த தேவன் காட்டிய வழியே இன்று இலங்கையில் பல நூற்றுக்கணக்கான ஐயப்பனடியார்கள் சபரிமலை செல்கின்றனர்.

இலங்கையின் பல பாகங்களில் ஐயப்பன் வழிபாட்டு ஸ்தலங்களில் அவன் நாமம் ஒலிக்கின்றது. கடந்த 15 வருடங்களாக புனித யாத்திரையை மேற்கொண்டுவரும் தீர்த்த யாத்திரைக் குழு 16ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைத்துள்ளது. கொழும்பு மாநகரில் ஐயப்பன் புகழ் பரவிட மேற்கொண்ட முயற்சி திருவினையாகியதை எண்ணி மகிழ்வடைகிறோம்.

தலைநகரில் மட்டுமின்றி மலைநாட்டிலும், நீர்கொழும்பு போன்ற இடங்களிலும் புகழ்பரவி வருகிறது. ஐயப்பன் இல்லம் என்று ஆரம்பித்த சபரிமலை தீர்த்த யாத்திரைக் குழு இன்று அகில இலங்கை ஐயப்ப சேவா சங்கம் என உருக்கொண்டிருப்பது ஸ்ரீ ஐயப்பனின் கருணையே. ஆன்மீக வழியில் பற்பல சேவையாற்றி வரும் சங்கத்தினரின் சேவை மென்மேலும் வளர எங்கள் குருநாதர் ஆசி வேண்டி பிராத்திக்கிறோம்.

**சபரிமலை தீர்த்த யாத்திரைக் குழுவினர்**

— எல்லாப் புகழும் எங்கள் குருநாதருக்கே —

ஓம் குருவிற்கும் குருவே சரணம் ஐயப்பா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொழும்பு மௌனாச்சிரம
**சுவாமி உமா சங்கர்**
அவர்களின் ஆசியுரை

சனாதன தர்மத்திலே ஆலய வழிபாடு மிகவும் முக்கிய பங்கினை வகிக்கின்றது. அதிலும் தீர்த்தங்களுக்கும், தலங்களுக்கும் யாத்திரை செல்லுதல் மிகவும் சிறப்பு வாய்ந்த அம்சமாக விளங்குகின்றது.

உளவியல் ரீதியில் யாத்திரையினை ஆராயும் பொழுது மனதினிடைய திருப்தியும், பூரணத்துவமும், குதூகலமும் வெளிப்படுகின்றது. இதனால் மனதில் இருந்து சாந்தமான, தூய்மையான எண்ண அலைகள் வெளிபட்டுத் தன்னையும் தன்னைச் சார்ந்த சூழலையும் சாந்தமாக்கும்.

ஆன்மீக நோக்கில் ஆராயும் பொழுது நாம் முன்பு செய்த, செய்கின்ற, செய்யவுள்ள வினைகளாகிய சஞ்சிதம், ஆகாமியம், கர்மம் ஆகியன எம்மை விட்டு விலகுவதாகக் கருதப்படுகிறது. மேலும் தூய சிந்தையுடன் விரதம் இருந்து மேற் கொள்ளும் யாத்திரை ஆத்மாவிற்குப் பரிபூரணத்துவமான நிலையையும், இறைவனின் திருவருட் கடாட்சத்தையும் வழங்கும்.

இந்த வகையில் சபரிமலை ஐயப்பனின் பக்தர்கள், அடியவர்கள் மேற்கொள்ளும் புனித யாத்திரை சிறப்பாக அமையட்டும் என இறைவனை வேண்டுகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ ஐயப்பன் இல்லம் ஸ்தாபகர்கள்



க. ரவீந்திரக்குமார் சாரதாமணி அம்மாள் ஈஸ்வரன்

# அன்டினோரை ஆட்கொண்டருளும் ஸ்ரீ ஐயப்பன் இல்லம்

மாதா பிதா குரு தெய்வம் என்பது ஆன்றோர் வாக்கு. பெற்றவளுக்கு மகன் குருவாகிறான், இது ஐயப்பன் வாக்கு. நான் பெற்ற மகன் எனக்கு குருவாக நின்று சபரிமலை ஐயனை காணச் செய்து அவனுக்கோர் இல்லம் அமைக்க வேண்டியதின் நோக்கை திறம்பட நிறைவேற்றிய பெருமகன் ஈஸ்வரனையும், உறுதுணையாக நின்று அல்லும் பகலும் சேவையாற்றி மறைந்த விசாலாட்சி அம்மாளையும் நினைவு கூற விரும்புகிறேன்.

கொழும்பு மாநகரில் ஆரம்பித்த ஐயப்பன் வழிபாடு இன்று அகில இலங்கையிலும் பரவி பல நூற்றுக்கணக்கான அடியார்கள் விரதம் அனுஷ்டித்து சபரிமலை செல்வதை காணும்போது மனம் பூரிப்படைகிறது.

வாழ்க ஐயப்பன் நாமம், வளர்க சங்கத்தின் சேவை.

சாரதாமணி அம்மாள்

ஐயப்பன் இல்லம்
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கப்பித்தாவத்தை ஸ்ரீ கைலாசநாத தேவஸ்தான பிரதம குரு ஸ்ரீ வத்ஸம் சிவாச்சார்ய திலகம் ஜோதிச கலாநிதி சிவஸ்ரீ கே. பீ இராமநாத குருக்களின் ஆசிச் செய்தி

''மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்து ஒழித்து விடின்''

- திருவள்ளுவர்

அகில இலங்கை ஐயப்ப சேவா சங்கத்தின் சபரிமலை தீர்த்த யாத்திரைக் குழுவானது பல வருடங்களாகத் தொடர்ந்து சபரிமலை தீர்த்த யாத்திரை செய்து வருவதை நாம் அறிவோம். பல சங்கங்கள் - பல அமைப்புகள் இருக்கின்ற போதிலும் இந்தச் சங்கமானது வீண் ஆடம்பரமின்றி ''நிறை குடம் தழம்பாது'' என்பதற்கு ஒப்ப சேவை செய்து வருவதைக் கண்டு மிகவும் சந்தோசப்படுகின்றேன்.


இச் சங்கத்தின் சேவையின் ஒரு பகுதியாக வருடந்தோறும் வெளிவரும் ஐயப்பன் மலர் இலங்கை வாழ் மக்களிடையே ஐயப்ப சுவாமியைப் பற்றிய பக்தியை வளர்க்க உறுதுணையாக உள்ளது.

பதினெட்டுப் படிகளைக் கொண்டது சபரிமலை; அந்த படிகளைப் போல் எட்ட நிற்கும் அட்டமா சித்தி தரும் பதினாறாவது பம்பா மலராக, இவ்வாண்டின் சிறப்பு மலர் அரிய பொக்கிஷங்களுடன் மலர்ந்து ஐயப்பனின் மணம் பரப்பவுள்ளது மகிழ்ச்சிக்குரியதே!

ஐயப்பன் அருள் சுரக்கும் இம் மலர் ஐயப்பனுடைய பாதாளவிந்தத்தில் சமர்ப்பிக்கப்படும் மலராக மலர்ந்து, இந்தசபரிமலை யாத்திரைக்குழு மேலும் மேலும் ஐயப்பன் பக்தர்களை சபரிமலைக்குக் கூட்டிச் சென்று, ஐயப்பனின் தரிசனம் காண வைப்பது அரும் பெரும் தொண்டாகும்.

இத் தொண்டு மேலும் வளர்ந்து சிறப்படைய, எல்லாம் வல்ல ஸ்ரீ கைலாசநாத சுவாமியைப் பிரார்த்திக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இந்துசமய கலாச்சார தமிழ் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

## மாண்புமிகு பி. பி. தேவராஜ்

## அவர்களின் ஆசிச்செய்தி

அகில இலங்கை ஐயப்ப சேவா சங்கத்தின் ஆதரவில் ஸ்ரீ சபரிமலை ஐயப்ப பக்தர்கள் வருடம் தவறாமல் நடாத்தி வரும் மண்டல பூஜை, பதினாறாவது தடவையாக நிறைவேறுவதையொட்டி வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு எனது வாழ்த்துகளை அளிப்பதில் பெருமகிழ்வு கொள்கின்றேன்.


இலங்கையின் கடந்த பல ஆண்டுகளாக ஐயப்பன் அடிபணியும் பக்தர்கள் கூட்டம் பெருகிக்கொண்டு இருப்பது மிகுந்த மகிழ்ச்சி தருகின்றது. கலியுக தெய்வம் என்றும், கண்கண்ட தெய்வம் என்றும் போற்றப்படுகின்ற ஸ்ரீ ஐயப்பனின் மகிமையை உணர்ந்து பலர் சபரிமலை யாத்திரையை தவறாது மேற்கொண்டு வருகின்றனர். மலையேறவும், மகரஜோதியின் தரிசனத்தைக் காணவும், கூடும் லட்சக்கணக்கான பக்தர்களுடன் இலங்கை பக்தர்களும் இணைந்துக் கொள்கின்றனர்.

ஐயப்ப பக்தர்களின் விரத அனுஷ்டானங்கள் மிகுந்த கட்டுப்பாடு நிறைந்தவை. உடலும், மனமும் தூய்மை பெற மிகக் கடினமான ஒழுக்க முறைகளை அவர்கள் விரும்பி ஏற்று, விரதகால முடிவில் தமது யாத்திரையை மேற்கொள்கின்றனர். அத்துடன் சகல பொறுப்புக்களையும், ஐயப்பனே சரணம் என ஒப்படைத்துவிட்டு பக்தியுணர்வோடு உலவுகின்ற மனப்பாங்கும் மிகவும் போற்றுதற்குரியது. இங்ஙனம் ஒரு மண்டலம் விரதமிருந்து மலையேறுகின்ற ஐயப்பப் பக்தர்கள் பெறுகின்ற ஆன்மீக அனுபங்வகளும், ஒரே நோக்கத்திற்காக சபரியில் ஒன்றுகூடும் லட்சக்கணக்கான பக்தர்கள் பெறும் தெய்வீக அமைதியும் அவர்தம் வாழ்க்கையை மேலும் பயன்மிக்கதாக்குகின்றன.

இலங்கையின் தற்போது பெருமளவு இளைஞர்கள் ஐயப்பன் அருள் வேண்டி விரதம் மேற்கெள்வது மிகுந்த மகிழ்ச்சிக்குரியது. இங்ஙனம் இளமையிலேயே கட்டுப்பாடுகளோடும், தெய்வீக அனுபவங்களோடும் வாழ்வை செம்மைப்படுத்தி கொள்கின்றபோது எதிர்காலம் நம்பிக்கை மிக்கதாகும்.

அந்தவகையில் இளைஞர்களையும், ஆன்மீக வழியில் நெறிப்படுத்தி ஐயப்பன் புகழ் பரப்பும் பெரும் பணியை மேற்கொண்டுள்ள அகில இலங்கை ஐயப்ப சேவா சங்கதினரின் நற்பணிகள் சிறக்கவும், ஐயப்ப பக்தர்களின் தெய்வீக நோக்கங்கள் நிறைவேறவும், மேலும் பல மண்டல பூஜைகள் நிறைவேறவும் மனமார வாழ்த்துகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கைத்தொழில் இராஜாங்க
அமைச்சர் மாண்புமிகு
எம். எஸ். செல்லச்சாமி
அவர்களின் ஆசிச் செய்தி

அகில இலங்கை ஐயப்ப சேவா சங்கத்தினர் 16வது தடவையாக இம்முறையும் ஸ்ரீ ஐயப்ப சுவாமிக்கு மண்டலாபிஷேகம் நடத்துகிறார்கள்.

சமாதானத்திற்கு சவாலும், அமைதிக்கு அச்சுறுத்தலும் விடுக்கப்பட்டு மனித சமுதாயம் செய்வதறியாது திகைத்து நிற்கும் இன்றைய காலகட்டத்தில் இறைவழிபாடு ஒன்றே நிம்மதியையும், ஆறுதலையும் தரமுடியும்.

இதன் காரணமாகவே நமது சான்றோர்கள் ''திக்கற்ற மக்களுக்கு தெய்வம் துணை'' என்று கூறி வைத்தார்கள். வன்செயல்களும், போர் வெறியும் வியாபித்திருக்கும் இன்றைய சமுதாயத்திற்கு நல்வழிகாட்டி, அறநெறியை ஓங்கச் செய்ய இது போன்ற இறைபணிகள் நாடெங்கும் முனைப்புடன் மேற்கொள்ளப்பட வேண்டும். நாட்டிற்கும், மக்களுக்கும் இறையருள் கிட்டட்டும்; எல்லா மக்களினதும் இதயங்களில் அன்பு மலரட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மேல்மாகாணசபை உறுப்பினர்
**மாண்புமிகு திருமதி**
**வேலம்மாள் செல்லச்சாமி**
அவர்களின்
வாழ்த்துச் செய்தி


இறைவன் பெயரால் மனிதர்கள் ஒன்றுபடும் புனிததலமாக ஸ்ரீ சபரி மலை விளங்கி வருகிறது. மனிதனை நல்வழிப்படுத்தி மனஅடக்கத்தை கொடுத்து புனிதனாக மாற்றியமைக்க ஸ்ரீ ஐயப்பன் வழிபாடு இன்றியமை யாதது. இவ் இக்கட்டான காலகட்டத்தில் சாந்தி, சமாதானம் நிலவ ஸ்ரீ ஐயப்பனை ஒன்றுகூடி துதிப்போமாக.

ஸ்ரீ ஐயப்பன் புகழை பாரத பூமி நன்கறியும்; இலங்கையிலும்அவன் அருள்பெற அகில இலங்கை ஐயப்பா சேவா சங்கம், சபரிமலை தீர்த்த யாத் திரைக் குழு பணியாற்றி வருவதை எம்மால் காணக்கூடியதாக இருக்கிறது.

இவ்வருடம் இக்குழுவினால் மண்டல பூஜையை முன்னிட்டு வெளிவரும் சபரிமலை ஸ்ரீ ஐயப்பன் விரதமஹத்துவம் எனும் சிறப்பு மலர் மணங்கமள எனது நல்வாழ்த்துக்கள்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



அகில இலங்கை ஐயப்ப சேவா சங்க ரஷகரும்
ஜெயந்திநகர் ஸ்ரீ சிவசுப்பிரமணிய கோவில்
தர்மகர்தாவும், பிரபல தொழிலதிபருமான

**அருட்செல்வர்**

***V. T. V.* தெய்வநாயகம் பிள்ளை ஐயா**

அவர்களின் ஆசிச்செய்தி


கலியுகத்தில் பன்னிரு கையானாகிய திருமுருகவேலவனும், பூதநாதனாகிய ஸ்ரீ ஐயப்ப சுவாமியும் அருட்பெரும் ஜோதியாய் விளங்குகின்ற தெய்வமென்பது யாவரும் அறிந்த உண்மை.

இவ்விரு மூர்த்திகளுமே கலியுக வரதன் எனும் திருநாமத்துடன் மிளிருகின்றனர். ஐயப்பனைக் காணச் செல்லும் அடியவர்கள் விரத அனுஷ்டானங்களை தவறாது கடைப்பிடிக்க வேண்டியது தலையாய கடமையாகும்.

இப்புனிதமான யாத்திரையை கடந்த 15 ஆண்டுகளாக மேற்கொண்டு வரும் சபரிமலை தீர்த்த யாத்திரைக் குழுவின் பணி பாராட்டத்தக்கது. மென்மேலும் பணிகள் சிறப்புற எல்லாம்வல்ல எம்பெருமான் முருகன் துணை இருப்பாராக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சத்தியமே ஜெயம்
ஐயப்பனே சரணம்

''பிறவிப் பெருங்கடலை நீந்துவார்
நீந்தார் இறைவன் அடிசேரா தார்',

இறைவனடி சேர்ந்தார் மட்டுமே பிறவிப் பெருங்கடலை நீந்தியவர்கள் என்று வள்ளுவர் கூறுகிறார். பிறவி என்றால் யாது? மனிதன் பிறக்கின்றான்; இறக்கிறான்; இது இயற்கை நியதி. இந்த இடைவெளி காலத்தில் உன்னால் உனக்கும், மற்றவர்களுக்கும் என்ன பயன் என்பதே.

நீ சில காரியங்களை சாதிக்க நினைக்கிறாய். அதை அடைவதற்கு சில யுக்திகளும் சக்திகளும் அதிகமாகத் தேவைப்படுகிறதுசுருங்கக்கூறின் மன அடக்கம் தேவை. அதை நிலைப்படுத்த, முடியுமாயின் இறைவனை நீ நேரில் காண்கின்றாய். இதை அடைவதற்கு ஸ்ரீ ஐயப்பன் சன்னிதியை நாடுவதும் ஒரு வழி. இவ்வழியில் பக்தர்களுக்கு அல்லது ஐயப்பன் மொழியில் கன்னி சுவாமிமாருக்கு பெரும் தொண்டு செய்து வருபவர் நம் குருசுவாமி க. இரவீந்திரகுமார் அவர்கள்.

15 வருட காலத்து சேவையையும், அனுபவங்களையும் வருடந்தோறும் தொகுத்து அதில் ஐயப்பன் புகழாரம் பாடி எமது கரங்களில் சிறப்புமலராக தவழச் செய்கிறார். இவ் வருடம் சபரிமலை ஸ்ரீ ஐயப்பன் விரதமஹத்துவம் எனும் நூலை வெளியிட ஆர்வமூட்டி குருசுவாமிக்கு உறுதுணை புரிந்த பக்தர்களுக்கும், இந்நூலை இலவசமாக வழங்க விளம்பரங்கள் கொடுத்துதவிய வணிகப் பெருமக்களுக்கும் உளங்கனிந்த நன்றியை சமர்ப்பிக்கின்றேன்.

வாழ்க சங்கத்தின் பணி. வளர்க தீர்த்த யாத்திரைக் குழுவின் தொண்டு.

P. R. முத்துசாமி ரஷகர் - அ. இ. ஐ. சே. ச.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஓம் பிரபோ சத்தியஸ்வரூபா

உலகின் எல்லாப் பகுதியிலுமிருந்துஆண்டு தோறும் ஐயப்பனை தரிசிக்க மலையேறி மக்கள் செல்வது அவர்கள் அடையும் ஆத்மஞானம், பிரயானந்தம், மன நிறைவு இவைதாம், சமத்துவம் நிலைக்கும் சபரிமலைக்கு நீங்களும் வாருங்கள். கலியுக வரதனைக் காண நமது மனமும், உடலும் சில புனிதப்பயிற்சிகளைமேற்கொள்ள வேண்டும். ஒரு மண்டலம் சம்சார பந்த சிந்தனையின்றி, தவ வாழ்க்கை வாழும்போது உடலிலே ஒரு புத்துணர்வும் சத்திய நிறைவும் ஏற்படுகின்றது. இந்த அனுபவமே ஆண்டுதோறும் மலைக்குச் செல்ல எம்மைத் தூண்டுகிறது.

கால் ஊனமுற்ற எனக்கு ஐயப்பன் கடந்த ஏழு வருடங்களாக (சிறு வழியாக) ஐயனை தரிசிக்கும் பாக்கியத்தை தந்துள்ளான். மானிடனாக பிறந்த நாம் தெய்வீக அனுக்கிரகம் வேண்டுமாயின், அது ஐயப்பனிடத்திலே பெறலாம்.

இந்நூலை வெளியிடும் இலங்கை ஐயப்ப சேவா சங்கம் இதுவரை ஆயிரக்கணக்கில் பக்தர்களை எளிய முறையில் கடந்த 15 வருடங்களாக மலைக்கு அழைத்துச் செல்கிறார்கள். சபரிமலைதீர்த்த யாத்திரைக்குழு குருசாமி க. ரவீந்திரக்குமார் மென்மேலும் ஐயப்பன் புகழ் பரப்ப அனைவரும் பிரார்த்திப்போமாக.

- ராஜு சிவராமன் ஐயப்பனடிமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அகில இலங்கை ஐயப்ப
சேவா சங்க ரஷ்கரும்
தொழிலதிபருமாகிய
உயர்திரு சண்முகம்
அவர்களின் ஆசிச்செய்தி

"ஒன்று பட்டால் உண்டு வாழ்வு
ஒற்றுமை நீங்கில் அனைவருக்கும் தாழ்வு" என்றார் பாரதி.

மனிதனை மனிதனாக வாழவைக்க இன்று இன்றியமையாதது ஐயப்பன் வழிபாடு, சாதிமத பேதமின்றி சமத்துவத்தை நிலைநாட்ட சபரிமலை ஸ்ரீ ஐயப்பன் புகழ் இலங்கையிலும் வேர் ஊன்றி படர தொடங்கி விட்டது. வருடாந்தம் மலைக்குச் செல்லும் ஐயப்பன் அடியார்களும் அதிகரித்து வருகின்றனர். ஐயன் பெயரால் பல சேவையை ஆற்றிவரும் அகில இலங்கை ஐயப்ப சேவா சங்கம் சபரிமலை தீர்த்த யாத்திரைக் குழுவின் பணி மேலும் பன்மடங்கு உயர வாழ்த்துகிறேன்.

சுஜாதா டெக்ஸ்டைல்ஸ்
கொழும்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஸ்ரீ ஐயப்பன் அருள் கிட்டட்டும்

சபரிமலை ஸ்ரீ ஐயப்பனுடைய மகிமையை பாரத தேசம் நன்கறியும். இப்போது இலங்கையிலும் ஐயப்ப வழிபாடு முக்கியத்துவம் பெறத் தொடங்கிவிட்டது. கேட்டவர்க்கு கேட்டவரமருளும் கீர்த்திமிகு தெய்வமான ஐயப்பனை வழிபடும் இலட்சக்கணக்கான அடியவர்களில் இலங்கை அடியவர்களும் இன்றியமையாத இடத்தை பெற்று வருகின்றனர். இலங்கையில் ஐயப்ப வழிபாடு முக்கியத்துவம் பெறுவதற்கு அகில இலங்கை ஐயப்ப சேவா சங்கமும் (சபரிமலை தீர்த்த யாத்திரைக் குழு) முக்கிய காரணமாகும்.

அகில இலங்கை ஐயப்ப சேவா சங்கம் ஆண்டு தோறும் இலங்கையிலிருந்து அடியவர்களுடன் சபரிமலை தீர்த்த யாத்திரை மேற்கொள்ளும் அதேவேளையில் ஐயப்பன் புகழ்பாட மலரையும் வெளியிட்டு வருவது சிறப்புக்குரியது. இவ்வருடம் ''சபரிமலை ஸ்ரீ ஐயப்பன் விரதமஹத்துவம்'' என்ற பெயரில் மலரை வெளியிடும் தீர்த்த யாத்திரைக் குழுவினரது பெருமுயற்சி போற்றுதற்குரியது.

எங்கும் ஐயப்பன் எதிலும் ஐயப்பன் என்ற உணர்வு பூர்வ நிலையில் இறைவனுடன் சங்கமமாகும். ஸ்ரீ ஐயப்பன் அடியார்கள் எல்லா வேறுபாடுகளில் இருந்தும் விடுபட்டு சமரச நெறியை வளர்த்துக் கொள்கிறார்கள். உளத்தூய்மையுடன் புறத்தூய்மையும் மிக்கவர்களாக சபரிமலை சென்று ஜோதி தரிசனம் காண்பது மிக ஆனந்தமயமானது, அற்புதமயமானது. அந்த இறையருளே அனுபவிப்பதற்கும் பூர்வஜென்ம புண்ணியம் செய்திருக்க வேண்டும்.

இலங்கையிலிருந்து ஸ்ரீ ஐயப்பன் அடியார்களை ஒன்று திரட்டி அவர்களை வழிபாட்டில் ஒன்றிணைப்பதுடன், யாத்திரைக்கும் அழைத்துச் செல்லும் அகில இலங்கை ஐயப்ப சேவா சங்கத்தின் நல்ல முயற்சி தொடரவேண்டும். அவர்களது மலர் மிகச் சிறப்பாக அமைந்து அனைவருக்கும் ஸ்ரீ ஐயப்பன் அருள்கிட்ட பிரார்த்திக்கிறேன்.

**கண. சுபாஷ்சந்திரபோஸ்**
சிரேஷ்ட உதவி ஆசிரியர்
வீரகேசரி - கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகில இலங்கை ஐயப்ப சேவா சங்கம்

## நிர்வாகக் குழு அங்கத்தவர்கள்



தலைவர் :

N. நிமால் கணபதிராஜ்



உப தலைவர் :

K. கணேஷமூர்த்தி



செயலாளர் :

க, ரவீந்திரகுமார்



உப செயலாளர் :

S. ரவீந்திரகுமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகில இலங்கை ஐயப்ப சேவா சங்கம்

## நிர்வாகக் குழு அங்கத்தவர்கள்



நிர்வாக காப்பாளர் :

**R.** விஜயமோகன்



காப்பாளர் :

**A** ரமேஸ்



பொருளாளர் :

**P.** சுபரமணியம்



உப பொருளாளர் :

**V.** விஜயமனோரஞ்சன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சங்க ஆலோசகர்

**N. அம்பலவாணர்**



அகில இலங்கை ஐயப்ப சேவா சங்கம்
நீர்கொழும்பு கிளை அமைப்பாளர்

**S ரவிச்சந்திரன்**



அகில இலங்கை ஐயப்ப சேவா சங்கம்
மாத்தளை கிளை அமைப்பாளர்

**V. சந்திரசேகரம்**

சங்க செயற்குழு உறுப்பினர்கள்



**T. சிவராஜன்**



**S. S. குமரன்**



**T. நவரட்ணராஜா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ ஐயப்பன் ஆலய திருப்பணி நிறைவேற்றுக் குழுவினர்கள்



தலைவர்
ஸ்ரீ கணேசன்



நிர்வாகக் காப்பாளர்
V. அனவர்தம்



செயலாளர்
R. விஜயமோகன்



உப தலைவர்
மயில்வாகனம்



காப்பாளர்
சக்தி விக்னேஸ்வரன்



உப செயலாளர்
P. சுப்ரமணியம்



பொருளாளர்
N. நிமால் கணபதிராஜ்



உப பொருளாளர்
S. விநாயக சுந்தரம்



பொதுஜன தொர்பு
S சிதம்பரம்



S. ரவீந்திரன்



N. கணேசன்



T. சண்முகநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சபரிமலை தீர்த்த யாத்திரைக் குழுவினர் (91 / 92)



சபரிமலை தீர்த்த யாத்திரைக் குழுவினர்
நீர்கொழும்பு கிளை (91 / 92)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகில இலங்கை ஐயப்ப சேவா சங்கம்

ஸ்ரீ ஐயப்பன் ஆலய திருப்பணி நிறைவேற்று அங்கத்தவர்கள்



ஆலய செயற்குழு உறுப்பினர்கள்



S. S. மணியம்



K. P. நாதன்



R நாகலிங்கம்



R. ராஜேந்திரன்



K. சுப்பிரமணியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



With Best Compliments From

**SUJATHA TEXTILES**

DEALERS IN TEXTILES

**82, 3rd Cross Street,**
**Colombo 11.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதனை தெய்வமாக்கும்
# சபரிமைல ஸ்ரீ ஐயப்பன்
# விரதமஹத்துவம்

எங்கும் நிறைந்தவன் இறைவன். அவனை அகக் கண்ணால் இதய சுத்தியுடன் மட்டுமே காண முடியும். இப்பூமியில் மனித உயிர்களாகிய நாம், எண்ணில் காலமாக பிறப்பதும் இறப்பதுமாக இருக்கிறோம். எல்லாம் பிறப்பும் பிறந்து இளைத்துவிட்டோம் நாம் பெறாத உயிர்களுமில்லை - எம்மைப் பெறாத உயிர்களுமில்லை.

உயிர்கள் எங்கிருந்து பிறக்கின்றன? ஏன் பிறக்கின்றன? ஏன் இறக்கின்றன? பின் எங்கு செல்கின்றன? விஞ்ஞானிகூட கண்டிலர்.

மெய்ஞானி கூறுகிறார் உயிர் புல்லாகி, பூடாய், புழுவாய், மரமாகிப் பல்வுருவமாகிப், பறவையாய், பாம்பாய், கல்லாய், மனிதராய், பேயாய், கணங்களாய், வல்லசுரராகி, முனிவராய், தேவராய் இத் தாவர சங்கமத்துள் எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்துவிட்டோம் என்று. விஞ்ஞான யுகத்தில் அஞ்ஞானம் போக்கி மெய்ஞ்ஞானத்தை சீர்தூக்கி பார்க்குமிடத்து அகண்டாகரமாய் எங்கும் நிறைந்து விளங்கும் ஐயப்பன் ஸ்ரீ பூதநாதன் எல்லா உயிர் உடம்பிலும் கோயில் கொண்டெழுந்தருளியுள்ளார்.

நாம் பசி, தாகம், சோர்வு இவைகளை இலட்சியம் செய்யாது வானலாவிய மரங்கள், முட்கள், கொடிகள், கற்பாறைகள், மேடு பள்ளங்கள் மட்டுமன்றி விஷ ஜந்துக்கள், மிருகங்கள் நிறைந்த வனத் தாண்டி இறைவன் திருச்சன்னதியை சென்று பிம்பத்தில் சன்னித்யமாகியிருக்கும் பகவானை தரிசித்து மகிழ்கிறோம்.

நம் அகத்துள் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் சபரிநாதனைக் காண வேண்டுமாயின் ஆசைத் தளைகள், அகங்காரம் என்ற மரங்கள், தீய எண்ணங்கள் என்ற மிருகத்தையும், ஆணவம், மாயை, காமம், என்ற மாயவனத்தை கடந்தால்தான் ஐயன் ஐயப்பனைக் காணலாம்.

இப்பூவுலகில் பகவான் ஐயன் அவதரித்து நீ என்னைக் காண வேண்டுமாயின் பற்றற்ற கருமம் செய்; மனம் மாசு பெறாது; தூய மனதில் ஞானம் ஒளிரும் என்று கூறினார்.

ஞானமே வாழ்க்கையின் இலட்சியம் நற்கருமத்திற்கு இடையூறு விளைவிப்பது காமம், வெகுளி, பேராசை குரோதம், ஆணவம் முதலியன. இவற்றை வெல்ல "சுவாமியே சரணம் ஐயப்பா" என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாரக மந்திரத்தை தூய மனதுடன் ஓதி அவனுடைய அருட்கடாச்சத்தை பெற வேண்டும்.

ஐயனைக் காண ஒரு மண்டலம் நோன்பு இருக்க வேண்டும் என்பது தொன்று தொட்டு வரும் மரபு. நோன்பு மனிதனை பக்குவப்படுத்துகிறது, மாலை அணிந்துகொள்வது. நமக்கு நாமே விரும்பி விதிக்கும் கட்டுப்பாடே விஞ்ஞான யுகத்திற்கு தேவையான வற்றை மெய்ஞ்ஞானிகள் அன்றே கூறியிருக்கிறார்கள்.

வனங்களைக் கடந்து சன்னிதானத்தை அடையும் பொழுது பதினெட்டு படிகளை தாண்டியே செல்ல வேண்டும். இந்த 18 படிகளுக்கு தத்துவம் புலன் ஐந்து, பொறி ஐந்து, பிராணன் ஐந்தும், மனம், புத்தி, அகங்காரம் இவற்றைக் கடந்தாலே ஐயனைக் காணலாம்.

## ஏன் ஒரு மண்டலம் நோன்பு அனுஷ்டிக்க வேண்டும்?

மனிதனை ஆட்டிப்படைக்கும் பஞ்சேந்திரியங்களாகிய மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிவவை தன் இஷ்டம் போல் அலை பாய விடாமல் கட்டுப்படுத்தவே ஒரு மண்டல நோன்பு; கடும் சுகவீனமுற்றவருக்கு வைத்தியர் தொடர்ந்து மருந்து கொடுத்து சுகப்படுத்துவார் அதுபோலவே இந்த நீண்ட விரதமும் அமைகிறது.

இந்த பஞ்சேந்திரியங்கள் நல்லவற்றையே செய்ய இறைவன் படைத்திருக்கிறான். ஆனால் அவை தன்னிச்சைப்படி உண்ண வேண்டாத உணவுகளை உண்டு; மனம் கொண்டு பார்க்கத்தகாத காட்சிகளைப் பார்த்து, முகரத்தகாத மணங்களை முகர்ந்து, அளவில்லா சப்தங்களை கிரகித்து, கடும் சொற்களை பேசி மனதை சஞ்சலப்படுத்துகிறது. அதுமட்டுமன்றி ஆணவத்தால் மற்றவர்களுக்கு தீங்கு விளைவிற்கும் சொற்களை பிரயோகிக்கிறான். எல்லாவற்றை வயப்படுத்தி இந்த நோன்பு அனுஷ்டிக்கப்படுகிறது.

ஐயனைக் காண வேண்டுமாயின் தேகபலம், பாதபலம், மட்டுமன்றி மனோபலத்தைப் பெற வேண்டும். தேக ஆரோக்கித்திற்கு பிரமச்சரியம் இன்றியமையாதது. மேற்கூறியவற்றை செவ்வனே கடைப்பிடித்தால் ஐயன் பரிபூரண பலத்தையும் தந்திடுவான் என்பதில் ஐயமில்லை.

## துளசிமணி மாலை எதற்காக அணிய வேண்டும்?

வீட்டில் துளசிச் செடியை பக்குவப்படுத்தி வளர்க்கிறோம். வசதி உள்ளவர்கள் வீட்டில் துளசி மாடத்தை அமைத்துப் பூஜிப்பார்கள். இதற்கு ஒரு தத்துவம் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மை ஈன்றெடுத்தவள் தாய். துளசி என்பது மஹாலட்சுமியின் மறு வடிவமே, துளசித்தாய் இருக்குமிடத்து நாராயணன் முதல் தேவர் வரை குடி கொண்டிருப்பார்கள். தீட்டு, துடக்குகள் விலக்கபட்டுள்ளது. எனவே ஐயப்பன்மார் இத்துளசிமாலையை அணிவதே சாலச் சிறந்தது. அதுமட்டுமன்றி துளசி நீரை தினமும் அருந்தி வந்தால் உடல் பிணி நீங்கிச் சுகமடைவோம். துளசி மாலையை அணிந்தவுடன் எம்மையறியாமலே ஓர் புத்துணர்ச்சி பெறுவோம். அதுமட்டுமன்றி காட்டு மிருகங்களிலிருந்தும், கொடிய விஷ ஜந்துக்களிலிருந்து காப்பாற்றப்படுகிறோம். என்பதையும் மறக்கலாகாது. துளசித்தாயானவள் துணையிருக்கும் போது மனக் கலக்கம் எதற்கு?

## ஏன் புலால் உண்ணக் கூடாது ?

புனிதத்தாயின் மாலை கழுத்தில் இருக்கிறது. வருடத்தில் 300 நாட்கள் நாம் விரும்பியதை செய்கிறோம். மிகுதி 65 நாட்களே அடுத்துவரும் 300 நாட்களை எப்படி வாழப்போகிறோம் என்பதின் பரீட்சையே விரதம்.

தாவர போசனம் சாத்வீக உணவு. புலால் காம உணர்ச்சிகளைத் தூண்டக்கூடியது. அத்துடன் வெங்காயம், பூடு, காரம் முதலியவற்றையும் தவிர்த்துக் கொள்ளவேண்டும். ஏனெனில் இந்திரியங்களில் சேஷ்டைகளினால் விரத பங்கம் ஏற்பட வாய்ப்புண்டு, எனவே புலால் உண்ணுவதால் ஐயப்ப விரதத்திலே முக்கியமாக கருதப்படும் பிரமச்சரியத்திற்கு ஊறுவிளைவிக்கும் ஆதலால் தவிர்க்க வேண்டியது ஐயப்பன்மார்களின் கடமைகளில் ஒன்றாகும்.

## இருவேளை எதற்காக நீராட வேண்டும் ?

காலையில் சூரிய உதயத்திற்கு முன்பும், சூரிய அஸ்தமனத்திற்கு பின்பும் நீராடுவது சாலச் சிறந்தது. உடலில் உள்ள உஷ்ணம் கட்டுப்படுத்தப்பகிறது தேகம் பக்குவப்படுகிறது. மார்கழி மாத பனியும் குளிரும் காட்டில் சற்று அதிகமாவே இருக்கும் எனவே இருவேளை நீராடப் பழகிக் கொண்டால் எக்குளிரையும் எம்மால் தாங்கிக்கொள்ள முடியும்.

## ஏன் கறுப்பு ஆடை அணியவேண்டும் ?

கறுப்பு நிற ஆடை மங்களகரமற்றது என்றும் துக்க காரியங்களுக்கும் சிலர் அணிகின்றனர். என சிலர் அவலட்சணமாக கருதுகின்றனர். ஐயப்பனுக்கு உகந்தது கறுப்பு நிறமே; கொடிய மிருங்கள் வாழும் காட்டில், கறுப்பு அணிந்த ஐயப்பன்மார்கள் பளிச் சென்று தெரிவதில்லை. இருள் சூழ்ந்த வேளையில் நாமும் இருளா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவே இருப்போம். அடுத்ததாக கருநிற ஆடை அணிந்தவர் ஐயப்பன்மார்கள் என்று தெரிந்துகொண்டு வீட்டுக்கு விலக்கான பெண்கள் தாமாவே ஒதுங்கிக்கொள்வார்கள்.

**படுக்கை தலையணையை நீக்கி சிறு துண்டை மட்டும் தரையில் விரித்து துயலவேண்டும் ?**

மலைக்கு இவற்றை கொண்டு செல்ல முடியாது. அத்துடன் தலையணையும், படுக்கையும் சிந்தனையை திசை திருப்பி மனக் கிலேசம் ஏற்பட்டு விரத பங்கம் ஏற்பட வாய்ப்புண்டு; நம் முன்னோர்கள் படுக்கையிலா உறங்கினார்கள்.

**பாதணி ஏன் அணியக்கூடாது ?**


காடுமலைகளைக் கடக்கும்போழுது பாதணி நல்ல பலனைக் கொடுக்காது. சில வேளைகளில் சறுக்கவும் வாய்ப்புண்டு. அதுமட்டுமின்றி ஐயப்ப பக்தர்களுக்கு ஒரே நியதி ஏழை பணக்காரர், சிறியோர், பெரியோர், உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்பவை ஐயன் சன்னதியில் கிடையாது.

ஆம் கலியுகவரதன் அவதரித்து நமது கவலை கஷ்டங்களை நீக்கி கருணை வடிவமாக சபரிமலையில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ஐயப்ப சுவாமியை தரிசிக்க கடுமையான விரதமிருந்து, இருமுடி தாங்கி காடு மலைகள் எல்லாவற்றையும் கடந்து தரிசன வேட்கையைத் தவிர வேறு ஏதுவுமின்றி, நாவிற்கினிய சரணங்களை முழங்கி அவன் திருவடியை சரணடைவோரை தெய்வமாக்கவல்ல சபரிமலை ஸ்ரீ ஐயப்பன் விரத மஹத்துவம் இன்றியமையாததாகும்.

**மனிதனை தெய்வமாக்கும் சுவாமியே**

**சரணம் ஐயப்பா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




With Best Compliments From

**NAVEEN STORES**

General Merchants, Commission Agents

**149, MALIBAN STREET,**
**COLOMBO 11.**
**Telephone: 436664**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



With Best Compliments From

**NATHIYA JEWELLERS**

**No. 24, KANDY ROAD,**
**NUWARA-ELIYA.**
**Telephone: 052 2320**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சுவாமியே சரணம் ஐயப்பா

# சபரிமலை ஸ்ரீ தர்ம சாஸ்த்தாவாகிய அருள்மிகு ஐயப்பன் வரலாறு

சபரிமலை ஸ்ரீ தர்ம சாஸ்த்தாவாகிய ஸ்ரீ ஐயப்ப சுவாமியின் வரலாறு பலவகையில் கூறிவந்த போதும் அடியேன் அகில பாரத ''ஐயப்ப சேவா சங்க'' வெளியீடான ''சபரிமலையின் இதிகாசம்'' எனும் விரிவான நூலிலிருந்து வரலாற்றைச் சுருக்கமாகத் தொகுத்துள்ளேன். குற்றம் குறைகளிருப்பின் பொறுத்தருள வேண்டுமெனப் பகவானின் பாதம் பணிந்து வேண்டிக்கொள்கிறேன்.

## புராண வரலாறு:

துர்க்கையால் கொல்லப்பட்ட மகிஷாசுரனின் தங்கை, மகிஷி எனும், அரக்கி தன் அண்ணனின் மரணத்தால் கோபமுற்று, தேவர்களைப் பழிக்குப்பழி வாங்க எண்ணி, பிரம்மனைத் தவம் இயற்றி வரம் பெற்றாள். அரிகரசுதனைத் தவிர வேறு யாராலும் தனக்கு மரணம் ஏற்படக்கூடாது எனும் வரம்பெற்று, மகிஷி தேவர்களைக் கொடுமைப்படுத்தினாள். அவளிடமிருந்து தப்பித்து நிலைத்து வாழ எண்ணி அமுதுண்ண விரும்பிய தேவர்களும், பிற அசுரர்களும் சேர்ந்து பாற்கடலைக் கடைந்து இறுதியாக அமுது பெற்றனர் ஆனால், அமுதினைத் தேவர்களிடமிருந்து அசுரர்கள் பறித்துப் பெற்று உண்ணத் தொடங்கினர்.

தேவர்களின் வேண்டுதலுக்கிணங்கிய திருமால் அழகிய கன்னி (மோகினி அவதாரம்) தோற்றம்கொண்டு அசுரர்களை மயக்கி, அமுதினை வாங்கித் தேவர்கள் அனைவருக்கும் பரிமாறினார். பின்னர், இந்தக் கன்னி உருக்கொண்ட திருமாலுக்கும் சிவனுக்கும் பிறந்த திருக்குழந்தைக்கு. தர்மசாஸ்தா எனப் பிரம்மன் பெயர் சூட்டினார். தர்ம சாஸ்தாவின் தோற்றம் சிவ வைணவ ஐக்கியத்திற்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.

அருவ உருவமாய் காலத்திற்கும், குணத்திற்கும் அப்பாற்பட்ட பரம் பொருளின் நியதியின்படி, காரிய காரணங்களுக்காக அரிகரனார் ஐக்கியம் ஏற்பட்டது என்பது ஞானிகளின் கூற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐயப்பன் பூவுலகில் அவதரித்த காலம்:

கேரள ராஜ்யத்தில் நிலையான அரசு வீழ்ந்து, நாடு முழுவதும் கொள்ளையர் ஆட்சி நடந்தது. கொள்ளையரின் தலைவன் உதயன் சபரிமலையில் இருந்த ஸ்ரீ தர்ம சாஸ்தாவின் கோவிலைக் கொள்ளையடித்து மூல விக்கிரகத்தை நாசப்படுத்தி, பூசாரியைக் கொலை செய்து கரிமலைக் கோட்டையில் இராஜ்யத்தை அமைத்தான். மீண்டும் உதயன் படையெடுத்து பந்தளம் அரண்மனையிலிருந்து அரச குமாரியைக் கடத்திச் சென்று தன் பாளையத்தில் சிறை வைத்தான். பூசாரியின் மகன் ஐயந்தன் மீண்டும் சாஸ்தாவை நிர்மாணிக்க வேண்டி, பொன்னம்பலமேட்டில் தவம் செய்தான். அவன் கனவில் சாஸ்தா தோன்றி ''நீ உதயன் பாளையத்திலிருந்து அரசகுமாரியை மீட்டுவந்து, அவளை மணம் புரிந்து கொள்வாயாக! உங்களிருவருக்கும் பிறக்கும் குழந்தை மீண்டும் சாஸ்தாவை நிர்மாணிக்கும்'' எனக் கூறவே, அதுபோல் அரசகுமாரியை ஐயந்தன் மீட்டுவந்து மணம்புரிந்தார். மார்கழித் திங்கள் சனிக்கிழமை உத்திர நட்சத்திரம் பஞ்சமி திதி விருச்சிக லக்கினம் கூடிய நன்னாளில் அழகுமிகு ஆண்மகவு பிறந்தது. ''அக்குழந்தை சாஸ்தாவின் அவதாரமே'' என அசரீரி ஒலித்தது.

(சபரிமலை கோவிலில் முன்பு இருந்த ஸ்ரீ தர்மசாஸ்தா பரசு ராமர் பிரதிஷ்டை செய்த தர்ம சாஸ்தா, மணிகண்டன், ஐயப்பன் அனைத்தும் ஹரிஹர சுதனின் அவதாரமே ஆகும்).

அவதாரத்தின் நோக்கம் இரண்டு: (1) உதயன் முதலிய துஷ்டர்களை ஒழித்து அவரால் சீர்குலைக்கப்பெற்ற சபரிக் கோயிலைச் சீர்திருத்தி சாஸ்தாவை நிர்மாணித்தல் (2) சாதி சமய வேறுபாடின்றி, ஏழை செல்வர் பேதமின்றி, காமக் குரோதங்களை நீக்கி, பிரம்மதத்துவத்தைச் செயலாக்கி, சமயக் கொள்கைகளைப் பின்பற்றும் தீர்த்த யாத்திரையாக்கி சாஸ்தாவின் வழிபாட்டில் ஆர்வம் ஏற்படுத்த போதனை அளித்தல்.

## பம்பையில் கண்டெடுத்த பாலகன்

ஐயந்தனிடம் சீரும் சிறப்புமாக ஐயப்பன் வளர்ந்துவருங்காள், ஒருநாள் ராஜசேகரன் என்னும் பந்தள மன்னன் பம்பா நதியோரம் வேட்டையாட வந்தான். குழந்தை அழும் ஒலி கேட்டு ஐயந்தனின் பரண்சாலையை அடைந்து தொட்டிலில் கிடந்த ஐயப்பனைத் தூக்கி வாரித் தழுவிக்கொண்டான். குழந்தையும் மன்னனை மிகுந்த பாசத்துடன் கட்டித் தழுவி பிரிய மறுத்தது. ஐயந்தனும் ஐயப்பன் தன் அவதார நோக்கத்தை நிறைவேற்ற மன்னனிடம் வளர்வதே இறையருள் என்பதனை தன் யோக ஞானத்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்ந்து மன்னனிடம் குழந்தையைக் கொடுத்தருளினர். மன்னனும் மகிழ்ந்து ஏற்று, நாடு திரும்பினார்.

## ஐயப்பனின் வன யாத்திரை:

ஐயப்பன் கல்வி, வேதம், போர் முறை முதலிய சகல கலைகளையும் தெளிவாகக் கற்றார். குரு தட்சிணையாக, குருநாதர் மகனின் குருடு, ஊமைத் தன்மைகளை நீக்கினார். இவ்வாறு ஐயனின் புகழ் அதிகமாகி வரும்பொழுது, ராணிக்கு ஆண் மகவு ஒன்று பிறந்தது. மன்னன் ஐயப்பனுக்கு முடிசூட்டு விழா நடத்த ஏற்பாடு செய்தான். மந்திரி நாட்டைத் தான் ஆள சதிசெய்து, மணிகண்டனை அழிக்கத் திட்டமிட்டான். வேட்டுவன் நாடாள் வதா? எனப் பிரச்சாரம் செய்தான். அது பயனற்றுப் போகவே, செய்வினைகளால் மணிகண்டன் உடம்பு புண்ணாகச் செய்தான். பரமசிவன் துறவியாக வந்து குணப்படுத்தினார். பின்னர், தன் மகன் பிறந்தநாள் விழாவிற்கு மணிகண்டனை அழைத்து, அமைச்சன் விஷம் கொடுத்தான். அதனை மணிகண்டன் கருடபஞ்சாக்ஷரம் ஜபித்து வென்றார் ஆத்திரமுற்ற மந்திரி, ராணியின் நல்ல உள்ளத்தைக் குழப்பி, அவள் மகன் ராஜேந்திரனுக்குத்தான் பட்டம் சூட்டவேண்டும் என வாதாடினான். அவன் சதிக்கு உடந்தையாக ராணியும் தீராத தலைவலி என நடித்தாள். அமைச்சரினால் ஏவப்பட்ட வைத்தியர், புலிப் பாலினால் செய்யப்படும் மருந்தினால் தான் ராணியின் தலைவலி தீரும் என்றார். தாயின் தலைவலியைத் தீர்க்கப் புலிப்பால் கொண்டுவர ஐயப்பன் புறப்பட்டார். மிகுந்த கவலைக்குப் பின் மன்னன் ஐயப்பனை வழியனுப்பி, உணவுக் கட்டு எடுத்துச் செல்லும்படியும், முக்கண்ணனாகிய சிவனை நினைத்துக்கொள்ள முக்கண்ணுடைய தேங்காயை உடன் எடுத்துச் செல்லும்படியும் பணித்தார். மன்னன் தந்த பொருட்களை ஐயப்பன் 'இருமுடி'க் கட்டாக அமைத்து வில்லும் அம்பும் ஏந்திப் புறப்பட்டார். அமைச்சன் மகிழ்ந்தான். மன்னர் மனக்கவலையை பரமசிவன் பொறுப்பில் விட்டு நிம்மதியடைந்தார்.

## மகிஷிவதமும் மஞ்சமாதா சன்னதியும்:

ஐயப்பன் வனயாத்திரையின்போது, காட்டு வழியில் எருமை உருக்கொண்ட மகிஷியை வதம்செய்தார். ஐயப்பனால் சாப விமோசனம் அடைந்த மகிஷி, அழகிய மங்கையாகி, தன்னையே திருமணம் செய்துகொள்ள மணிகண்டனை வேண்டினாள். ஐயப்பன் தன் பிரம்மச்சரிய விரதத்தையும் அவதார நோக்கத்தையும் எடுத்துக் கூறி, எப்பொழுது என் சன்னதிக்கு ஒரு கன்னிச்சாமியாவது (முதலாண்டு சபரிமலை செல்லும் பக்தர்) வராமலிருக்கிறாரோ அப்போது உன்னை நான் மணந்து கொள்வேன் என்று கூறி, அவளைத் தன் சகோதரியாகப் பாவித்து ''என் வலது புறத்தில் மஞ்சமாதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற பெயருடன் வீற்றிருப்பாய்'' என ஆசி கூறி அவளுக்கு அருள் புரிந்தார் மகிஷியை வதைத்த மணிகண்ட நாதனைத் தேவர்கள் யாவரும் வாழ்த்தி வணங்கினர். பின் தேவர்கள் யாவரும் புலிகளாக உருமாறி ஐயனுடன் பந்தள நாட்டுக்குப் புறப்பட்டனர்.

## வன்புலி மீது வந்த வள்ளல் :

ஐயப்பன் காட்டு வழியில் பொன்னம்பல மேட்டில் தவம் இயற்றி வந்த தாய் தந்தையரைக் கண்டு மகிழ்ந்தார். பின்னர், புலிக் கூட்டத்தை திரட்டிக்கொண்டு புலியின் மீது அமர்ந்து, ஐயப்பன் பந்தளநாடு திரும்பினார். இது கண்ட மக்கள் ஐயப்பனைத் தெய்வமென வியத்து வழிபட்டுப் போற்றினர். ஐயப்பன் மன்னன் அடிகளில் விழ்ந்து வணங்கினார். ஆனால் மன்னன் ஐயப்பனைத் தெய்வம் என உணர்ந்து வணங்கி, தந்தை மகன் என்ற உறவில் செய்த தவறுகளுக்கு மன்னிப்புக் கேட்டார். புலிக் கூட்டத்தைத் திருப்பி மக்கள் அச்சம் போக்க வேண்டினார். அதன்படி ஐயப்பன் ஆணையிட புலிக் கூட்டங்களாக வந்த தேவர்கள் உருமாறி தேவ லோகம் திரும்பினர். அமைச்சர் தன் தவறு உணர்ந்து ஐயப்பன் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டார். தாயும் தான் செய்த தவறுக்காக வருந்தினாள். ஐயப்பன் ஆறுதல் கூறினார். ஐயப்பனிடம் அரசரும், குருவும், மக்களும் உபதேசம் கேட்டனர். இதனாலேயே குருவின் குரு என ஐயப்பன் அழைக்கப்படுகிறார். சாஸ்தாவை பிரதிஷ்டை செய்யும் நோக்கத்துடன் செல்வதாகவும், மீண்டும் சந்திப்பதாகவும் கூறி ஐயப்பன் பந்தளத்திலிருந்து விடை பெற்றார்.

## வாவரின் தோழன் :

ஐயப்பன் முதலில் காயங்குளம் மன்னரைச் சந்தித்து ஆலோசனை நடத்தினார். கடற் கொள்ளை நடத்தி வந்த மாபெரும் வீரன் வாவரைப்பற்றி கேட்டறிந்தார். (வாவர் இஸ்மாயில் கோத்திரத்தில் பர்ஹவியா வகுப்பில் ஹலேப் எனும் ராஜ்யத்தில் பாத்திமாவின் மகனாக பிறந்த மந்திர ஜாலங்கள் தெரிந்த ஒரு அரேபிய முஸ்லிம் ஆவார்). கடற் கொள்ளையில் கிடைக்கும் பெரும் பொருளை ஏழைகளுக்கு வாரி வழங்கினார். வாவரின் ஆற்றலையும் நல் உள்ளத்தையும் அறிந்த ஐயப்பன் அவரை வென்று நண்பராக்கிக் கொள்ள முடிவு செய்தார். கருநாகப்பள்ளிக் கடற்கரையில் வாவரை எதிர்த்து பெரும்போர் நடத்தி ஐயப்பன் வென்றார். வாவர் ஐயப்பனின் திறமையையும் பெருமையையும் உணர்ந்து அடிபணிந்தார். வாவரை இனிய சொல்பேசி ஆறுதல் கூறி நல்வழி காட்டி நண்பராக்கிக் கொண்டார் ஐயப்பன். தர்மசாஸ்தா சிலையை நிர்மாணிக்கும் பணியில் வாவரும், அவர் படைகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயப்பனுடன் சேர்ந்து பணியாற்ற முடிவு செய்தனர். அதற்காக வாவர் முஸ்லிம் மதத்தை விட்டு, இந்து மதத்தில் சேர்ந்து விடுவதாகக் கூறினார். அதற்கு ஐயப்பன் ''உலகிற்கு பணியாற்ற மதம் எதுவாயினும் கவலையில்லை; மதம் மாறவேண்டாம்'' என்று கூறினார்.

## ஐயப்பன் பாண்டிய நாட்டு விஜயம்:

பந்தளத்தைத் தாக்கிய கொள்ளைக்காரன் உதயனை ஐயப்பனும் வாவரும் சேர்ந்து போரிட்டு துரத்தினர். பின் ஐயப்பன் வாவரை எருமேலிக்கு படைகளுடன் அனுப்பித் தாம் வரும் வரை அங்கிருக்கும்படி சொல்லிவிட்டு, ஐயப்பன் அம்பலப் புழை, செம்ப கேசரி, சேர்த்தலை, பெரும்பாவூர், பரப்பநாடு, சால்க்குடி முதலிய இடங்களுக்குச் சென்று, பல வீரர்களைத் திரட்டி போர் பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்தார். அதற்குப் பல குருமார்களை நியமித்த பின், பாண்டிய நாட்டு தலைநகரான மதுரைக்கு வந்து மன்னனைக் கண்டு, உபதேசஞ் செய்து, ஒரு குறிப்பிட்ட நாளில் சபரிக்கு வரும் படி அழைத்தார்.

பின்பு, எருமேலி வந்து வாவரை சந்தித்து வரும் மகரசங்ராந்தியன்று ஸ்ரீ தர்மசாஸ்தா பிரதிஷ்டை செய்யவேண்டும். ஆகவே எல்லா திசைகளில் இருந்து வரும் படைகளும் எருமேலியில் சந்தித்து புறப்படவேண்டும் என்று கூறி திட்டங்களை விளக்கினார்.

## எருமேலியும் ஐயப்பன் நந்தவனமும்:

பொன்னம்பல மேட்டில் தவமிருக்கும் பெற்றோரைக் கண்டு தந்தையிடம் ஸ்ரீ சாஸ்தாவின் பிரதிஷ்டையைத் தாங்கள் செய்ய வேண்டும் என்று வேண்டிக் கொண்டார். பின் எருமேலி வந்தடைந்தார். ஐயப்பன் புலிப்பாலுக்காகச் சென்ற சமயம் கொண்டு சென்றதைப் போல் படையினர் இருமுடிகட்டி கறுப்புக் கம்பளி தரித்து வில்லம்புடன் மகரசங்ராந்திக்கு நாற்பத்தொரு (41) நாள் முன்பிருந்தே பூரண பிரம்மச்சரிய விரதமிருந்து பஜனை செய்து அனைவரும் எருமேலி வந்து சேர்ந்தனர். பயிற்சி அளித்த பெரியோர்கள் குருவாக ஏற்றுக்கொள்ளப்பட்டனர். அனைவருங் கூடி ஐயன் ஆணைப்படி காய் கறிகள் முதலியன சுமந்து அரசன், ஆண்டி வேற்றுமையின்றி கறுப்பு ஆடையுடன் உடலில் கரி, குங்குமம் ஆகிய பல வர்ணங்களைப் பூசியும் ஒற்றுமையுடன் சாமிதிந்தக்கதோம் ஐயப்பதிந்தக்கதோம் என, கோசமிட்டு வாவர் வணங்கிய இஸ்லாம் மத ஆலயத்தை வழிபட்டு வலம் வந்து பின் எருமேலி சாஸ்த்தாவையும் வணங்கி விடைபெற்று புனிதப் பயணம் புறப்பட்டனர். எருமேலியைத் தாண்டியதும் பெரியகாடு தொடர்ந்தது. இதனை சாஸ்த்தாவின் நந்தவனம் என ஐயப்பன் போதித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காளைகட்டியும், அழுதா நதியும்:

இரண்டு மைல் தொலைவில் பேரூர்தோடு எனும் இடத்தில் ஓய்வு எடுத்தனர். சபரிமலைக்கும் எருமேலிக்குமிடையில் பல உயர்ந்த மலைகளின் உச்சியில் உதயன் பல தாவளங்கள் நிறுவியிருந்தான். முதலில் இஞ்சிப் பாறைக் கோட்டையைக் கைப்பற்ற அதனைக் காத்து வந்த புதுச்சேரி முண்டன் எனும் கொள்ளைக் காரனிடம் போரிட முடிவு செய்து காளைக்கட்டி எனுமிடத்தில் படையினருக்குக் கற்பித்தார். (தன் பயணத்திற்கு வைத்திருந்த காளையைக் கட்டியதால் இவ்விடம் காளைக்கட்டி என அழைக்கப் படுகிறது. இங்கு ஐயப்பன் ஓய்வு எடுப்பதற்காக அமர்ந்த கல்லை இன்றும் தொட்டு வழிபடுகின்றனர்) காளைக் கட்டியிலிருந்து ஒரு மைல் தொலைவிலுள்ள அழுதை ஆற்றை அடைந்து தாவளங்கள் அமைத்துப் பஜனை செய்து இரவு தங்கினர்.

ஐயப்பன் பந்தளப் படையைச் சேர்ந்த சின்னக்கடுத்தை (கொச் சிக்கடுத்தை) ராமன், கிருஸ்ணன் ஆகியோர் கீழ் ஒரு படைப்பிரிவை அமைத்துத் தலைப்பாறையைத் தாக்க அனுப்பிவிட்டு வாவர் தலைமையில் ஒரு படையினரை இஞ்சி பாறையைத் தாக்க ஐயன் ஆணையிட்டார். அதன்படி படைகள் அகழியைத் தாண்ட அழுதை ஆற்றில் குளித்துவிட்டு பெரும் கற்களை எடுத்துச் சென்று அகழியில் போட்டு பாலம் போல அமைத்து கோட்டைக்குள் புகுந்தனர். போரிட முடியாத புதுச்சேரி முண்டன் ஓட ஆரம்பித்தான். இதைக் கண்ட வாவர் அவனை பின் தொடர்ந்து கடும் போர் புரிந்து இறுதியில் முண்டனை வெட்டி வீழ்த்தினார். அந்த இடத்தில் ஓடுகின்ற நதிக்கு புதுச்சேரி ஆறு எனப் பெயர் வழங்கி வருகின்றது.

## கரியிளந்தோடும், கரிமலையும்:

படைகள் தொடர்ந்து கரியிளந்தோடு எனும் இடத்தை அடைந்து இரவு தங்கினர். அதே சமயத்தில் தலைப்பாறைக் கோட்டையில் மேலிருந்து தாக்கிய கொள்ளையர்களை ராமனும், கிருஸ்ணனும் போர் புரிந்து வென்றனர். திறமையைப் பாராட்டி ராமனுக்கு தலைப்பாறை வில்லன் என்றும், கிருஸ்ணனுக்கு தலைப் பாறை மல்லன் என்றும் பெயர் வழங்கப்பட்டன. போர் நடந்த இரு இடங்களிலும் ஒரே சமயத்தில் ஐயப்பன் குதிரை மேலும் யானை மேலும் காட்சி அளித்து உற்சாகம் ஊட்டியதாக படைகள் கூறினர்.

பொழுது விடிந்ததும், கரியிளந்தோடிலிருந்து புறப்பட்டு கரிமலையைச் சுற்றி வளைத்தனர். இதை அறிந்த உதயன் திகைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான். எனினும் தளராமல் போர் புரிந்தான். சின்னக்கடுத்தை உதயனோடு கடும் போர் புரிந்து, உதயனை வாளால் வெட்டி வீழ்த்தினார். மாலை பொழுது கரிமலைக் கோட்டை உச்சியில் ஐயப்பன் கொடி பறந்தது.

## பம்பா நதிக்கரையில் படையினர் :

பின், கரிமலை இறக்கம் இறங்கி பம்பா நதிக்கரை வந்தனர். இரவில் ஓய்வுக்கு முன் ஐயப்பன் எல்லோருக்கும் நன்றி கூறி வெற்றிச் செருகுறாமல் இருக்கும்படி வேண்டினார். மறுநாள் காலை, ஸ்ரீ இராமபிரான் பாததுளி ஏற்ற புண்ணிய நதி பம்பைக் கரையில் இளைப்பாறி பம்பை நதியில் நீராடி முன்னோர்களுக்குச் செய்ய வேண்டிய சடங்குகளைச் செய்து பின் பகலுணவு தயாரித்து அனைவருக்கும் உணவளித்து உண்டனர். இரவு ஓய்வு எடுத்து மறுநாட் காலை சபரிமலை நோக்கிப் புறப்பட்டனர். நீலிமலை ஏற்றம் தொடங்கியது. மலர்களைப் போட்டு மலையை வணங்கி ஏறினர். வழியில் ராமபக்தையான சபரி அன்னை முத்திபெற்ற இடத்தை ஐயப்பன் ஆணைப்படி வழிப்பட்டுச் செல்லும் வழியில் இனி ஆயுதங்கள் தேவையில்லை என்று ஐயன் அவற்றை அங்கிருந்த ஆலமரத்தடியில் போடும்படி ஆணையிட்டார். (இந்த இடந்தான் இன்று சரங்குத்தி ஆல் என்று அழைக்கப்படுகிறது). பின்னர் ஐயப்பன் பக்தர்களுக்கு உபதேசித்தார்.

---

**பற்றற்ற கருமம் செய்வோமானால் மனம் மாசு பெறாது; தூய மனதில் ஞானம் ஒளிரும். ஞானமே வாழ்க்கையின் இலட்சியம், நற்கருமத்திற்கு இடையூறாவது காமம், வெகுளி, பேராசை, குரோதம் முதலியன. இவற்றை அழிக்க கடவுளை தியானிக்க வேண்டும். கடவுளிடம் சரணாகதியடைவதே பக்தியின் இறுதி மொழி. சரணம் ஐயப்பா என்ற சரணாகதி மந்திரத்தைத் தூயமனத்துடன் ஓதுகிறவன் முத்தி பெறுவான். பதினெட்டுப் படியேறியதும் தர்மசாஸ்தாவின் தரிசனம் கிடைக்கிறது. இந்த பதினெட்டுப் படிகளும் பதினெட்டுத் தத்துவங்களாகும். அவை புலன் ஐந்து, பொறி ஐந்து, பிராணன் ஐந்து, மனம், புத்தி, அகங்காரம் இவைகளைக் கடந்தவனே கடவுளைக் காண இயலும் என்றார்.**

---

பின் அனைவரும் பதினெட்டாம் படியினை அடைந்தனர். பாண்டிய மன்னரும் படைகளுடன் வருகை தந்திருந்தார். சாஸ்தாவை பிரதிஷ்டை செய்ய ஐயனின் தந்தை ஐயந்தனும் வந்திருந்தார். காலை விடிந்ததும் உரல்குழி தீர்த்தமாடி ''சரணம் ஐயப்பா''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூறிக்கொண்டு, தேங்காய் உடைத்துச் சத்தியமான பதினெட்டுப்படிகளும் ஏறிக் கடந்தனர். உச்சியை எட்டியதும் ஐயப்பன் பெற்றோர் பாதங்களில் விழுந்து வணங்கினார். பின் பந்தள மன்னனையும் வணங்கிப் பாண்டிய மன்னனை நமஸ்கரித்தார். முகூர்த்தம் நெருங்க நெருங்க ஒருவித தெய்வீக அமைதி நிலவியது. ஒவ்வொரு நொடியும் ஸ்ரீ ஐயப்பனின் முகம் பிரஹாசம் அடையத் தொடங்கியது. திடீரென எங்கிருந்தோ ஒரு கருடன் கிருஷ்ணா என கத்திக்கொண்டு வந்து வட்டமிட்டது.

## ஐயப்பன் சாஸ்தா விக்கிரகத்தில் ஐக்கியமானது:

இனிமேல் சபரிமலை மிகச் சிறப்பாக விளங்கும். ஏராளமான பக்தர்கள் வருடந்தோறும் தவறாமல் சபரிமலை யாத்திரைக்கு வந்து சாஸ்தாவின் அருளைப் பெறுவர். நாம் இதுவரை பின்பற்றிய முறைகள்படி ஒரு மண்டல விரதமிருந்து நாம் வந்த காட்டுப் பாதை வழியாக வந்து, ஆங்காங்கு முறைப்படி சடங்குகளைத் தவறாமற் செய்து சாஸ்தாவின் அருளைப் பெறுவர் என்றார்.

பின் சங்க நாதமும், வாத்தியங்களும் முழங்க சாஸ்த்தாவின் மூல விக்கிரகத்தை ஐயப்பனின் தந்தை ஐயந்தன் திருக்கோயிலுக்குள் எடுத்துச் சென்று மூல பீடத்தின் மேல் நிலை நிறுத்தினார். திடீரென ஒரு வெளிச்சம் தோன்றியது. ஐயன் ஐயப்பன் நின்ற இடத்திலிருந்து ஜோதி ரூபமான ஒரு ஒளி தோன்றிப் பிரதிஷ்டை செய்த ஸ்ரீ சாஸ்த்தா விக்கிரஹத்தில் ஐக்கியமாகிவிட்டது. ஸ்ரீ சாஸ்தாவில் ஐயப்பன் ஐக்கியமாகி விட்டதைக் கண்கூடாகக் கண்டனர். தம்மை அறியாமல் அனைவரும் ஐயனின் தாரக மந்திரமான "சரணம் ஐயப்பா" என்று கூறி வழிபட்டனர். கோவிலை வலம் வந்து, பக்தி பெருகக் கண்ணீர் விட்டு பரவசமடைந்தனர். உடன் சாந்தி நிலவியது. நிர்வாகத்தைப் பந்தள மன்னன் ஏற்றார். அன்று முதல் இன்றுவரை மன்னர் பரம்பரையினர் நிர்வாகத்தில் இருந்து வருகின்றனர். உடன் இருந்த வாவர், சின்ன கடுத்தை, ராமன், கிருஸ்ணன் ஆகியோர் அங்கேயே தங்கி ஐயனின் அருளுக்குப் பாத்திரமாகிவிட்டனர்.

பக்தர்களும், அன்பர்களும் ஐயப்பனின் வரலாற்றினை அறிந்து உண்மை உணர்ந்து, ஐயப்பனின் பேரருளைப் பெற்று நல்வாழ்வு பெறுவோமாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




With Best Compliments From

**NABEEZA TRADERS**

GENERAL MERCHANTS, IMPORTERS &
COMMISSION AGENTS

**No. 207, KEYZER STREET,
COLOMBO 11.
Telephone: 440887**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*With Best Compliments from*

# EASWARAN BROTHERS

EXPORTERS AND IMPORTERS

*267 Sea Street Colombo-11 Shri Lanka*

Phone: 447608, 435842, 432599 Fax : 448720
422744, 431741, 422330 Cables : TEDESIPRO
Telex : 21275, 21866 ESWARAN CE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாஸ்தாவின் பல தோற்றங்கள்:

தமிழகத்திலும் கேரளத்திலும் நெடுங்காலமாக வழிபட்டு வந்த மாசாத்தான், கண்டன் சாஸ்த்தா, சாத்தப்பன் ஆகியவை சாஸ்த்தாவையே குறிப்பன. இந்தத் தேவதைகளின் வழிபாடு ஆரிய பிராமணர்களின் சைவ வைணவக் கொள்கைகளாலும் கி. மு. 2ம் நூற்றாண்டு முதல் பரவிய புத்த மதக் கோட்பாடுகளாலும் தழுவப் பெற்று மாற்றியமைக்கப் பெற்றன. புத்த மதத்திற்கே உரியதான சரணம் போடும் முறையும் (புத்தம் சரணம் கச்சாமி) கூட்டம் கூட்டமாக யாத்திரை செல்லுதலும், பகவான் பகவதி சரணம் விளித்தலும், புத்த மதத்திலிருந்து தழுவிக்கொள்ளப் பெற்ற வழக்கங்களாகும். தமிழகத்திலும், இலங்கையிலும், பல ஊர்களில் வீற்றிருக்கும் தெய்வமான ஐயனார் ஹரிஹர சுதன் ஐயப்பனேயாகும். கேரளத்தை உருவாக்கிய பரசுராமர் பதினெட்டு மலைகளில் தர்ம சாஸ்த்தாவின் கோயில்களை அமைத்தார். அந்தக் கோயில்களுள் சபரிமலை சாஸ்த்தா கோயில் மிக முக்கியத்துவம் வாய்ந்தது. எருமேலி தர்ம சாஸ்த்தா கோயில், அச்சன் கோயில், ஆரியங்காவு, குழத்துப்புழை ஆகிய கோயில்கள் அந்த பதினெட்டில் சிலவாகும். ஏனைய கோயில்கள் எங்கு அமைக்கப் பெற்றன என்பது சரியாக அறியப்பெறவில்லை. அருளை அள்ளி வழங்கும் ஹரிஹர சுதன் ஐயப்பன் புகழ் பாடுவோமாக.

ஹரிஹர சுதனே சரணம் ஐயப்பா!

## சபரிமலை எனப் பெயர்வரக் காரணம்:

சபரி என்ற வேடகுலப் பெண் வேட்டையாடிப் புலால் உண்ணும் தன் இனத்தவரை வெறுத்து மாதங்க வனம் எனும் வனத்தில் துறவியாக வாழ்க்கை நடத்தினாள். இவ்வனத்தில் மாதங்க முனிவருக்கும் அவருடைய சிஷ்யர்களுக்கும் ஆசிரமத்தில் சபரி பல ஆண்டுகள் தொண்டாற்றி வந்தாள். மாதங்க முனிவர் தனது இறுதி காலத்தில் சபரியிடம் ''ஸ்ரீ இராமன் இந்த ஆசிரமத்திற்கு வருவார்'' எனவும் ''அப்போது அவர் உனக்கு அருள் வழங்கி நற்கதி பெறுவாய்'' எனவும் கூறினார். அவ்வாறே இராமபிரானும் அவரின் அருமைத் தம்பி இலக்குமணனும் வந்தார்கள். சபரி அன்னை காட்டில் கிடைத்த கனிகள், கிழங்குகளைத் தான் முதலில் சுவைத்துப் பார்த்து இனியவைகளை மட்டும் அவர்களிடம் சமர்ப்பித்து வணங்கினாள். பிறகு இராமபிரானின் அருள்பெற்று மோட்சமடைந்தாள் என்ற இவ் விவரங்கள் வால்மீகி இராமாயணத்தில் காணக் கிடைக்கின்றன. சபரி வாழ்ந்த இந்த மாதங்க வனமே தற்பொழுது பக்தர் பெருவெள்ளம் அலைமோதிப் புகழ் பாடும் சபரிமலையாய் அருள் கொழிக்கிறது.

சபரிகிரிவாசனே சரணம் ஐயப்பா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சபரிமலை தீர்த்த யாத்திரைப் பலன்கள்

மானிடர்க்குரிய குறைகளைக் கடவுள் அறிகிறார். மானிட இனத்திற்கு நன்மை புரியும் பொருட்டு அவர் ஒரு மனிதராகிறார். தர்மம் குறைந்து அதர்மம் தலையெடுக்கும் போதெல்லாம் நான் அவதரிக்கின்றேன். யுகந்தோறும் அறத்தை நிலை நிறுத்தவும் மறத்தை அழிக்கவும் நல்லோர்களைக் காக்கவும் நான் வருகிறேன் என்றார் கிருஷ்ண பரமாத்மா

இக் கலியுகத்தில் பன்னிருகையனாகிய திருமுருகவேளும் பூத நாதனாகிய ஐயப்ப மூர்த்தியும் அருட்பெரும் ஜோதியாய் விளங்கு கின்ற தெய்வங்கள் என்பது அன்பர்கள் கண்டறிந்த உண்மை. இவ்விரு மூர்த்திகளே ''கலியுகவரதன்'' என்ற திருநாமத்துடன் மிளிருகின்றனர். ஹரிஹரபுத்திரனாகிய தர்மசாஸ்த்தாவின் பெருமை களை வர்ணிப்பது இயலாததாகும். பூதநாதனாகிய ஹரிஹரபுத்திரன் பம்பை பாலனாய் அவதரித்தும் ஐயப்பனாய் விளங்கியும் மகிஷியை அழித்தும், அமரர்களை காத்தும், பொன்னம்பலத்திலும் புண்ணிய பூமியாகிய கேரள நாட்டிலும் திருக்கோயில் கொண்டு ஜோதீஸ்வ ரூபனாய் மகர சங்கராந்தி தினத்தன்று காட்சி கொடுத்து நல்லருள் பொழிகிறார்.

சபரிமலை யாத்திரையின் போது சாதி சமய வேறுபாடுகள் சரணம் போட்டுப் பறக்கின்றன. ஏழை பணக்காரர் என்ற பேதம் இல்லை. உயர்ந்தவர், தாழ்ந்தவர், படித்தவர், பாமரர் என்ற எவ்வித வித்தியாசமும் இல்லை. எல்லோரும் ஓர் குலம், எல்லோ ரும் ஓர் நிறை, என்ற உணர்வோடும் அன்போடும் பண்போடும் மேற்கொள்கின்ற யாத்திரையே இந்த சபரிமலைப் புனிதயாத்திரை

வாழ்வின் பல சிக்கல்களில் மாட்டிக்கொண்டு தினமும் அல்லற் பட்டு உழன்று வரும் நாம் வருடத்துக்கு ஒரு முறையாவது சில நாட்களாவது தூய மனத்துடனும், மெய்யான பக்தியுடனும், நல்ல சிந்தனையுடனும், மனதைக் கட்டுப்படுத்தி, விரதங்களிருந்து பூஜை கள், அன்னதானங்கள், தானதருமங்களை இயன்றவரை சக்திக்கேற்ற வாறு செய்து தெய்வப்பணி மேற்கொள்ள ஒரு நல்ல வாய்ப்பினை இந்த சபரிமலை யாத்திரை நமக்குத் தருகிறது, சபரிமலை யாத்திரை யின் போது பல ஆறுகளிலும், குளங்களிலும், மலையிலிருந்து உற்பத்தி யாகி ஓடிவரும் சுனைகளிலும் நீராடுவதால் பலவித அரிய மூலிகை களின் குணங்களைப் பெற்ற நீரின் உதவியால் நம் உடலிலுள்ள சில நோய்கள் நீங்கி குணம் பெற வாய்ப்புகள் கிடைக்கிறது. மலைவழி யிற் செல்லும்போது வீசும் தென்றற் காற்றும், தெளிந்த நீரோடை யாக ஓடி வரும் சுனை நீர் ஏராளமான மூலிகை மருந்துகளைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொட்டுத் தழுவிப் பாய்ந்து வருவதால் அந்நீரை அருந்துகின்ற நாம் சில தீராத நோயும் நீங்கப் பெற்று குணம் பெறுகிறோம். பல உயர்ந்த மலைகளில் ஏறும் வாய்ப்புக் கிடைப்பதால் இருதயம் பலம் பெறுகிறது. இரத்தம் சுத்தமடைகிறது நரம்புகளும், தசை நார்களும் உறுதி பெறுகின்றன. கெட்ட உணர்வுகள் பட்டுப் போகின்றன பிறவி ஊமைகளும் பேச வாய்ப்புக்கள் உண்டாகின்றன.

ஐயப்பனும் வாவர் சுவாமியும் இரண்டறக் கலந்து நின்று அருள்புரிவதைப் போலவே இஸ்லாம் மதத்தாரும் மாலை அணிந்து இருமுடி தாங்கிப் பெரும் திரளாக வந்து வழிபட்டு அருள்பெற்றுய் கிறார்கள். இதனால் இந்து இஸ்லாம் மத ஒற்றுமை வளர்கின்றது. எனவே இந்த யாத்திரையின் மூலம் ஒருமைப்பாட்டு உணர்வு வளர் கிறது. சமத்துவம் என்றால் என்ன என்பதை நடைமுறையில் நடத் திக் காட்டப்படுகிறது. எந்தத்தலை சபரிமலை ஐயப்பனின் அபிஷே கத்திற்குள்ள முத்திரையை தாங்குகிறதோ அந்தத்தலை பிரபஞ்சத் துயர் எனும் சுமை இல்லாமல் இன்பம் எய்து; சனிப்பகவானால் ஏற்படக்கூடிய பெருந்துயர்கள் விலகிப்போகின்றன. பலனைக் கருதி ஆண்டவனை வழிபட்டாலும், பலனுக்கு ஆசைப்படாமல் இறை வனை வணங்கினாலும் தெய்வத்தை உபாசிப்பதால் அளவிட இய லாத நன்மைகள் பல உண்டாகின்றன. தொடர்ந்து பதினெட்டு வருடங்கள் முறையாக பதினெண் திருப்படிகளும் கடந்து ஐயப்ப னாகிய பரப்பிரம்மத்தை தரிசனம் செய்கின்ற பக்தர்களுக்கு மறு பிறப்பு ஏற்படாது அவர்களுக்கு முத்தி கிடைக்கிறது. ஆகையினால் உண்மையான பக்தியுடன், உள்ளன்பு மிக்க நம்பிக்கையுடனும் குரு உபதேசம் பெற்று சபரிமலை நோன்பு அனுஷ்டிக்க வேண்டும். பக்தி யைக் கண்டால் பகவான் பிரகாசிக்கிறார். பகவான் பிரகாசிக்கை யில் சித்திகள் யாவும் கிடைக்கின்றன. ஹரியும் ஹரனும் ஒன்றாய் விளங்கும் அத்வைத மூர்த்தியாகிய ஐயப்பனுடைய மகிமையை எடுத்துச் சொல்வதும் ஐயனின் கருணையை வருணிக்கவும் இயலா ததாகும். ''கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன் நற்றாள் தொழாரெனின்'' என்ற பொன் மொழிப்படி ஆறறிவு படைத்த மனிதப் பிறவியடைந்த நாம் எல்லாம் வல்ல இறைவனும் கலியுக வரதனும் ஹரிஹர புத்ரனுமாகிய பகவான் ஸ்ரீ ஐயப்பனின் திருவடி களைப் போற்றிப் பணிந்து, பிறவிப் பெருங்கடல் நீந்த முற்பட வேண்டும். அண்டினோரை ஆட்கொண்டருளுவதற்காக தர்ம சாஸ்த்தாவாய், மணிகண்டனாய், பம்பைப் பாலனாய், திருவிளை யாடல் பல புரிந்து ஐப்பெருங் கோவில்களில் சிறந்து விளங்கும் சபரிமலைக் கோயிலில் பதினெட்டுப் படிகளுடன் பரிவாரங்கள் புடைசூழ எழுந்தருளியிருக்கும் அம்மெய்யனாம் ஐயப்பன் அனை வரையும் ஆட்கொண்டு அருள் புரிவாராக. பொங்கும் மங்களம் எங்கும் தங்க ஐயன் பாதம் போற்றிப் பணிவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சபரிமலை யாத்திரையில் பக்தர்கள் பின்பற்ற வேண்டிய

# விதிமுறைகள்

சபரிமலையில் வைத்து ஆராதிக்கப்படும் சாஸ்த்தாவாகிய ஐயப்பன் சத்தியமும் தர்மமுமுள்ள அத்தெய்வத்தை தரிசிப்பதற்கு காடு, மலை, கடினப்பாதை, கொடிய மிருகங்கள் போன்ற பல இன்னல்களைக் கடந்து செல்ல இருப்பதால், பல்லாண்டுகளாகப் போற்றிக் காப்பாற்றப்படும் பயண விதிமுறைகளை இக்காலத்தில் சபரி யாத்திரை செல்லும் அனைவரும் உறுதியுடனும் உள்ளத் தெளிவோடும் ஒழுங்குடனும் பின்பற்ற சபரி யாத்திரையின் புனிதத் தன்மையை மாசின்றி நிலை நிறுத்த வேண்டியது முக்கிய கடமை யாகும்,

## குருசுவாமி என்னும் தலைவன் :

மாசற்ற இந்தப் புனித யாத்திரை செல்ல நமக்கு ஒரு தலைவன் தேவை. பத்துப் பதினைந்து பேர்களை அழைதுத்ச் செல்வதற்குப் பொறுப்புள்ள ஒரு தலைவன் வேண்டும். அவர் சிறந்த பக்தனாக இருத்தல் வேண்டும். ஐயப்ப தேவனின் அரும் புகழை நன்கு அறிந்த பண்புடையவராக இருத்தல் வேண்டும். விரத காலத்தில் விரத முறைகளையும் பக்தர்களுக்கு விளக்கிக் கூறி பக்தியின் சிறப்பை எடுத்துச் சொல்லும் தகுதி உடைய நல் அறிவாளராக இருக்க வேண்டும். மேலும் அநேக தடவைகள் மலை யாத்திரை செய்து பக்தர்கள் நடந்துகொள்ள வேண்டிய விதிமுறைகளைக் குறைவர எடுத்துச் சொல்லும் திறமை மிக்கவராக இருத்தல் வேண்டும். யாத்திரையில் எதிர்பாராமல் நேரிடும் கஷ்ட நஷ்டங்களைச் சாமாளிக்கும் திறமை உடையவராய் இருத்தல் வேண்டும். இன்ன இடத்தில் இன்ன அசௌகரியம் நேரிடும். அதற்கு இன்னது செய்ய வேண்டும் என்பதை அறிந்து நடந்துகொள்ள வேண்டும். இத்தனை திறமையுள்ள ஒரு தலைவனைத்தான் குருசுவாமி என்று பெரும் பதவியும் நன்மதிப்பும் கொடுத்து வணக்கத்திற்குரியவராக்கிக் குரு காணிக்கை தந்து அவர் சொற்படி நடந்து மலை யாத்திரை சென்று வருவது முறை. அவரும் தன்னையறியாமல் ஒருசில தவறுகள் செய் யலாம். நாம் அதை அறியாதது போல் நடந்து கொள்வதுதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த முறை. அவ்விதம் நடந்து கொண்டால்தான் புனித யாத்திரையின் நற்பலனை நாம் அடைய முடியும். ஆகையால் எவ்வித காரணத்தைக் கொண்டும் குருசுவாமியின் மனம் நோகும்படி நடந்து, அவரை வைத்திருக்கும் நிலையிலிருந்து சற்றும் தாழ்ந்த நிலைக்குக் கொண்டுவந்துவிடக் கூடாது. இது கவனிக்க வேண்டிய அம்சம். அவருக்கு நாம் செலுத்தும் வந்தனை சுவாமிக்கு நாம் செலுத்தும் வந்தனை என்பதைக் கணமும் மறந்துவிடக் கூடாது.

**சபரிமலைக்கு இளம் பெண்கள் வரக்கூடாது :**

என்ற கட்டுப்பாடு நெடுங்காலமாக இருந்து வருகிறது. தற்போது சற்றுத் தளர்ந்து வரும் நிலை உருவாகியிருக்கிறது. சமீபத்தில் குறுகிய வழிப்பாதை (சாலக்காயம்) ஏற்படுத்தப்பட்டதே இதற்குக் காரணம். முன்பெல்லாம் எருமேலி வழியாக 48 மைல் நடந்து செல்லும் பெருவழிப் பாதையும் வண்டிப் பெரியாறு வழியாக 18 மைல் நடந்து பல கடினமலைகளையும் கடந்துதான் சந்நிதியை அடையமுடியும். இத்தகைய மலைப்பயணம் பெண்களுக்கு மிகவும் சிரமத்தைக் கொடுக்கும். மற்றும் வழி நெடுகிலும் ஆறுகளிலும், சுனைகளிலும் நீராடும் போது பல சிரமங்கள் ஏற்படும். முக்கியமாக மாதவிலக்கு ஏற்படும் வாய்ப்புண்டு. இதனால், பெண்களுக்கும் மற்ற சாமிகளுக்கும் சிரமம். தூய்மை கெடும். வன விலங்குகள் அவர்களை நெருங்கி ஆபத்து விளைவிக்கக்கூடும், இதை நன்கு அறிந்தவர்கள் தவிர்த்துக் கொண்டால் நல்லது. மாத பூஜைகளில் கலந்துகொள்ள சாலக்காயம் வழியாக (குறுகியபாதை) பல குடும்பஸ்தர்களும், பெண்களும் பக்திப்பெருக்கினால் பகவானைக் கண்டு தரிசிக்க வந்து சென்றவண்ணமிருக்கின்றனர்,

## சபரிமலையானையே நாடு

**காலன் வருமுன்னே கண் பஞ்சடையுமுன்னே**
**பாலுன் கடைவாயில் படுமுன்னே - உற்றார்**
**மேல் விழுந் தழுமுன்னே ஊரார் - சுடுமுன்னே**
**சபரி மலை யானையே நாடு.**

# பயண விதிமுறைகள்

1. ஐயப்ப பக்தர்கள் இயன்றவரை கார்த்திகைத் திங்கள் முதல் நாள் மாலை அணிந்து கொள்வது சாலச் சிறந்தது. அன்று நாள், கிழமை பார்க்கவேண்டியதில்லை. அதற்குப்பின் மாலை அணிபவர்கள் எப்படியும் சந்நிதானத்திற்குச் செல்லும் தினத்திற்கு முன்னதாக ஒரு மண்டலம் (41 நாட்கள்) விரதமிருக்கும்படி பார்த்து அதற்குள் மாலை அணிந்துகொள்ள வேண்டும்.

2. துளசிமணி அல்லது உருத்திராட்ச மாலை 108 அல்லது 54 மணிகள் உள்ளதாகப் பார்த்து வாங்கி அத்துடன் ஐயப்பன் திருவுருவப் பதக்கம் ஒன்றையும் இணைத்து அணியவேண்டும். அத்துடன் துணை மாலை ஒன்றும் அணிந்து கொள்வது நல்லது.

3. பலமுறை விரதமிருந்து சபரிமலை சென்றுவந்து பக்குவமடைந்த பழமலை ஐயப்பன்மார் ஒருவரைக் குருவாக ஏற்று திருவிளக்கு முன்பாகவோ திருக்கோவில்களிலோ குருநாதரை வணங்கி அவர் திருக்கரங்களால் மாலை அணிந்துகொள்ள வேண்டும். அல்லது தாய் தந்தையர் மூலமாகவோ இறைவன் திருவடிகளில் வைத்து எடுக்கப்பெற்ற மாலையினையே அணிந்து கொள்ளலாம். மாலை அணிந்து கொண்டவுடன் குருநாதருக்குத் தங்களால் இயன்ற தட்சணையைக் கொடுத்து அடிவணங்கி ஆசி பெறவேண்டும். ஐயப்பன் அடியனாக மாலைத் தரித்த நிமிடத்திலிருந்து குருசாமியை முழுமனதுடன் ஏற்று அவர் மொழிகளைத் தேவவாக்காக மதித்து மனக் கட்டுப்பாட்டுடன் பணிந்து நடந்துகொண்டு பயணத்தை இனிதாக்க ஒத்துழைக்க வேண்டியது அவசியம்.

4. கறுப்பு, நீலம், பச்சை, காவி, மஞ்சள் இவற்றுள் ஏதாவதொரு நிறத்தில் உடைகள் அணியவேண்டும். தங்கள் கடமைகளை ஆற்றுகின்ற சமயங்களில் இயலாவிட்டாலும் பஜனைகளில் கலந்துகொள்ளும் போதும், யாத்திரையின் போதும், முழுவதும் கண்டிப்பாக வர்ண உடை அணிய வேண்டியது அவசியம்.

5. மலைக்குச் செல்லக் கருதி, மாலையணிய விரும்பும் பக்தரை தாய் தந்தை, மனைவி, மக்கள் முதலியோர் தடுத்தல் கூடாது. எவ்வித அச்சமுமில்லாமல் தர்மசாஸ்த்தாவிடம் முழுப் பொறுப்பினையும் வைத்து முகமலர்ச்சியுடன் அனுப்பிவைக்கவேண்டும்.

6. மேற்கொள்ள வேண்டிய விரதங்களில் மிகவும் ஒழுங்குடன் தவறாமல் கடைப்பிடிக்க வேண்டியது பிரம்மச்சரிய விரதமாகும். மனம், வாக்கு, செயல் என்ற மூவகைகளிலும் காம இச்சையை அறவே நீக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. காலை, மாலை இரு வேளைகளிலும் குளிர்ந்த நீரில் தவறாமல் நீராடி ஐயப்பன் திருவுருவப் படத்தை வைத்து வணங்குதல் வேண்டும். தினமும் ஆலயவழிபாடும், பஜனைகளில் கலந்து கொண்டு வாய்விட்டுக்கூவி சரணம் விளித்து ஐயப்பன் புகழ்பாடி மகிழ்தலும் பேரின்பம் பயக்கும்.
புதன், சனிக்கிழமைகளில் விசேட பூஜை செய்வது நன்மை பயக்கும்.

8. படுக்கை, தலையணைகளை நீக்கி தன் சிறு துண்டை மட்டும் தரையில் விரித்துத் துயில வேண்டும். பகல் நேரத்தில் தூங்கு வதைத் தவிர்க்கவேண்டும்.

9. களவு, கோபம், குரோதம், சூதாடுதல், பொய், திரைப்படங்கள், விளையாட்டு, வேடிக்கைகள், உல்லாசப் பயணங்கள், போதை யூட்டும் பொருட்கள் முதலியவற்றைத் தவிர்க்கவேண்டும்.

10. எண்ணெய் தேய்த்துக் குளிப்பது, சவரம் செய்து கொள்வது, காலணிகள், குடை உபயோகிப்பது முதலியவற்றைத் தவிர்க்க வேண்டும்.

11. மற்றவர்களிடம் பேசும் பொழுது ''சாமி சரணம்'' எனத் தொடங்கி பின் விடைபெறும் பொழுது ''சாமி சரணம்'' எனச் சொல்லவேண்டும்.

12. விரத காலத்தில் அசைவ உணவு உண்பது மாபெரும் தவறா கும். எனவே இயன்றவரை வீட்டிலேயே தூய்மையாகத் தயா ரித்த சைவ உணவையே உண்ண வேண்டும். மாலை தரித்த ஐயப்பன்மார் வீட்டைத் தவிர மற்றவர்கள் வீட்டில் எக்காரணத் தினாலும் உணவு உண்ணக் கூடாது. மிதமாகவே உணவு உட் கொள்வது உகந்ததன்று.

13. பக்தர்கள் மாலை தரித்த பிறகு சந்திக்கின்ற ஆண்களை ஐயப்பா என்றும், பெண்களை மாளிகைப்புறம் என்றும், சிறு வர்களை மணிகண்டன் என்றும், சிறுமிகளை கொச்சி என்றும் குறிப்பிட்டு அழைக்கவேண்டும்.

14. சபரிமலை செல்லும் பக்தர்கள் புதிதாக பயணம் வர விரும்பு கிறவர்களிடம் ''நான் பத்திரமாக கூட்டிக்கொண்டு போய் வருகிறேன். என்னோடு தைரியமாக வரலாம்'' என்று சொல் லக்கூடாது. பயணம் புறப்படும் பொழுது ''போய் வருகிறேன்'' என்று யாரிடமும் சொல்லிக் கொள்ளக் கூடாது. எல்லாப் பொறுப்பினையும் ஐயப்பனிடம் ஒப்படைத்து அவன் திருவடி களே சரணம் என்ற பக்தியுணர்வுடன் சரணம் விளித்துப் புறப் படவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. மாலையணிந்த ஐயப்பன்மார்கள் தங்களது கடமைக்கு இடையூறு இல்லாமல் சுறுசுறுப்புடன் தங்கள் பணிகளைச் செவ்வனே செய்யவேண்டும்.

16. மாலையணிந்தது முதல் பக்தர்கள் நாள்தோறும் 108 சரணங்கள் சொல்லி காலை, மாலை வழிபட்டு, துளசி, கற்கண்டு, நாட்டுச் சர்க்கரை, பால் இவற்றுள் ஏதாவது ஒன்று சிறிதளவு வைத்து நைவேத்தியஞ் செய்து வணங்க வேண்டும்.

17. யாத்திரைப் புறப்படுவதற்குச் சில நாட்கள் முன்னதாகப் பூஜை நடத்தவேண்டும். எல்லா ஐயப்பன் பக்தர்களும் தங்கள் வீட்டிலோ அல்லது குருசாமி வீட்டிலோ, பொது இடங்களிலோ சற்று விரிவான முறையிற் கூட்டு வழிபாடு (பஜனை) நடத்தி எல்லோருக்கும் பிரசாதம் வழங்கி அருள் பெறுவது சாலச்சிறந்தது. கன்னி ஐயப்பன் அடியவர் ஒருவருக்காவது அன்னமிடுதல் மிக அருள்பாலிக்கும். கன்னி சாமிகள் சத்திக்கு ஏற்றவாறு அவசியம் வீட்டில் பூஜை நடத்துதல் வேண்டுமென்பது மரபு.

18. மரணம் போன்ற துக்க காரியங்கள் எதிலும் ஐயப்பன் அடியார்களும் அவர்கள் குடும்பத்தினரும் கலந்துக்கொள்ளக் கூடாது. தவிர்க்க முடியாத நெருங்கிய உறவில் மரணம் நேரிட்டு கலந்து கொள்ள வேண்டியிருந்தால் தான் அணிந்த மாலையைக் கழற்றி ஐயப்பன் படத்தில் மாட்டிய பிறகுதான் கலந்துகொள்ள வேண்டும். மாலையைக் கழற்ற நேர்ந்தால் மீண்டும் உடனே அணிந்து கொண்டு யாத்திரை செல்ல முற்படக்கூடாது. ஐயப்பன் திருவருளை வேண்டி மறு வருடம் சென்றுவர வேண்டும்.

19. எல்லா விரதங்களிலும் பிரம்மச்சரிய விரதம் முக்கியமானதாகும். எனவே எந்தப் பெண்ணைக் கண்டாலும் தாயென்றே கருதவேண்டும். மாதவிலக்கான பெண்களைக் காணக்கூடாது. தவறுதலாகக் காண நேர்ந்தால் உடனே நீராடி ஐயப்பனை வழிபட வேண்டும். பெண்கள் ருதுமங்களச் சடங்கு விழாவிற்கோ, குழந்தை பிறந்த வீட்டிற்கோ சென்று கலந்துகொள்ளக்கூடாது.

20. இருமுடிக்கட்டு பூஜையை தன் வீட்டிலோ, குருசாமி வீட்டிலோ, கோவில்களிலோ வைத்து நடத்த வேண்டும்.

21. குருவை அடிபணிந்து வணங்கித் தங்களால் இயன்ற தட்சணை கொடுத்து, குருவின் கரங்களால் இருமுடியைத் தலையில் ஏற்றி, வீதிக்கு வந்ததும் வாசற்படியில் விடலைத் தேங்காய் உடைத்து ஐயப்பன் சரண கோஷத்துடன் பின்னால் திரும்பிப் பார்க்காமல் ஒரே நோக்கத்துடன் பயணம் தொடரவேண்டும். யாரிடமும் போய் வருகிறேன் என்று சொல்லக் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




With Best Compliments From

**WOODLANDS HOTEL**

192, 4th Cross Street,
Colombo 11.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விராட்ம விஸ்வப்பிரமநே நம



சபரிமலை ஸ்ரீ ஐயப்பன் தீர்த்தயாத்திரைக் குழுவினர் அனைவருக்கும் சகலவிதமான இறையருள் கிடைக்க எல்லாம் வல்ல ஸ்ரீ ஐயப்பன் சுவாமி அருள்பாலிப்பாராக.

**விஸ்வ குல வாலிபர் முன்னேற்றச் சங்க அங்கத்தவர்கள்**

கூனித்தீவு - நவரெட்னபுரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22. கன்னி ஐயப்பன் அடியார்கள் யாத்திரை புறப்பட்ட நேரத்திலிருந்து ஐயப்பன் சந்நிதானஞ் செல்லும்வரை அவர்களாக இருமுடியைத் தலையிலிருந்து இறக்கிவைக்கவோ, ஏற்றிக் கொள்ளவோ கூடாது. குருநாதர் அல்லது பலமலை ஐயப்பன் அடியாரைக் கொண்டு ஏற்றவோ, இறக்கவோ வேண்டும்.

23. 12 வயதுக்குக் கீழ்ப்பட்ட சிறுமிகளும், ருதுகாலம் நின்ற வயதான பெண்களும் மட்டுமே சபரிமலை யாத்திரையில் கலந்து கொள்ளலாம்.

24. யாத்திரை வழியில் அடர்ந்த வனங்களில் காட்டு யானை, புலி, கரடி முதலான விலங்குகள் இருக்குமாதலால், பக்தர்கள் கூட்டமாகச் சரணம் விளித்துக்கொண்டே செல்ல வேண்டும். இரவு நேரங்களில் காட்டிற்குள் மலஜலத்திற்காக தனியே அதிக தூரம் செல்லக்கூடாது. சரணம் விளித்தல், சங்கு ஒலித்தல், வெடி வைத்தல் பாதுகாப்பிற்குச் சிறந்த வழிகளாகும்.

25. பம்பை நதியில் நீராடும் பொழுது மறைந்த நம் முன்னோர்களுக்கு ஈமக்கடன்கள் செய்து முன்னோர்களின் ஆத்மா சாந்தி பெற வழிவகுக்க வேண்டும்.

26. பம்பையில் சக்தி பூஜையின் போது ஐயப்பன் அடியார்கள் சமைக்கும் அடுப்பிலிருந்து சிறிதளவு சாம்பல் சேகரித்து சந்நிதி ஆழியிலிருந்து எடுக்கப்பெற்ற சாம்பலை அத்துடன் கலந்து தயாரிக்கப் பெறுவதுதான் சபரிமலை பஸ்பம் இது மிகவும் சக்தி வாய்ந்ததாகும்.

27. இருமுடியில் ஐயப்பனுக்காக கொண்டு செல்லும் நெய்த் தேங்காயை சந்நிதானத்தில் உடைத்து, அபிஷேகம் செய்து பெற்றுக் கொள்ள வேண்டும். யாத்திரை முடிந்து வீடு திரும்பியதும் இந்த நெய்யையும் விபூதி பிரசாதங்களையும் எல்லோருக்கும் கொடுக்க வேண்டும்.

28. ஐயப்பனுக்கு காணிக்கையாகச் சுற்றத்தார்களும் மற்றவர்களும் கொடுத்தனுப்பும் காணிக்கையைச் சந்நிதானத்திற் செலுத்தி, அவர்களுக்கு ஐயப்பன் திருவருள் கிடைக்க வேண்டிக்கொள்ள வேண்டும்.

29. குருசாமிக்குத் தட்சணை கொடுக்க வேண்டிய சமயங்களிலெல்லாம் ஐயப்பன் அடியார்கள் தங்கள் விருப்பியதைத் தங்கள் வசதிக்கேற்றவாறு கொடுத்துக் குருவின் அருளைப் பெறலாம். இதில் எந்தவித நிபந்தனையும் கிடையாது. ஐயப்பன் அடியார்கள் காணிக்கை எவ்வளவாக இருந்தாலும் அதை மன மகிழ்வுடன் பெரும் பொருளாக ஏற்றுக் குருவின் குருவான ஐயப்பனுக்கே செலுத்தி பேரருள் பெற்றுய்வது குருமார்களுக்குச் சாலச் சிறந்ததாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30. ஐயப்பன் அடியார்கள் எல்லோரும் குறிப்பாகக் கன்னி ஐயப்பன் அடியார்கள் பெரிய பாதையில் (அழுதை வழி) சென்று வருவது மிகுந்த பயன் விளைவிக்கும். ஆனால் சிலர் தங்கள் தொழில், கடமை, சூழ்நிலை கருதி எருமேலியிருந்து சாலக்காயம் வழியாகவும். சிலர் வண்டிப் பெரியாறு வழியாகவும் சபரிமலை செல்கிறார்கள். என்றாலும், மேற்குறிப்பிட்ட பெரிய பாதையிற் செல்லும் பொழுது மலைகளில் விளையும் பல மூலிகைகளின் சக்தி கலந்த காற்றினைப் பெறுவதாலும் பல மூலிகைகள் கலந்த ஆற்று நீரில் குளிப்பதாலும் உடல் நலம் ஏற்படுவதாலும் எழில் மிக்க இயற்கைக் காட்சிகளைக் கண்டுகளிப்பதாலும் உள்ளம் பூரிப்பதாலும் பேரின்பமும் பெருநலமும் அடைகிறோம். நீண்ட வழிப்பயணத்தில் ஐயப்பன் சரணமொழி அதிகம் விளிப்பதால் பகவானின் திருநாம உச்சரிப்பு மிகுந்த பக்தி உணர்ச்சி வளர்கிறது.

31. யாத்திரை முடிந்து வீடு திரும்பியதும் ஐயப்பனின் திருவருள் பிரசாதக் கட்டினைத் தலையில் ஏந்தியபடி வாயிற்படியில் விடலைத்தேங்காய் அடித்து வீட்டிற்குள் நுழைய வேண்டும். வழிபாட்டு அறையில் கற்பூர ஆரத்தியோடு கட்டினை அவிழ்த்துப் பூஜை செய்து பிரசாதங்களை எல்லோருக்கும் வழங்க வேண்டும்.

32. பஜனையில் பதினெட்டாம்படி பாட்டுப்பாடி கடைசியில் மங்களம் பாடவேண்டும்.

33. யாத்திரை இனிது நிறைவேறியதும் குருநாதர் மூலம் மாலையைக் கழற்றி ஐயப்பன் திருவுருவப் படத்திற்கு அணிவித்துவிட்டு விரதம் பூர்த்தி செய்து கொள்ள வேண்டும். ஐயப்பன் திருவருளால் எல்லா நலன்களும் வாய்க்கப்பெற்றுப் பல்லாண்டு இனிதுவாழ பகவான் நாமம் பாடித் துதிப்போமாக.

## மலை சென்றுவர
## மாலை அணியக் கூடாத காலங்கள்

தந்தை இறந்தால் ஒருவருட காலமும், தாய் என்றால் ஆறு மாத காலமும், மனைவி என்றால் மூன்றுமாத காலமும், சகோதரன் என்றால் ஒன்றரை மாத காலமும், புத்திரன் என்றால் ஒன்றரை மாதகாலமும், பங்காளி என்றால் ஒருமாத காலமும் மலையேறுவதும், சுப காரியங்கள் செய்வதும் கூடாது. அப்படிச் செய்ய வேண்டும் என நிர்ப்பந்தம் ஏற்பட்டால் ''விக்னவிநாயகரை பூஜித்து சாந்தி செய்து அன்னதானம் செய்து, எல்லாவித சுபகாரியங்களும் செய்யலாம்'' என்று அருளிச் செய்த ஸ்ரீ யோகீஸ்வராயாக ஏவல்கிய மகிரிஷியின் அருள்வாக்கினையே சபரிமலை ஏறுவதற்கு ஐயப்ப பக்தர்கள் கையாள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாலை தரித்துக் கொள்ளும்போது ஜெபிக்க வேண்டிய மந்திரம்

ஞான முத்ராம் சாஸ்த்ரு முத்ராம் குருமுத்ராம்
— நாமம்யஹம்
வனமுத்ராம் சுத்தமுத்ராம் ருத்ரமுத்ராம்
— நமாம்யஹம்
சாந்த முத்ராம் ஸத்யமுத்ராம் விரதமுத்ராம்
— நமாம்யஹம்
சபர்யாச்ரமஸத்யேன் முத்ராம் பாது ஸதாபிதே
குரு தக்ஷிணயா பூர்வம் தஸ்யானுக்ரஹகாரிணே
சரணாகத முத்ராக்யம் தவம் முத்ராம் தாரயாம்யஹம்
சின் முத்ராம் கேசரீ முத்ராம் பத்ர முத்ராம்
— நமாம்யஹம்
சபர்யாசல முத்ராயை நமஸ்துப்யம் நமோ நம.

## மாலை கழற்றுவதற்கான மந்திரம்

அபூர்வ மசலா ரோஹி — திவ்யதர்சன காரண
சாஸ்த்ரு முத்ராத் யஹாதேவ — தேஹி மேவிரத
— மோசனம்.

## இரு முடிகட்டுப் பூஜை

இருமுடிகட்டுப் பூஜையைத் தன் வீட்டிலோ, குருசாமி வீட்டிலோ, கோவிலிலோ, சக ஐயப்பன் அடியார் வீட்டிலோ குருநாதர் மூலம் நடத்தலாம் கன்னிச்சாமி தனித்து இருமுடியைக் கட்டுதல் தவிர்க்க வேண்டும்.

## சாஸ்த்தாவின் நந்தவனம்

(பெருவழிப் பாதையின் பெருமையும் வழிபாடுகளும்)

சபரிமலைக்குச் செல்லும் பாதையில் எருமேலியிலிருந்து நடந்து செல்லும் பெருவழிப் பாதையே சாஸ்த்தாவின் நந்தவனமென மிகச் சிறப்பு வாய்ந்தது. சாலக்காயம் குறுக்குப்பாதை சமீபத்தில் திறக்கப்பட்டது. அடுத்து, வண்டிப் பெரியார் எனும் இன்னும் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதையே, பகவான் ஐயப்பனே இருமுடி சுமந்து சன்னதிக்கு எருமேலி வழியாகத் தான் நடந்து சென்றதாகப் புராணங்கள் கூறுகின்றன.

முதன் முதலாக மலைக்குச் செல்லும் கன்னி ஐயப்பன் அடியார்கள் இந்த பெருவழி பாதை (48 மைல்) வழியாகச் செல்வதே சாலச் சிறந்தது. மலைப் பயணத்தை தொடங்கும் பக்தர்கள் அனைவரும் கூடும் இடம் எருமேலியே. இங்கு பேட்டைத்துள்ளல் எனும் முக்கிய சடங்கினை நடத்தி உடல் முழுவதும் பல வண்ணப் பொடிகளைப் பூசிக்கொண்டு தலையிலும் உடம்பிலும் இலை தழைகளைக் கட்டிக்கொண்டு மரத்தாலான அம்பு, வில், கத்தி போன்ற ஆயுதங்களைக் கையிலேந்திய வண்ணம் ஐயப்பன் அடியார்கள் அனைவரும் ''சாமி திந்தக்கத்தோம் ஐயப்பத் திந்தக்கத்தோம்'' என மேளவாத்தியங்களுடன் துள்ளிக் குதித்து ஆடி ஒரு சிறு கம்பில் துணியைக் கட்டி அதனுள் காய்கறிகள், பழம் முதலியவற்றை நிரப்பி தூக்கிக்கொண்டு முதலில் கோட்டை வாசல் எனும் சாஸ்த் தாவின் சந்நிதியை வலம் வந்து பின்பு வாவரின் பள்ளிவாசலை வழிபட்ட பிறகு எருமேலி ஸ்ரீ தர்மசாஸ்தா சந்நிதியை அடைந்து வழிபட்ட பின்னே அவர்கள் உடலிலுள்ள இழைத்தழைகளை சந் நிதிமுன் போட்டு அருகிலுள்ள ஆற்றில் நீராடி இச்சடங்கை இனிது முடிக்கின்றனர். இது கெட்ட எண்ணங்களை எதிர்த்து வேட்டை ஆடுவதைக் குறிக்கிறது. இதனால், மனிதனின் ஆணவம், கர்வம் முதலியன அழிகின்றன. பேட்டைத்துள்ளும் போது தங்கள் கையில் வைத்திருந்த மரத்தாலான ஆயுதங்களைத் தங்களுடன் யாத்திரை யின்போது எடுத்துச் செல்கிறார்கள். அதன் பின் யாத்திரையின் முதல் கட்டம் ஆரம்பமாகிறது.

இங்கிருந்து இருமுடியை ஏந்தி வனயாத்திரை புறப்படுகின்றனர். சாஸ்த்தாவின் நந்தவனத்தில் பேரூர்த்தோடு எனும் இடத்தை அடைந்து இங்கு சற்று ஓய்வெடுத்து அங்குள்ள சிற்றாறில் பொரி போட்டு அங்கிருந்து புறப்பட்டு காளைக்கட்டி எனும் இடத்தை வந்தடைகின்றனர். இந்த காளைக் கட்டி எனும் இடத்தில் ஐயப்பன் அமர்ந்திருந்த ஒரு கல் உள்ளது. இதனை வழிபட்டு அங்குள்ள மகேஸ்வரன் கோவிலையும் வலம் வந்து, சற்று ஓய்வெடுத்த பின் ஒரு சிறிய ஏற்றம் ஏறியதும் அழுதா நதியை வந்தடைகின்றனர். அழுதையாற்றின் கரையில் தாவளங்களை அமைத்து ஓய்வெடுத்து ஆற்றில் நீராடி உணவுகள் சமைத்து உண்ட பின் பஜனைகள் செய்து இரவு இங்கு தங்கி மறுநாட் காலையில் அழுத மலை ஏற்றம் ஏறும்முன் ஆற்றில் ஒரு கல்லையும் எடுத்துக்கொண்டு உயர்ந்த மழையினை ஏறிச் செல்கின்றனர். மலையின் உச்சியை அடைந்ததும் கல்லிடும் குன்று எனும் இடத்தில் (இஞ்சிப்பாறைக் கோட்டை) அழுதா நதியில் எடுத்து வந்த கல்லினைப் போட்டு கற்பூரம் ஏற்றி வணங்கிய பின் உடும்பாறைக் கோட்டை இலவந் தோடு எனும் வழியாக கரியிலந்தோடு வந்தடைகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு ஓய்வெடுத்து இங்குள்ள குளிர்ந்த நீர்ச்சுனையில் நீராடி உணவு தயாரித்து உண்ட பின் பஜனைகள் செய்து இரவு தங்கிவிடு கின்றனர். மறுநாட் காலை கரிமலை ஏற்றம் என்று அழைக்கப்படும் கருமண் நிறைந்த செங்குத்தான உயரமான மலையை சாஸ்த்தா வின் அருளோடு சரணம் கூவிக்கொண்டே உச்சியை வந்தடைவார் கள். இங்கு கரிமலை தேவன், பகவதி ஆகியோரை வலம் வந்து சற்று ஓய்வெடுத்த பின், கரிமலை இறக்கம் இறங்கிச் செல்கின் றனர், பெரியானை வட்டம், சிறியானை வட்டம், என்று அழைக் கப்படும் யானைகள் அதிகம் நிறைந்த இவ்வழியாக புனித பம்பைக் கரையை வந்தடைகின்றனர் பம்பை நதியைக் கண்டவுடன் ஐயப்பன் மார்கள் அடையும் மகிழ்ச்சி அளவற்றது.

இங்கு வந்தடைந்த ஐயப்பன்மார்கள் நதியோரம் தாவளங்களை அமைத்து இரண்டு நாட்கள் தங்குகின்றனர். இங்கு பம்பா சக்தி எனும் பூஜை மிகவும் விரிவான முறையில் நடத்தப்படுகின்றது. மதிய உணவு மிகச் சிறப்பாக பெரும் விருந்தாக செய்து பூஜை செய்கிறார்கள். பின் பெரிய அப்பளம், வடை ஆகியவற்றை பெரிய மரங்களில் கட்டித் தொங்க விடுகிறார்கள். இவை வன தேவதைகளுக்கும் பூதகணங்களுக்கும் படைக்கப்படுவதாக கருதப் படுகின்றது. யார் வந்தாலும் வயிறு புடைக்க அன்னதானம் இட்டு மகிழ்கிறார்கள். இது சக்தி பூஜையெனப் போற்றப்படுகிறது. பின் கன்னிச் சாமிகளை 108 வெவ்வேறு அடுப்புகளிலிருந்து சாம்பளை எடுத்து வருபடி குருசாமி ஆணையிடுகிறார். அதன்படி எல்லாக் கன்னிச் சாமிகளும் கொண்டுவந்த சாம்பளை ஒன்றாக சேர்த்து வைத்துக்கொள்கின்றார். பின் மூங்கிலினால் ரதம் போன்ற சப்பரங் கள் செய்து அதில் தீபங்கள் ஏற்றி பஜனைகள் செய்த வண்ணம் அதனை தூக்கிக்கொண்டு வலம் வந்து பம்பை ஆற்றின் நீரில் மிதக்கவிடுகிறார்கள். அமைதியாகச் செல்லும் பம்பை நதியில் இந்த தீப ஜோதி ரதம் அழகாக அசைந்து அசைந்து சென்று நதியின் போக்கில் மறைந்துவிடுகின்றது. இதையே பம்பா விளக்கென்று அழைக்கின்றனர். பம்பை ஆற்றில் பித்ரு தர்ப்பணமும் முன்னோர் களுக்கு வழிபாடும் ஒவ்வொருவரும் தவறாமல் செய்யவேண்டிய சடங்குகளாகும். இச் சடங்குகள் அனைத்தும் முடிந்தபின் ஆற்றை ஒட்டியுள்ள இராமர் பாதம் என்று அழைக்கப்படும் படிக்கட்டுகளில் ஏறி உச்சியை அடைகின்றனர்.

அங்கு விநாயகர், முருகன், ஆஞ்சநேயர், இராமபிரான், ஆதி பராசக்தி, நாகராஜா ஆகிய தெய்வங்களுக்கு அமைத்துள்ள கோயில்களை வணங்கி கற்பூரம் ஏற்றி வலம் வந்தபின் நீலி மலையை நோக்கிச் செல்கின்றனர். நீலிமலை அடிவாரத்தில் ஏறு முன் இரண்டு பச்சிலைகளைப் பிய்த்துப்போட்டு மலையை வணங்கி ஏறுகின்றனர். நீலிமலை ஏற்றத்தில் பகவான் எல்லோரையும் நிற்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்துப் பார்க்கிறார். இதுவும் ஒரு கடினமான ஏற்றமே. சற்றுத் தூரம் சென்றதும் அப்பாச்சி மேடு என்று அழைக்கப்படும் இடத்தில் இளைபாறி அதன்பின், இப்பாச்சிக் குழியை வந்தடைகின்றனர். இங்கு பொரியினால் செய்யப்பட்ட ஒரு உருண்டையை இப்பாச்சிக் குழியில் போடுகின்றனர். இப்பாச்சிக் குழியை கடந்து சென்றதும், சபரிபீடம் எனும் இடத்தை அடைகின்றனர். இங்கு சபரி அன்னைக்கு ஒரு பீடம் உள்ளது இதில் தேங்காய் உடைத்து கற்பூரம் ஏற்றி வணங்கி வலம் வந்தபின் சரங்குத்தி ஆல் எனும் இடத்தை வந்து சேருகின்றனர் இங்கு பேட்டைத்துள்ளும் போது வைத்திருந்த மரத்தினாலான ஆயுதங்களைப் போட்டு வழிபட்டபின் சிறிய இறக்கம் இறங்கியதும் பகவானின் சந்நிதியை அடைகின்றனர்.

சந்நிதியின் எதிரில் ஓமகுண்டம் மிகவும் உக்கிரமாக பிரகாசித்து எரிந்து கொண்டிருக்கிறது. இதைக் கடந்து சென்றவுடன் சத்தியமான பொன்னு பதினெட்டாம் படிகளை அடைகின்றனர். இப்படிகள் குறுகியதாகவும் செங்குத்தாகவும் இருக்கும் படியின் வலது பக்கத்தில் கருப்பன்ன ஸ்வாமியும், இடப்பக்கத்தில் கடுத்த ஸ்வாமியும் காவல் தெய்வங்களாக இருக்கின்றன. படிகளில் ஏறுமுன் கன்னி ஐயப்பன் அடியார்கள் முதலாவது படியிலும் ஏனைய ஐயப்பன் அடியார்கள் தாங்கள் மலைக்குவரும் வருடஎண்ணிக்கையை வைத்தும் படிகளில் தேங்காய் உடைத்து பதினெட்டு படியின் உச்சியை அடைந்ததும் தங்கத்தினாலான கொடுமரத்தை வணங்கி வலப்புறமாகச்சென்று கன்னிமூலையில் கணபதி மற்றும் நாகராஜா ஆகிய தெய்வங்களை வணங்கி மூலஸ்தானத்திலுள்ள ஸ்ரீ தர்மசாஸ்தாவாகிய ஐயப்பனை மனம் குளிரக் கண்டு வணங்கிய பின் வடக்கு அல்லது மேற்கு வாயிலாக அமைத்துள்ள படிகளில் கீழே இறங்குகின்றனர்.

பின் வாயுக்கோணத்தில் மாளிகைப்புறத்தம்மனும் நாகர் கொச்சிகடுத்தை ஆகியோரை வலம் வந்து வடக்கு பக்கத்தில் வாவர் ஸ்வாமி மற்றும் நவக்கிரகங்கள் ஆகியவற்றை வணங்கி வலம் வந்தபின் அங்குள்ள தாவளம் ஒன்றை அடைந்து குருவின் உதவியுடன் இருமுடியை கீழே இறக்கி பூஜை செய்த பின் இருமுடிக் கட்டைப் பிரித்து நெய்தேங்காயை உடைத்து ஒரு பாத்திரத்தில் நெய்யை எடுத்து அபிஷேகச் சீட்டு வாங்கி ஐயன் சந்நிதியில் கொடுத்து அபிஷேகம் செய்து பெற்றுக் கொள்கின்றனர், மற்றும் இருமுடி கட்டிலுள்ள அனைத்து அபிஷேகம் பொருள்களையும் குருசுவாமி துணைகொண்டு ஏனைய தெய்வங்களுக்கு வழிபாடு செய்கின்றனர்.

பம்பை சக்தி பூஜையில் சேகரிக்கப்பட்ட நூற்றி எட்டு (108) அடுப்புச் சாம்பலையும் சந்நிதி ஆழியிலிருந்து எடுக்கும் சாம்பலையும் குருசுவாமி ஒரு பாத்திரத்தில் அதைப் போட்டு பன்னீருற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழைந்து அதில் கற்பூரம் ஏற்றி சந்நிதியை வலம் வந்து பின் ஐயப்பன் அடியார்களுக்கு வழங்குகிறார். இதைத்தான் சபரிமலை பஸ்பம் என்று அழைப்பார்கள். இது மிகவும் சக்தி வாய்ந்தது. மருத்துவ குணங்கள் நிறைந்த பஸ்பம் ஆகும். உடல்நலக் குறைவு காய்ச்சல், தீராத வயிற்றுவலி மற்றும் சரும நோய்கள் யாவற்றிற் கும் இதை அணிந்து கொண்டாலும் நீரிலிட்டு அருந்தினாலும் உடனே போக்கவல்லது. இத்தகைய சிறப்புமிகு திருநீற்றினை அணிந்து வாழ்வில் எல்லாவித நலமும் பெற்றுப்பல்லாண்டு இனிது வாழ்வோமாக.

## மண்டல பூஜையும்
## ஐயனின் தங்கக் கவசமும்

கார்த்திகை மாதம் முதல் திகதி தொடக்கம் சந்நிதானம் தொடர்ச்சியாக மண்டல பூஜைக்காக 41 நாள் (ஒரு மண்டலம்) பூஜைகள், வழிபாடுகள், பஜனைகளும் நடந்த வண்ணமிருக்கும். நெய் அபிஷேகம் காலை 5 மணி முதல் பகல் 1 மணிவரை நடை பெறும். மாலை நேர தீபாராதனையின் போது சுவாமிக்கு தினசரி ரத்தினக்கிரீடம் அணிவிப்பார்கள். மார்கழி மாதம் மண்டல பூஜை இரண்டு நாட்களுக்கு முன்பே ஐயப்பனுக்கு சமர்பிக்கவேண்டிய தங்க கவசம் அரண்மனை கோவிலிலிருந்து ஒரு அலங்காரத் தேரில் ஆயிரக்கணக்கான ஐயப்பன் அடியார்கள் சூழந்துவர ஊர்வலம் மண்டல பூஜை அன்று (பகல்) சுமார் 2 மணி அளவில் பம்பை நதிக்கரையை வந்தடைந்து, பின் நீலிமலை அடிவாரத்திலுள்ள கணபதி கோவில் முன் பக்தன்மார் தரிசனத்திற்காக வைக்கப்படு கிறது. இந்த சமயம் ஒரு கருடன் (கிருஸ்ண பருந்து) கணபதி கோவிலின் மேலே வட்டமிட ஆரம்பிக்கிறது. இது பக்தருக்கு கண் கொள்ளாக் காட்சி ஆகும்.

இலட்சக்கணக்கான பக்தர்கள் கூடும் பம்பையில் சாதாரண மான காகம் போன்ற பறவைகள் கூட காண முடியாத போது கருடப் பறவை மட்டும் காண்பது தெய்வத்தின் கண்கண்ட காட்சி யாக நமக்கு புலப்படுகிறது. சுமார் 4 மணி அளவில் கவசப்பெட்டி ஒரு ஐயப்பன் அடியார் மீது தலைச் சுமையாக சந்நிதானத்தை நோக்கிப் புறப்பட பக்தன்மாரும் பின் தொடர கருடனும் மேலே வட்டமிட்ட வண்ணம் சுமார் 5.45 மணி அளவில் சந்நிதியை வந் தடைகிறது. கோவில் மேல் சாந்தியும் உதவியாளர்களும் கவசப் பெட்டியை பெற்று கருவறைக்குள் எடுத்துச் சென்று கதவுகள் அடைக்கப்படுகின்றன. உள்ளே சுவாமிக்கு கவசத்தை அணிவித்து புஸ்பலங்காரம் செய்து 6.30 மணி அளவில் மகா தீபாராதனைக் காக கதவுகள் திறக்கப்படுகின்றன. அச்சமயம் கோவிலைச் சுற்றி யுள்ள மணிகள் ஒலிக்க இலட்சக் கணக்கான பக்தன்மார் சேர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுப்பும் சரண கோஷம் வானத்தையே பிளத்துவிடும்போல் இருக்கும். அந்த நேரம் வரை கருடன் கோவிலின் மேல் வட்டமிட்ட வண்ணமே இருக்கும்.

## உற்சவம்

மண்டல பூஜைக் காலத்தில் கார்த்திகை மாதம் அஸ்த்த நட்சத்திரத்தன்று தங்கக் கொடிமரத்தில் கொடி ஏற்றி, 10 தினங்கள் விசேஷ பூஜைகள், சடங்குகள், அலங்காரங்கள் மற்றும் இன்னிசைக் கச்சேரிகள் போன்ற நிகழ்ச்சிகள் நடந்துகொண்டேயிருக்கும். 10-ம் நாள் காலை ஸ்ரீ தர்மசாஸ்த்தாவை ஆராட்டு எனம்படும். நீராட்டலுக்காக பஞ்சவாத்தியம், நாதஸ்வரம் முதலிய வாத்தியங்களுடன் ஊர்வலமாக சுமந்து கொண்டு பம்பைக்கரையில் அதற்கென அமைந்துள்ள நீராட்டுத் துறையை வந்தடைகிறார்கள். பம்பையில் நீராட்டம் செய்வித்து மாலை தீபாராதனைக்குள் சந்நிதானம் சென்றடைவர். இது மிகவும் விசேஷமான காட்சியாகும்.

## மகரஜோதியும் ஐயப்பன் திருவாபரணங்களும்

சபரிமலையில் திருவிழாக்களில் பக்தர்கள் பெருவெள்ளம் கூடுவது மகரசங்கராந்தியன்று. இன்று தான் ஐயன் ஐயப்பன் காந்த மலையில் ஜோதியாய்க் காட்சி தருகிறார். இதையே மகர விளக்கு மகரஜோதி என்று அழைக்கப்படுகின்றனர். ஜோதி தரிசனம் கிடைக்க வேண்டுமானால், சுவாமிக்கு பந்தள அரண்மனையிலிருந்து கொண்டுவரும் சுவாமியின் திருவாபரணங்கள் கட்டாயம் சுவாமிக்கு அணிவிக்கப் பட்டிருக்க வேண்டும். இந்தப் புனிதமான திருவாபரணங்கள் அடங்கிய பெட்டி பந்தள அரண்மனையிலிருந்து மகரஜோதி அன்று சந்நிதானம் வந்து சேருகின்றன அத்திருவாபரணம் பந்தள அரண்மனையிலிருந்து புறப்பட்டு சந்நிதானம் வந்தடையும் வரை வானத்தில் ஒரு கருடன் (கிருஸ்ண பருந்து) வட்டமிட்டவண்ணமே வரும் இந்த புனித திருவாபரணங்களைச் சுமந்துவரும் அதிகாரிகளும் சுத்த பிரம்மச்சரிய விரதம் அனுஷ்டித்தவர்களே கடமைக்காக அல்லாது ஆத்மார்த்தமான பக்தியுடன் சேவை செய்கின்றனர் பந்தள அரண்மனையிலிருந்து நடையாகவே இதை சுமந்து வருகின்றனர். வழி நெடுகிலும் ஆங்காங்கு மிகச் சிறப்பான வரவேற்புகளையும், ஏராளமான காணிக்கைகளையும் பெற்றுக்கொண்டு மகரஜோதியன்று சந்நிதியை மாலை சுமார் 5.30 மணியளவில் வந்தடைந்து, பதினெட்டாம் படி வழியாக ஏறி உச்சியை அடைந்ததும் மேல் சாந்தியும், தந்திரியும் உதவியாளர்களும் திருவாபரணங்களைப் பெற்று மூலஸ்தானத்தினுள் எடுத்துச் சென்று பகவானுக்கு திருவாபரணங்களை அணிவிக்கின்றனர். சுமார் 6 45 மணி அளவில் கருவறையின் கதவுகள் மகா தீபாராதனைக்காக திறக்கப்படுகின



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றன. அந்த சமயத்தில் கோயிலைச் சுற்றிக் கட்டியுள்ள மணிகள் அடிக்கும் சத்தம் கேட்கும். இந்த நேரத்தில் காத்து நிற்கும் இலட்சக்கணக்கான பக்தன்மாரின் ஏகோபித்த சரணம் ஐயப்பா எனும் ஒலி காந்தமலைக்கு அப்பாலும் எட்டக்கூடும். தீபாராதனையைக் கண்டவுடன் பக்தன்மார் சந்நிதானத்திற்கு வட கிழக்குத் திசையில் காந்தமலையில் அமைந்துள்ள பொன்னம்பல மேட்டை சரணக் கோஷத்துடனே உற்று நோக்குவர். திடீரென்று அங்கு ஒரு தீபம் (ஒளி அல்லது ஜோதி) சிறிதாக தோன்றி வரவர பெரிதாகச் செந்தனல் வடிவத்தில் கற்பூர ஆராத்தி செய்வதுபோல் வட்டமாக சுமார் 5 நிமிடங்கள் வரையில் ஆகாயத்தில் தெரிகிறது. இந்த மகர ஜோதியை தரிசனம் கண்டவுடன் பம்பையிலிருந்து சந்நிதானம் வரை சுமார் இருபது இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் எழுப்பும் சரண ஒலியும், பக்தன்மார் ஆவேசத்தையும், எழுத்தில் எழுத முடியாததொரு செயலாகும். ஜோதிஸ்வரூபனான சபரிமலை ஸ்ரீ ஐயப்ப சுவாமியை வழிப்பட்டு பெருமானின் அருளால் எல்லா மங்களங்களையும் அடைவீர்களாக.

**ஜோதிஸ்வர ரூபனே சரணம் ஐயப்பா !**

# நெய் தேங்காயின் மகிமை
# இருமுடியின் தத்துவம்

**விருத்தம்**

தேங்காயில் நெய்யடைத்து வரச் சொன்னதின்
பாங்கதனை எண்ணியென்மனம் விந்தைமிகு கொள்ளுதையா
தேகமாம் தேங்காய்தனின் அறிவெனும் ஒளியால்
நெற்றிக் கண் திறந்து அன்பெனும் தூய
நெய் வார்த்து சித்தமெனும் முத்திரை வைத்து
நீயும் வந்தால் அருட்காட்சி தருவேன்
என்று சொன்னதை நினைத்தால் என்றும்
இதயத் தாமரை தனில் இன்பத்தேன் ஊறுகின்றது.

மாலை அணிந்து விரதமிருந்து சபரிமலை செல்லும் ஐயப்பன்மார் அனைவரும் இருமுடி ஏந்திச் செல்லவேண்டும். ஆம்: தத்தமது இருமுடியை தாமே தலைமீது சுமந்து செல்லவேண்டும். இறைவனின் சன்னிதியில் அவரவர்க்கு அவர்களே வேலையாட்கள், எவரும் எவருக்கும் வேலையாள் இல்லை. உயர்ந்தவர். தாழ்ந்தவர் என்ற வித்தியாசமில்லாது எல்லோரும் ஓர்குலம், எல்லோரும் ஓர் நிறை என்ற மகத்தான தத்துவத்தை உணர்த்துகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருமுடியில் புனிதமான முன் முடியில் பகவானுக்குரிய பூஜை பொருட்கள் நிரப்பப்படுகின்றன. பின் முடியில் நமக்குத் தேவை யான உணவுப் பொருட்களும் நிரப்பப்படுகின்றன. இதில் முக்கியத் துவம் வாய்ந்தது பகவானுக்கு நெய் நிரப்பிய தேங்காய்தான். தேங்காய் என்பது மனித உடலை குறிக்கும்; அதில் நிரப்பப்பெற்ற நெய் உடலில் நிறைந்துள்ள உயிரைக் குறிக்கும்; இருமுடியின் முன்முடி மனிதனையும், பின்முடி அவன் ஆசாபாசங்களை குறிக்கும் ஐயப்பன்மார் இருமுடி தாங்கி வீட்டிலிருந்து புறப்படும்போது பின் முடியின் சுமை கனமாகவும் பெரிதாகவும் இருக்கும்.

இவை வழிநெடுகிலும் தங்கும் தாவளங்களில் தேவையான வற்றை சிறுக சிறுக எடுத்து செல்லச் செல்ல பின்முடியின் சுமை குறைந்து கொண்டேவரும், சந்நிதியை நெருங்க முழுவதுமாக குறைந்து சிறிதாகி சுமையும் குறைந்துவிடும். ஆனால் முன்முடி மட்டும் அப்படியே அளவு குறையாது இருக்கும். இவை சத்திய மான பதினென் திருப்படிகள் கடந்து தாரகபிரமமாகி பகவான் ஸ்ரீ ஐயப்பனுக்கு அபிஷேக ஆராதனைகள் செய்யும்போது முழுவது மாக குறைந்து மறைந்துபோகும். இதன் பொருள் பாவச் சுமை யாகிய பின்முடி வழிநெடுகிலும் சுமை குறைந்து சந்நிதியை அடை யும் போது முழுவதுமாக குறைந்து பகவானின் தரிசனம் பெற்றதும் பாவங்கள் தீர்ந்து அழிந்து போவதை உணர்கிறோம். ஆனால் முன் முடியாகிய இறைவனின் அருள் மட்டும் யாத்திரையின்போது குறையாமல் நிலைத்து நம்முடன் கூடவே துணைவந்து வழிகாட்டி அபிஷேக ஆராதனைகள் பகவானுக்கு செய்யும்போது தான் ஐயனு டன் ஐக்கியமாகி நிறைபெறுகின்றது.

**இருமுடி சுமந்து சென்றால் வாழ்வில்**
**இருளை அகற்றிடுவான் ஜோதிஸ்வரூபன்**

✶

# எச்சில் இலைக்கு ஐயப்பன் அருளிய பெருமை

சபரிமலை ஸ்ரீ ஐயப்பன் வழிபாட்டில் கன்னிச்சாமிகள் அவரவர் சக்திக்கேற்ற சக்தி பூஜை நடத்துவது மரபு. ஐயப்பன்மார் சாப் பிட்ட எச்சில் இலைகளை எடுத்து போடுவதில் மிக்க புண்ணியம் கிடைக்கும் என்று கருதுகிறார்கள். இது பம்பையில் நடத்தப்படும் சக்தி பூஜையில் எச்சில் இலை எடுப்பது மிகவும் புண்ணியம் தரும். பம்பா சக்தி ஐயப்பன்மார்கள் பெரும் விருந்தாக தயார் செய்து வன தேவதைகளுக்கு படைத்து அப்பளம் வடை போன்றவற்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கியிருக்கும் தாவளத்தின் உயரத்தில் கட்டி தொங்கவிட அதை காணும் ஐயப்பன்மார் தாமாகவே சக்தி எனும் விருந்துக்கு வருவது இவையனைத்தும் மனதை பூரிப்படையச் செய்கிறது. இதில் முக்கியத்துவம் வாய்ந்தது பம்பா சக்தி ஏலத்தில் விடுவது வசதியுள்ளோரே மிகவும் உயர்வாக ஏலம் கேட்டு எடுக்கின்றனர். ஆனால் கன்னிச்சாமிமார்கள் அனைவருக்கும் எச்சில் இலைகளை பகிர்ந்து எடுக்கும் வண்ணம் செய்வதே நன்மையாகும்.

ஏலத்தில் கிடைக்கும் பணத்தை சபரிமலை ஸ்ரீ ஐயப்பனுக்கு காணிக்கையாக உண்டியலில் செலுத்திவிடுவார்கள். சிலர் மலைப் பயணத்தில் ஏற்படும் பொதுச் செலவுக்கு பயன்படுத்துகின்றனர்; தானதருமங்களை செய்கின்றனர்.

**எங்கள் குல தெய்வம், எங்கும் நிறைந்தவன்**
**ஏழைப்பங்காளன்,**

★

# வேட்டைதுள்ளலின் பொருள் என்ன?

பகவான் ஸ்ரீ ஐயப்பதேவன் நம்மை எருமேலியில் வேட்டையாடச் சொன்னார், எதை வேட்டையாடச் சொன்னார்? நம் உள்ளத்தில் உலாவித்திரியும் (காமம், மோகம், லோபம் மதம் மாற்சரியம்) என்ற ஆசை மிருகங்களை வேட்டையாடச் சொன்னார். ஆயுதம் இல்லாமல் வேட்டையாட முடியுமா? அம்பு கொண்டு மிருகங்களை அழிக்கச் சொன்னார். எந்த அம்பு? அம்பு என்றால் - சரம். சரம் என்றால் - வாசி. வாசி என்றால் - பிராணவாயு. சரம் என்ற அம்பு மட்டும் இருந்தால் போதுமா? வில் வேண்டுமல்லவா? வில் எங்கே? நெற்றியில் இரு புருவங்களுக்கும் ஊடே சுழுமுனை வில்லில் அம்பை பூட்டவேண்டும்! வில் வளைத்து அம்பூட்டி பெய்தால் ஆசை மிருகங்கள் நிச்சயம் அழிந்துவிடும். நாம் வேட்டையாடத் துவங்கும்போது ஐந்து வர்ணமுள்ள சாயப் பொடியை பூசுகிறோம். அதன் உட்பொருள் என்ன பச்சை, சிகப்பு, வெள்ளை, கருப்பு, நீலம், இவ்வர்ணங்கள் பஞ்ச பூதங்களையும் (மண், நீர், தீ, காற்று, ஆகாயம்) பஞ்சேந்திரியங்களையும் (மெய், வாய், கண், மூக்கு, செவி) குறிக்கும். அலைந்து திரியும் பஞ்சேந்திரியங்களை அலைந்து திரியும்படி விடாமல் ஒன்று சேர்த்தலின் தத்துவமே பஞ்சவர்ணப் பொடி பூசுதல். ஐந்து வர்ணங்களுக்கும் உவமானமாக ஐந்து இந்திரியங்களை சொன்னோம். அந்த இந்திரியங்கள் நம்மை எப்படி எல்லாம் ஆட்டிப் படைக்கின்றன என்பதை கவனிப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1-வது மெய் - என்ற உடம்பு பல்வேறு உணர்ச்சிகளில் சுகம் மாண விரும்புகின்றது.

2-வது வாய் - ருசிமிக்க பண்டங்களை உண்ண விரும்புகிறது.

3-வது கண் - பல காட்சிகளை வசம் சென்று உலாவுகிறது.

4-வது மூக்கு - சுகத்தையே நாடித்திரிகிறது.

5-வது செவி - அளவில்லாத சப்தங்களைக் கிரகிக்கிறது.

இவை ஐந்தும் ஜீவனாகிய ஆன்மாவுக்கு நன்மை செய்கின்றனவா என்றால் இல்லை. ஏன்? அவை தன்னிஷ்டம் போல் திரிந்து விகார உணர்ச்சிகளில் வீழ்ந்து உண்ணவேண்டாத உணவுகளை உண்டு, மதம் கொண்டு பார்க்கத்தகாத காட்சிகளை பார்த்து, நுகரத் தகாத மணங்களை அவைகளின் வழியே செல்கின்ற இந்திரியங்களை அவை வழி செல்லாது நல்வழி செயல்படுத்தலே பஞ்சவர்ணப் பொடி பூசுவதின் தத்வமாகும் பஞ்சேந்திரியங்கள் ஒருமைப்பாடுடன் விளங்குதலே சுவாமியை அடையும் வழி. பஞ்சேந்திரிய ஒருமை பாடுடன் அம்பு என்ற சரத்தைக் கையில் பிடித்துக்கொண்டு எருமேலி, காளைகட்டி, உடும்பாறை, கரிமலை, சபரிபீடம், சரங்குற்றி வழியாகச் சென்று சுவாமியைக் காணவேண்டும், இந்த கோட்டை வாசல் ஆறும் ஆறு ஆதாரதத்துவங்களாகும்.

| கோட்டை வாசல் | ஆதாரங்கள் |
|---|---|
| 1-வது எருமேலி | மூலாதாரம் |
| 2-வது காளைகட்டி | சுவாதிஷ்டானம் |
| 3-வது உடும்பாறை | மணிபூரகம் |
| 4-வது கரிமலை | அனாகதம் |
| 5-வது சபரிபீடம் | விசுத்தி |
| 6-வது சரங்குற்றி | சுழுமுனை |
| 7-வது பொன்னம்பலம் | சஹஸ்த்ரார தளம் |

இறைவனாகிய பூதநாதன் இருக்கும் துரியாதீதவெளி ஆதாரங் களின் வழி சென்று சரம் என்ற பிராணவாயுவான அம்பு சரங்குற்றி யென்ற சுழிமுனையில் வைக்கப்படுகிறது. அதன் பிறகே துரியங் கடந்து துரியாதீத வெளியில் விளங்கும் சுவாமியின் பொருள் கிடைக்கப் பெறுகிறது. உடம்பே சபரிமலை. நம் உடம்பில் உறை யும் ஈசனை ஆதாரங்களின் வழிசென்று கண்டு ஆனந்தம் அடை கிறோம். எருமேலி, காளைகட்டி, உடும்பாறை, கரிமலை, சபரி பீடம், சரங்குற்றி வழியாகச் சென்று சுவாமியைத் தரிசித்து அருள் பெறுவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாத பூஜை எதற்காக ?

குருமார்களுக்கு பாத பூஜைசெய்வது இந்துக்களின் பண்பாடு மேலான பரம்பொருளை நாம் அடைவதற்கு மார்க்கமாக இருந்து உதவுபவர்கள்தான் குருமார்கள். அந்த மேலான பரம்பொருள் எது வென்று நமக்குத் தெரியாது. ஆனால் அதனை நோக்கி நம்மை நிச்சயமாக குருநாதர் வழிநடத்திச் செல்வார் என்பது மட்டும் நமக்கு நன்றாக தெரிகிறது. மேலே உள்ள பொருள் தெரியாது. ஆனால் அந்த மேலான பொருளுக்கு நம்மை இட்டுச் செல்பவரின் பாதங்கள் கண் கூடாகத் தெரிகின்றன. மேலான பொருளை மன தில் தியானித்து கண்கூடாகத் தெரியும் குருவின் அந்த மேலான பொருளின் குறியீடாகக் கருதி அவற்றிற்கு பூஜை செய்கிறோம் நாம் பாத பூஜை செய்யும்போது குருநாதரும் அந்த பாத பூஜை தனது பாதங்களுக்குகாகத்தான் செய்யப்படுகின்றதென்று கருதுவ தில்லை. தன் பாதங்களுக்கு செய்யப்படும் பூஜை எல்லாம் அவர் தான் உணர்ந்துள்ள மேலான பரம்பொருளுக்கு சமர்பணம் செய்து விடுவார். ஆணவம் என்ற வேண்டாத குணத்திலிருந்து நம்மை விடுவிக்கும் ஓர் அற்புதமான நடைமுறைதான் பாத பூஜை.

## ஐயப்பன் அருள் பெற சித்தம் உருகவேண்டும்

மெய்யன்பர்களே ! நாம் ஸ்ரீ ஐயப்ப தேவனின் அருள் பெற்று அவன் அருள் ஜோதியில் கலந்து ஆனந்த நிலைபெற வேண்டுமா னால், மனம் என்னும் நிலமாகிய இடத்தில் பகவான் திருநாம மாகிய (சாமியே சரணம் ஐயப்பா சரணம்) ஊற்று ஊற வேண் டும். அதாவது மனம் இடைவிடாது சுவாமியின் திருநாமம் ஜெபிக்க வேண்டும். நல்ல இடத்தில் தோன்றிய ஊற்று பொங்கித்ததும்புகின் றது. அதுபோல் நல்ல மனதில் ( காமம், மோகம், இச்சையற்ற ) இறைவன் அருள் ஊறுகிறது. மனிதன் எவ்வளவு திறமை உள்ள வனாக இருந்தாலும் சித்தம் உருகவேண்டும்.

உருகவில்லையேல் மேலான தவமும் நிற்பது கடினம். மனதில் தோன்றிய அருள் நாம ஊற்று நற்சிந்தை (சித்தம்) வழியாக அறிவெனும் குளத்தில் நிரப்பப்படல் வேண்டும். அறிவுதிருவருள் நிலையடைந்தால் ஞானம் கிடைக்கும்.

ஞானம் அடைந்தால் ஆத்மாவாகிய ஜீவன் புனிதமாகி அருள் ஜோதியில் கலந்து ஆனந்தம் அடையும் ஊற்று பெருகி ஓடைவழி வந்து நிறைந்து மடை திறக்கப்படவுன் வயலில் பாய்ந்து விளைந்து நெல்மணிகள் கொடுக்கப்பெறுமாறு போல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனதால் இறைவன் நாமம் ஜெபிக்க வேண்டும்
சிந்தைவழி செலுத்த வேண்டும்
அறிவு பெருகிடல் வேண்டும்
ஞானம் நிறைந்திடல் வேண்டும்
ஆத்மா புனிதமாகிடல் வேண்டும்
அருள் ஜோதியில் கலந்திடல் வேண்டும்.

மனம் — நல்ல நிலம்
இறைவன் நாமம் — அருள் ஊற்று
சித்தமெனும் ஓடை — நல்ல சிந்தை வழியாக
அறிவென்னும் குளம் — அருள் நிறைந்த அறிவு (ஞானம் பெறும்)
ஞானம் மடைதிறக்க — ஞானம் பிறந்தால்
ஆத்மா வயல் — செழிக்கும் (கதிர் ஜோதி பிரகாசிக்கும்)

ஆகவேதான் :

இறைவன் அருளை மனதில் ஊறும் ஊற்றாகவும் சித்தத்தை ஊற்று செல்லும் வழியாகவும், அறிவைக் குளமாகவும், ஞானம் தேங்கி நிறைந்து செல்கின்ற மடையாகவும், ஆன்மா வயலாகவும், கதிர் ஆன்மாவில் பிரகாசிக்கின்ற ஒளியாகவும், உள்ள கருத்தை உடையது.

## சபரிமலையில் நினைவில் கொள்க !

1. பதினெட்டாம்படியின் தூய்மை புனிதத்தன்மை தெய்வீகத் தன்மை முதலியவற்றையும் கோயிற் சுற்றுப்புறங்களையும் சுத்த மாக வைத்திருங்கள் விரதமேற்றவர்கள் மட்டுமே பதினெட்டாம் படியில் ஏறிச் செல்லலாம்.

2. பதினெட்டாம் படியிலும், பல்வேறு நிலையங்களிலும் கூட்ட நெரிசலைத் தவிர்க்க கியூவிலேயே செல்லுங்கள். பொறுமையுட னும் நிதானத்துடனும் நடந்துகொள்ளுங்கள்.

3. போலீஸ் ஐயப்பன்மார் கூறும் வழிகளைப் பின்பற்றுங்கள் உங்களுக்கு வழிகாட்டவும் உதவி செய்யவுமே அவர்கள் அங்கு காத்து நிற்கின்றார்கள்.

4. போலியான வழிகாட்டிகளை (BOGOUS GUIDE) நம்பா தீர் ; எந்த உதவிக்கும், தேவஸ்வம் செய்தித் தொடர்பு மையத் தையோ அல்லது காவல்துறை உதவி நிலையங்களையோ நாடுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. தேவஸ்வம் செய்தித் தொடர்பு மையத்திலிருந்து வெளியாகும் அறிவிப்புகளை எப்பொழுதும் கவனமாகக் காதுகொடுத்து கேளுங்கள். பல்வேறிடங்களிலிருந்து வரும் உங்களுடைய உயிர்த் தோழர்களைத் தொடர்புகொள்ள அடிக்கடி அனுசாதன ஒலி பெருக்கிகளை அணுகித் தொந்தரவு செய்யாதீர்,

6. சபரிமலை சன்னிதானத்தில் ஐயப்பனின் மூலவிக்கிரகத்தின் முன்னால் அமைந்திருக்கும் திறந்த உண்டியலிலும் உபதேவதைகளின் சன்னதிமுன் வைக்கப்பட்டிருக்கும் சீலிடப்பட்ட பொட்டகங்களிலும் உண்டியல்களிலும் மட்டுமே உங்கள் காணிக்கைகளை செலுத்துங்கள் திறந்த சன்னதிகளில் உங்கள் காணிக்கைகளை வீசி எறியாதீர்கள். எல்லாவிதமான வழிபாடுகளுக்கும், செலுத்தும் தொகைகளுக்கும் கண்டிப்பாக ரசீது கேட்டுப் பெற்றுக்கொள்ளுங்கள்.

7. மாசில்லா பம்பாநதியை மாசுபடுத்தாதீர்; அது புனிதமான புண்ணிய தீர்த்தம்! தண்ணீரை வீணாக்காதீர்; அது சபரிமலையில் கிடைத்தற்கரியது! தண்ணீர்க் குழாயைத் தவறாகப் பயன்படுத்தாதீர்! அது தவறானது!

8. பஸ்மக்குளத்தில் சோப்பையும் எண்ணையையும் பயன்படுத்தக்கூடாது. பொதுக் கழிவறைகளை மட்டும் உபயோகிப்பீர்! ஹோட்டல்களில் சூடான திண்பண்டங்களை மட்டும் உண்ணுக! ஆறிக் காய்ந்துபோனவை ஆபத்தானவை. நோய் ஏதும் கண்டால் உடனடியாக மருத்துவ மனைகளை நாடுக.

9. எல்லாக் குருசாமிகளும் தங்களுடன் வந்தவர்கள் யாரையும் வழி தவறவிடாமல் பாதுகாத்து கண்டிப்பாக இருக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார், அப்படி யாரேனும் கூட்டுப்பிரிய நேர்ந்தால் மற்றவர்கள் வரும்வரை ஒரு குறிப்பிட்ட இடத்தில் காத்திருக்கும்படி முன்கூட்டியே எல்லோருக்கும் சொல்லிவைக்க வேண்டியது ரொம்ப முக்கியம்.

10. போதையூட்டும் பொருட்களையும், மதிகெடுக்கும் மதுபானங்களையும் எடுத்துச் செல்லவோ, குடித்துக் கொள்ளவோ கூடாது.

11. தடை செய்யப்பட்ட இடங்களை நெருங்காதீர்; எரிந்து முடிந்ததும் தீயை அணைத்துவிடுங்கள்!

12. எக்காரணங்கருதியும் அடர்ந்த காட்டுப் பகுதிக்குள் செல்லாதீர்கள்!

13. தீச்சுடர் மிக உயர்ந்து எரியும்போது ஓமகுண்டத்தின் உள்ளே நெய்தேங்காய்களைத் தூக்கி எறியாதீர்கள்! வெளியிலேயே போடுங்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. கீழே கிடந்து கண்டெடுத்த மற்றவர்களின் உடைமைகளை தேஸ்வம் போர்டின் குறிப்பிட்ட நிலையத்திலோ, காவல் துறையின் உதவி நிலையத்திலோ முறைபடி சேர்த்துவிட வேண்டும்.

15. வெவ்வேறு விடுதிகளிலும், தங்குமிடங்களிலும் தங்களுக்கே தனி இடம் ஒதுக்கிதர வேண்டும் என்று வம்பு செய்யாதீர்கள். உரிமைக்குரல் எழுப்பாதீர்கள்!

16. உங்களுடைய உடைமைகளை முன்பின் தெரியாத நபர்களிடம் ஒப்படைக்காதீர்கள்!

17. எந்தக் குறைபாடுகளையும் புகார்களையும் செய்தித் தொடர்பு அதிகாரி அல்லது நிர்வாக அதிகாரி அல்லது காவல் துறைத் தனி அதிகாரி ஆகியோரிடம் நேரில் சென்று முறையிடத் தயக்கம் காட்ட வேண்டாம்.

18. உங்களையும் உங்கள் உடைமைகளையும் எல்லா நேரங்களிலும் பாதுகாத்துக் கொள்ளுங்கள்!

## சபரிமலை சன்னிதானம்
## திறக்கப்பெறும் நாட்கள்

1. மலையாள மாதத்தின் 1ம் தேதி முதல் 5ம் தேதி வரை

2. ஆவணி மாதத்தில் 'ஓணம்' பண்டிகையில் 4 நாட்கள்.

3. கார்த்திகை மாதம் 1ம் தேதியிலிருந்து மார்கழி மாதம் 11ம் தேதி வரை 41 நாட்கள்; 41-வது நாள் மண்டல பூஜை.

4. மார்கழி மாதம் 22ம் தேதி முதல் தை மாதம் 5ம் தேதி வரை மகர விளக்கிற்காக 12 நாட்கள். மகர விளக்கு தைப் பொங்கல் அன்று நிகழும், சில வருடங்களில் ஒருநாள் முன்பின்னாக நிகழும்.


5. பங்குனி உத்திரம் ஒரு நாள்.

6. சித்திரை மாதம் விசு தரிசனம் 4 நாட்கள், காலை 5 மணி முதல் 12 மணி வரையிலும், மாலையில் 5 மணி முதல் இரவு 10 மணி வரையிலும் திறந்திருக்கும். காலையில் மட்டும் அபிஷேகம் செய்வார்கள். மாலையில் அலங்காரமும் அர்ச்சனைகளும் உண்டு.

சாதாரணக்காலங்களில் பேருந்து வசதி சாலக்காயத்திற்கு இருப்பதில்லை பத்தனம்திட்டையிலிருந்து வாடகைக்கு சிற்றூந்து ஏற்பாடு செய்து அவரவர்கள் சென்று வரலாம். உணவும் அக் காலங்களில் கிடையாது. மாத பூஜை காலங்களிலும் அநேக பக்தர்கள் கலந்து கொள்கிறார்கள். போக்குவரத்திற்கும், உணவிற்கும் சிறிது சிரமம் எனினும், அவரவர்கள் ஏற்பாடு செய்து, போய்வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




With Best Compliments From

**VEEYEN MILLS**

MANUFACTURERS OF DHALL & OIL, PURE GINGELLY OIL
SPECIAL QUALITY FOR AYURVEDIC PURPOSE

**245, GRANDPASS ROAD,**
**P.O. BOX 1622, COLOMBO 14.**
**TELEPHONE: 423049**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



With Best Compliments From

**BRRIGEDES TEX**

Wholesale Textiles

**No. 107, 111, 2nd Cross Street,**
**Colombo 11.**

**APCOO TEXX**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீவாத்மா - பரமாத்மா ஐக்கியமே மகரஜோதி தத்துவம்!

### மாலை அணிதல், நெய்தேங்காய் அபிஷேகம், இருமுடி கட்டி புறப்படுதல் அனைத்துக்கும் விளக்கமுண்டு

கார்த்திகை மாதம் பிறந்துவிட்டால் போதும் கறுப்பு, நீல வண்ண வேட்டியுடன், மாலை அணிந்து "சாமியே சரணம் ஐயப்பா" என்ற கோஷம் வானைப் பிளக்கும். இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் ஐயப்ப வழிபாடு இப்போது, புதிய உத்வேகத்தை ஏற்படுத்தி இருக்கிறது. வருடந் தோறும் லட்சக்கணக்கான அடியார்கள் ஐயப்ப வழிபாட்டில் ஈடுபடுகிறார்கள். சிறியவர், முதியவர் என்ற பேதமின்றி மகர ஜோதியைக் காண லட்சக்கணக்கான அடியார்கள் சபரி மலைக்கு புறப்பட்டு விடுகிறார்கள். ஐயப்பன் வழிபாடு மிகவும் பக்திமயமானது. அதேவேளை மிகவும் புனிதமானது. கடினமான பிரம்மச்சரிய விரதமுடையதே இந்த வழிபாடு. கறுப்பு, நீல ஆடை அணிந்து, கறுப்பு மாலையுடன் இரண்டு வேளையும் பக்கத்தில் உள்ள ஆலயத்துக்குச் சென்று மனதையும், உடலையும் புனிதமாக வைத்திருக்க வேண்டுமென்பது நியதியாகும்.

மாலை அணிந்த ஒவ்வொருவரும் ஐயப்பன்மார் என்ற உணர்வு இங்குண்டு. அறிமுகமில்லாத புதியவர்கள் சந்தித்துக் கொண்டாலும் ஒருவரை ஒருவர் வணங்கி "சாமியே சரணம் ஐயப்பா" என்ற சமரச நோக்கை வளர்த்துக் கொள்வதை இந்த வழிபாட்டில் காண முடிகிறது. நியதிப்படி பிரம்மச்சரியம் காத்து சபரிமலை சென்று ஜோதி தரிசனம் செய்தால்தான் பலனுண்டு. சபரிமலை யாத்திரைக்கு, மேற்கொள்ளும் புனிதச் செயல்களின் தத்துவக் கருத்துக்களும்; இதைத்தான் வலியுறுத்துகின்றன.

விரதமம் காத்தல் என்றால் கடுமையான பிரம்மச்சரியத்தை மேற்கொள்ள வேண்டி இருக்கிறது. விரத காலத்தில் இல்லறத்தில் ஈடுபடுதல், மதுபானம், புகைபிடித்தல் என்பன தவிர்க்கப்படல் வேண்டியவையாகும். ஆனால் பெரும்பாலானோர் அவற்றைத் தவிர்த்து ஐயப்பனை தரிசிக்கக் கடல் கடந்து புறப்படுகிறார்கள். கேரள மாநிலத்தின் ஆட்சி எல்லைக்குட்பட்ட மேற்கு மலைச்சரிவுகளில் உள்ள மலைகளில் சபரி என்ற மலை கடல் மட்டத்திலிருந்து 1800 அடி உயரமுடைய பள்ளத்தாக்கில் இறைவன் ஐயப்பனின் புனித ஆலயம் அமைந்துள்ளது. இந்தியாவில் திருத்தலங்களில் சபரிமலை ஐயப்பன் ஆலயம் மிகவும் புனிதமான திருத்தலமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவம்பர் மத்தியிலிருந்து டிசம்பர் வரை இடம்பெறும் மண்டல பூஜை ஜனவரி தைப்பொங்கல் அன்று இடம்பெறும் மகரஜோதி, ஏப்ரலில் இடம்பெறும் விஷு என்பனவற்றுக்கு இந்தியாவிலிருந்து லட்சக் கணக்கான பக்தர்கள் வந்து கூடுகிறார்கள்.

**தத்துவங்களையுடைய வழிபாடு:**

ஜீவாத்மா, - பரமாத்மா ஐக்கியத்தையே மகரஜோதி தத்துவம் விளக்குகிறது. தைப்பொங்கலன்று மகரஜோதி தரிசனத்தைக் காண முடிகிறது. மனம், மொழி, மெய் மூன்றையும் ஐம்புலன்களையும் அடக்கி ஐயப்பனுக்கு ஆத்ம நிவேதனம் செய்து எங்கும் ஐயப்பன், எதிலும் ஐயப்பன் என்ற ஆன்மீக உணர்வு ஓங்க வேண்டும். அப்போது ஐயப்பன் திருவருட் கடாட்சம் கிடைக்கிறது.

ஐயப்பன் வழிபாடானது சில விதிமுறைகளைக் கொண்டுள்ளது மாலை அணிதல், விரதம் காத்தல், இருமுடி கட்டி மலைக்குப் புறப்படுதல், பதினெட்டாம் படி ஏறுதல், நெய்தேங்காய் அபிஷேகம் அனைத்தும் ஒவ்வொரு தத்துவத்தையே விளக்குகிறது. சங்கராந்தியன்று பிரகாசிக்கும் ஜோதியில் நம் மன மாசுகள் அகன்று, புனித ஆத்மாவாக, புதுப்பிறவி எடுத்த தத்துவ மனிதராக திரும்ப வேண்டுமென்ற குறிக்கோளுடனேயே விரதம் காத்து லட்சக்கணக்கானோர் புறப்படுகிறார்கள்.

மறந்து விடாமல் இருப்பதற்கு ஒரு பொருளைக் கொண்டு செல்வது போன்று ஐயப்ப தரிசனத்திற்குச் செல்லப் போகிறோம். முறையாக விரதம் காக்க வேண்டுமென்ற எண்ணம் உள்ளத்தில் நிலை பெற வேண்டும் என்பதற்காகவே மாலை அணிந்து கொள்கிறார்கள். கழுத்திலிருக்கும் மாலை அசுத்தம், எதிர்ப்புகளைப் போக்கும் வலிமையுடையது. சத்துவகுணம் நிறைந்திருப்பது இறைபருளைப் பெற உதவியாக இருக்கும் இரு வேளையும் நீராடி திருக்கோயிலில் தரிசனம் செய்வது சத்துவ குணங்களை வளர்ப்பதற்கு உதவி புரிகிறது. பிராணாயாம முறைப்படி சுவாசம் செய்யப் பழகிக்கொள்வது உடல் நலத்திற்கும், ஆயுள் விருத்திக்கும் உதவுகிறது.

இருமுடி கட்டிச் செல்வதிலும் ஒரு தத்துவம் உண்டு. அரிசி, பழம், வெல்லம், சந்தனம், குங்குமம், தேங்காய், நெய் போன்றவற்றை முன் முடியில் வைத்து கட்டுகிறார்கள். இவையனைத்தும் இறைவனுக்குரிய நிவேதனப் பொருட்களாகும். மிளகு, சாம்பார், ரசப்பொடி, சர்க்கரை மற்றும் தேவைப்படும் பொருட்களை பின் முடியில் வைத்துக் கட்டுகிறார்கள். முன்முடி இறைவனுக்கும், பின்முடி பக்தனுக்குமென்பதை இருமுடி தத்துவம் உணர்த்துகிறது. நெய் தேங்காயும் ஒரு தத்துவத்தை சுட்டிக்காட்டுகிறது. தேங்காயில் உள்ள கண்களில் துவாரமிட்டு நீரை வெளியில் எடுத்துவிட்டு அதனுள் நெய்யை நிரப்பி சீல் செய்து விடுகிறார்கள். பதினெட்டாம்படி ஏறிய பின்பே நெய் தேங்காய் உடைக்கப்பட்டு இறைவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னுக்கு அபிஷேகம் ஆகிறது. முக்கண் உள்ள தேங்காய் சிவனின் அம்சம். சத்துவ குணம் நிறைந்த பால் விஷ்ணுவின் அம்சம். பாலும், தயிரும் இறைவனின் அபிஷேகப் பொருட்களாகும். நெய் இறைவனது ஜோதி வடிவத்துக்கு உறுதுணையாகிறது. இதனால் தான் நெய் விளக்கிடுதலை உயர்வாக போற்றுகிறார்கள்.

தேங்காயிலிருந்து நீரை வெளியில் எடுத்து நெய்யை உள் நிரப்புவதால் எமது ஆத்மாவையே தேங்காயில் ஆவணம் செய்கிறோம் என்று அர்த்தம் கொள்ளப்படுகிறது. பிற பந்தபாசங்களில் பொருட்களில் நமது மனம் எவ்வாறு கவரப்படாமலிருக்க வேண்டுமென்று தற்காத்துக்கொள்கிறோமோ அவ்வாறே ஆன்ம சைதன்யம் நிறைந்த நெய் வெளியேறிவிடாமல் கண் துவாரத்தை நன்றாக மூடிவிடுகிறோம்.

இந்த உயிர், ஜீவன், பரமாத்மாவான உனது திருப்பாதத்தில் சங்கமிக்க புறப்பட்டுக் கொண்டிருக்கிறது, வழியில் இந்த ஜீவாத்மாவுக்கு தடங்கல் ஏதும் நிகழாதவாறு தக்க பாதுகாப்புடன் புறப்படுகிறது என்ற தத்துவம் தேங்காயினுள் நெய் நிரப்பும் செயலில் அடங்கியுள்ளது. ஆன்ம சைதன்யம் நிறைந்த நெய்யை இறைவனுக்கு அபிஷேகம் செய்கிறோம். ஜீவாத்மா பரமாத்மாவுடன் இரண்டறக் கலந்து புதுப்பிறவி எடுத்து வருகிறது. திரும்பும்போது அபிஷேக நெய் சிறிது கொண்டு வருவது இந்த கருத்திலேயாகும்.

## நெய் அபிஷேகம்

ஐயப்ப தரிசனம் செய்யும் முன்னர் பம்பை நதியில் நீராடி பிதுர்கடன்கள் தீர்த்து இயன்றளவு அன்னதானம், வஸ்திரதானம், பிற தானங்களைச் செய்து மனம், மொழி, மெய் சுத்தமாக பதினெட்டு படிகளை ஏறி கடக்க வேண்டும். பதினெட்டு படிகளை ஏறி கடந்தால்தான் ஐயப்பனை தரிசித்ததற்கு பொருளாகும். சபரிமலை யாத்திரையின பலனையும் உரிய முறையில் அடைய முடியும். வேறு எந்த முறையில் சென்றாலும் அதைச் சபரிமலை யாத்திரை என்று கருத முடியாது பதினெட்டு படிகளும் ஒரு தத்துவத்தைக் குறிப்பிடுகிறது. தேங்காயினுள் அடைக்கப்பட்ட நெய்யை அபிஷேகம் செய்து விட்டு திரும்புகையில் பரமாத்மாவுடன் ஐக்கியம் பெற்று ஜீவாத்மா புனிதமடைகிறது என்றால் அதற்கு உறுதுணையாக பதினெட்டுப் படிகளும் அமைந்துள்ளன என்பதே கருத்தாகும். மனிதனிடம் பதினெட்டு தோஷங்கள் நிலவுகின்றன.

காம, குரோத, லோபங்கள், எட்டு இந்திரியங்கள், ஐந்து சமத்துவம், தாமஸம், ராஜஸம் என்ற குணங்கள் மூன்று. வித்தை, அவித்தை என்ற தோஷங்கள் இரண்டு, மொத்தத்தில் இந்த பதினெட்டு தோஷங்களையும் பதினெட்டுப் படிகளை ஏறி பிரார்த்திக்கும் போது போக்கிக் கொள்கிறோம்.

மார்கழி உத்திரத்தில் சனிக்கிழமை வேதத்தின் அதிபதியான தர்மசாஸ்தா அவதாரம் எடுத்ததாக இந்துக்களது ஐதீகம். சிவனுக்கும், மோகினி உருவமான நாராயணனுக்கும் பிறந்த ஐயப்பன் இறையருளைப் பெற்ற தனியான பக்தி தேவை. அது மிகவும் புனிதமாக காக்கப்பட வேண்டியதாகும். அதன்படி ஒழுகினால் எல்லையற்ற பேரானந்த வாழ்வு கிட்டும் என்பதில் சந்தேகமே இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிகண்டனது குட்டிக் கதை

## "கரடியாரே சரணம்"

மணிகண்டனின் வளர்ப்புத் தாயாரான கோப்பெருந் தேவி சூழ்ச்சியாக அவரைக் காட்டுக்கு அனுப்பப் பார்க்கிறாள். ''புலிப்பால் கொண்டுவா'' என்கிறாள். மணிகண்டனும் காட்டுக்குச் செல்ல தயாராக இருக்கிறான். இதைக் கண்ட மன்னனோ தவிக்கிறான்.

கொடும் புலி வாழும் காட்டுக்குப் போவதா? என்று கேட்கிறான்.

அதற்கு மணிகண்டன் அப்பா கொடிய மனிதர்கள் வாழும் நாட்டைக் கண்டுதான் பயப்படவேண்டும், கொடும் புலி வாழும் காட்டைக் கண்டு பயப்படவேண்டாம். இதற்கு என் குருநாதர் ஒரு கதை சொல்லியிருக்கிறார். அக் கதையைக் கேளுங்கள் என்று ஒரு கதை சொல்ல ஆரம்பித்தார்.

ஒரு புலி ஒரு வேடனை துரத்துகிறது. அவன் பயந்து கொண்டு, ஒரு மரத்தின் மீது ஏறுகிறான். புலியிடமிருந்து தப்பித்து விட்டோம் என்று அவன் நிம்மதியாக இருக்கையில், யாரோ முதுகில் பலமாகத் தட்ட நிமிர்ந்து பார்க்கிறான். மேல் கிளையில் ஒரு கரடி உட்கார்ந்திருக்கிறது.

உடனே இவன் ''கரடியாரே சரணம்'' என்கிறான்.

கவலைப்படாதே! எப்பொழுது சரணம் என்று சொல்லி விட்டாயோ, அதிலிருந்து நான் உன்னை காப்பாற்றுவேன் என்கிறது கரடி.

உடனே அந்த வேடன் நிம்மதியாகத் தூங்க ஆரம்பிக்கிறான்.

அப்பொழுது புலி, கரடியைப் பார்த்து, தூங்கிக்கொண்ருக்கும் அவனைக் கீழே தள்ளிவிடு. நான் அவனைச் சாப்பிட்டுவிட்டுப் போய்விடுகிறேன் என்கிறது.

ஆனால் கரடியோ, ''மாட்டேன்! எப்பொழுது அவன் என்னைச் சரண் என்று அடைந்து விட்டானோ, அவனைக் காப்பாற்றித்தான் தீருவேன்'' என்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிது நேரத்திற்கெல்லாம் கரடி தூங்கப்போக, வேடன் விழித்துக் கொள்கிறான்.

உடனே புலி அவனை பார்த்து, ''வேடா! தூங்கிக் கொண்டிருக்கும் கரடியை நீ கீழே தள்ளிவிடு, நான் உன்னை விட்டுவிடுகிறேன் என்கிறது. உடனே வேடன் கரடியைக் கீழே தள்ளுகிறான்.

கீழே விழுந்த கரடியைப் பார்த்து புலி, ''அந்த நன்றி கெட்டவனைக் கீழே தள்ளமாட்டேன் என்றாயே! இப்பொழுதாவது மரத்தில் ஏறி அவனைக் கீழே தள்ளு என்றது. கரடி மரத்தில் ஏறிற்று. பிறகு புலியைப் பார்த்து ''இவன் நன்றி கெட்டவனாகவே இருக்கட்டும்.'' சரண் என்று என்னை அடைந்தவனைக் கீழே தள்ளமாட்டேன் என்றது.

*

## இதய விளக்கு

ஒரு சமயம், மெய்யறிவு பெறவேண்டும் என்று ஆசைப் பட்டு ஒரு மாணவன் குருவைத் தேடிச் சென்றான். அவர் தவம் செய்து கொண்டிருந்த மலைக்குச் சென்றான். குகைக்குள் ஒரு சிறு அகல் விளக்கு எரிந்துகொண்டிருந்தது. இவன் நுழைந்த வேகத்தில் விளக்கு அணைந்து விட்டது. அந்தப் பீதியில் ''நமச்சிவாய'' என்ற மந்திரத்தை உரக்க உச்சரித்தான் மாணவன். ''யார் அங்கே'' என்றார் குரு. ''அறிவை நாடி வந்திருக்கிறேன்; தயை செய்யவேண்டும்'' என்றான் மாணவன், ''சரி, அந்த விளக்கை முதலில் ஏற்று'' என்றார் குரு. தீக்குச்சியை எடுத்து விளக்கை ஏற்ற முயன்றான் மாணவன்; முடியவில்லை. விளக்கில் எண்ணெய் இருக்கிறா பார்!'' என்றார் குரு. எண்ணெய் இல்லாதது மட்டுமில்லை; தண்ணீர் கொஞ்சம் இருந்தது. ''நீரை நீக்கிவிட்டு எண்ணெயை ஊற்றி விளக்கை ஏற்று'' என்றார். மறுபடியும் இருந்தும் மாணவனால் விளக்கை ஏற்ற முடியவில்லை.

''ஒரு வேளை திரி ஈரமாயிருக்கலாம் வேறு திரி போட்டு ஏற்று!'' என்றார். இப்பொழுது மாணவனால் விளக்கை ஏற்ற முடிந்தது.

''இப்பொழுது எனக்கு உபதேசம் செய்யவேண்டும் என்றான் மாணவன். ''உபதேசமா? இதுவரையில் உனக்கு உபதேசம் தானே செய்து கொண்டிருந்தேன்''. என்றார் குரு. மாணவனுக்கு ஒன்றும் புரியவில்லை, அப்பொழுது குரு சொன்னார்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதயம் எனும் அகல் விளக்கில் உன் உயிர்த்திரி இருக்கிறது. உலகத்து ஆசைகள் எனும் நீரினால் அந்தத் திரி இதுவரை நனைந்து போயிருந்தது. அதனால் அதில் அறிவு என்னும் தீ பற்றவில்லை. அந்த நீரையெல்லாம் நீக்கி, உயிர்த்திரியை வைராக்கியத்தில் உயர்த்து, பின் விளக்கில் ஆண்டவன் நாமஸ் மரணம் என்னும் எண்ணெயை நிரப்பித் திரியை அதில் நனை. இப்பொழுது குருவிடம் உபதேசம் எனும் தீக்குச்சியை வாங்கி விளக்கை ஏற்று! போ!''

✶

## பணம் படுத்தும் பாடு

தகப்பனார் இறந்து விட்டார். தாய் தன் ஒரே மகனான அவனைக் கண்மணியாக வளர்த்தாள், நிரம்ப சொத்து இருந்தது. வயது வந்து வாலிபனானான். கெட்ட பழக்கங்களும் வந்து சேர்ந்தன. கெட்ட நண்பர்களும் வந்து ஒட்டிக்கொண்டார்கள். பணம் மட்டும் கரைந்து கொண்டு வந்தது.

தினந்தோறும் தாயிடம் பணத்திற்காகத் தொந்தரவு செய்வான்; பிடுங்கி எடுப்பான். தாயின் மனம் வெறுத்துப் போயிற்று. நாளடைவில் மகனுக்கும் தாயிடம் பற்று விட்டுப் போயிற்று.

குடும்பப் பெயரைக் கெடுக்கும் இப்படிப்பட்ட மகன் இருப்பதைவிட இறப்பதே மேல் என்று தாய் ஒரு திட்டம் போட்டாள். நினைத்தபோது பணம் தராத தாய் இருந்தென்ன செத்தென்ன என்று மகனும் அவளை ஒழித்துக் கட்ட வழி தேடினான்.

தனக்கு அவள் சாப்பாடு போடும்போது, குனிந்து பரிமாறுவாள் அல்லவா? அப்பொழுது ஒரு இரும்புத் தடியால் தலையில் ஒரே போடாகப் போட்டுக் கொன்று விடுவது என்பது அவன் திட்டம். நாளையும் நிச்சயித்து விட்டான்.

அதே நாளில், மகனுடைய சாப்பாட்டில் விஷத்தைக் கலந்து விடுவது என்பது தாயாரின் திட்டம். அந்த நாளும் வந்தது.

தாய் உணவு பரிமாறக் குனிந்தாள். அவ்வளவுதான் மடேரென்று தடியால் அடித்து அவளைக் கொன்றுவிட்டான். மகன் பின் சோற்றை விடுவானேன் என்று ஒரு கவளம் தின்றான். சுருண்டு கீழே விழுந்து செத்துப் போனான். பணத்தாசை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தன்னம்பிக்கை

திரளான மக்கள் பழங்களையும் பூக்களையும் வாங்கிக் கொண்டு அந்தச் சாமியாரைக் காண வந்திருந்தார்கள். சுவாமியார் தமது சீடனைக் கூப்பிட்டு அந்தப் பழங்களை எல்லோருக்கும் பங்கிட்டுக் கொடுக்கும்படி சொன்னார். ''யாருக்கு முதலில் கொடுக்கட்டும்?'' என்று கேட்டான் சீடன். ''யாரிடத்தில் உனக்கு அதிக நம்பிக்கையும் மதிப்பும் இருக்கிறதோ அவருக்கு கொடு!'' என்றார் சுவாமியார். ''சரி!'' என்ற சீடன் முதல் பழத்தைத் தானே தானே தின்றுவிட்டான். கேட்டதற்கு, ''எனக்கு என்னிடத்தில் தான் நம்பிக்கையும் மதிப்பும்'' என்று சொல்லி விட்டான். யார் முகத்திலும் ஈயாடவில்லை. சுவாமியார் உள்பட.

*

## பத்து கட்டளைகள்

மேல் நாட்டாருக்கு, அதிலும் குறிப்பாக அமெரிக்கர்களுக்கு ஹிந்து மதம் என்றால் என்ன என்பதை விளக்குவதற்கு, தமிழகத்தில் டாக்டர் வி. கிருஷ்ணமூர்த்தி ஒரு புது யுக்தி கையாளுகிறார். மோசஸ் சொன்ன பத்து கட்டளைகளைப் போல், இவர் ஹிந்து மதத்தைப் பத்து கட்டளைகள் என்ற தலைப்பில் விவரிக்கிறார். அந்த பத்து கட்டளைகள் என்ன என்பதை வேத, வேதாங்க, வேதாந்த, ஆகம, கலா வித்வத் சபையில் அவர் எடுத்துச் சொன்னார்.

1. எல்லாம் பிரம்மம், எங்கும் பிரம்மம் என்று உணர வேண்டும். அதனால்தான் பகவான் கீதையில் சொன்னார்: ''எவன் என்னை எங்கும் பார்க்கிறானோ, என்னிடத்தில் எல்லாவற்றையும் பார்க்கிறானோ, அவனுக்கு நான் காணாமற் போவதில்லை, அவனும் எனக்கு காணாமற் போவதில்லை'' என்று இதன் காரணமாக, எல்லோரும் நாமாக இருப்பதால், நாம் யாருக்கும் தீங்கு இழைக்கமாட்டோம்.

2. மறு பிறவி உண்டு என்று நம்ப வேண்டும். நல்லவனாக வாழ்ந்தால் நல்ல பிறவி, கெட்டவனாக வாழ்ந்தால் கெட்ட பிறவி கிடைக்கும்.

3. நம்முடைய உயர்வுக்கும், தாழ்வுக்கும் மனம்தான் காரணம் அதனால் மனதைக் கட்டுப்படுத்த வேண்டும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. நாம் செய்யும் ஒவ்வொரு காரியத்தின் காரணமாகவும், அதன் வாசனை நம்மிடம் ஒட்டிக்கொள்ளுகிறது. பிறகு அந்த வாசனைகளின் ஏவுதல்களின்படி நாம் காரியம் செய்யவேண்டியிருக்கிறது. ஆகவே, வாசனைகள் சேராமல் இருக்க வேண்டுமானால், நாம் பற்றற்று காரியங்கள் செய்யவேண்டும். பலனை எதிர்பார்க்காமல் செய்ய வேண்டும்.

5. எல்லா தெய்வங்களும் பகவான் ஒருவன்தான். அதனால் உங்களுக்கு எந்த தேவதை பிடிக்கிறதோ அந்த தேவதையை வணங்கலாம்.

6. தர்மத்தைக் காப்பதற்காகவும், அதர்மத்தை அழிப்பதற்காகவும் பகவான் பல அவதாரங்கள் எடுத்தார். இன்று அவர் எல்லாம் கோயில்களிலும் அர்ச்சாவதாரமாக இருக்கிறார். வியாசரும், வால்மீகியும் இந்த அவதாரங்களைப் எழுதிய நூல்களை நாம் படிக்க வேண்டும்.

7. நாம் எப்பொழும் கடவுள் ஞாபகமாகவே இருக்க வேண்டும். அதற்கு ஒரு எளிய வழி. அவன் நாமமத்தைச் சொல்லுவதுதான். நாமம் நாமியை விட உயர்ந்தது.


8. கிடைத்தது போதும் என்று மனத்திருப்தியுடன் இருக்க வேண்டும். ஏதாவது ஒன்று வேண்டும் என்று ஆசைப்பட ஆரம்பித்ததுமே, நம்மிடம் உள்ள ஆனந்தம் போய்விடுகிறது.

9, எதிலும் நம்முடைய பாவனைத்தான் முக்கியம்,

10. ''நீ எந்த உருவில் என்னை வணங்குகிறாயோ, அந்த உருவில் நான் காட்சி அளிப்பேன்'' என்கிறார் பகவான். அதனால் எல்லா மதமும் சம்மதம் என்று இருக்க வேண்டும். பிற மதங்களைத் தூஷிக்கக்கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



With Best Compliments From

**NEW ROLEX**

**TRADE CENTRE,**

**84/4A, Second Cross Street,**

**Colombo 11. Tel: 423745**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




With Best Compliments From

# RAVI LANKA TRADES

Importers & General Merchants
Dealers in Aluminium Plastic & Glassware Etc.

**216, Gasworks Street,**
**Colombo 11.**
**Telephone: 423047**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஸ்ரீ தர்மசாஸ்த்தா அஷ்டோத்திர ஸதநாமங்கள்

ஓம் மஹா சாஸ்த்ரே நம:
ஓம் மஹா தேவாய நம:
ஓம் மஹா தேவஸுதாய நம:
ஓம் அவ்யயாய நம:
ஓம் லோக கர்த்ரே நம:
ஓம் லோக பர்த்ரே நம:
ஓம் லோக ஹர்த்ரே நம:
ஓம் பராத் பராய நம:
ஓம் த்ரிலோக ரக்ஷகாய நம:
ஓம் தன்வினே நம:
ஓம் தபஸ்வினே நம:
ஓம் பூத ஸைனிகாய நம:
ஓம் மந்த்ரவேதினே நம:
ஓம் மஹாவேதினே நம:
ஓம் மாருதாய நம:
ஓம் ஜகதீச்வராய நம:
ஓம் லோகாத்யக்ஷாய நம:
ஓம் அக்ரண்யே நம:
ஓம் ஸ்ரீமதே நம:
ஓம் அப்ரமேய பராக்ரமாய நம:
ஓம் ஸிம்ஹாரூடாய நம:
ஓம் கஜாரூடாய நம:
ஓம் ஹயாரூடாய நம:
ஓம் மஹேச்வராய நம:
ஓம் நாநாசஸ்த்ரதாய நம:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் அநர்க்காய நம:
ஓம் நா நா வித்யா விசாரதாய நம:
ஓம் நா நா ரூப தராய நம:
ஓம் வீராய நம:
ஓம் நாநாப்ராணி நிஷேவகாய நம:
ஓம் பூஜேசாய நம:
ஓம் பூஜிதாய நம:
ஓம் ப்ருத்யாய நம:
ஓம் புஜங்கபரணோத்தமாய நம:
ஓம் இக்ஷீதன்வினே நம:
ஓம் புஷ்ப பாணாய நம:
ஓம் மஹா ரூபாய நம:
ஓம் மஹாப்ரபுவே நம:
ஓம் மாயாதேவீஸுதாய நம:
ஓம் மான்யாய நம:
ஓம் மஹா நீதாயே நம:
ஓம் மஹா குணாய நம:
ஓம் மஹா சைவாய நம:
ஓம் மஹா ருத்ராய நம:
ஓம் வைஷ்ண வாய நம:
ஓம் விஷ்ணு பூஜகாய நம:
ஓம் விக்னேசாய நம:
ஓம் வீரபத்ரே சாய நம:
ஓம் பைரவாய நம:
ஓம் ஷண்முகத்ரு வாய நம:
ஓம் மேருச்ருங்க ஸமாஸீனாய நம:
ஓம் முனிஸங்கநிஷேவிதாய நம:
ஓம் தேவாய நம:
ஓம் பத்ராய நம:
ஓம் ஜகந்நாதாய நம:
ஓம் கணநாதாய நம:
ஓம் கணேச்வராய நம:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் மஹா யோகினே நம:
ஓம் மஹா மாயினே நம:
ஓம் மஹாக் ஞானினே நம:
ஓம் மஹா ஸ்திராய நம:
ஓம் தேவ சாஸ்த்ரே நம:
ஓம் பூத சாஸ்த்ரே நம:
ஓம் பீமஹாஸ பராக்ரமாய நம:
ஓம் நாக ஹாராய நம:
ஓம் நாக கேசாய நம:
ஓம் வ்யோம கேசாய நம:
ஓம் ஸநாதனாய நம:
ஓம் ஸகுணாய நம:
ஓம் நிர்குணாய நம:
ஓம் நித்யாய நம:
ஓம் நித்ய த்ருப்தாய நம:
ஓம் நிராச் ரயாய நம:
ஓம் லோகாச் ரயாய நம:
ஓம் கணாதிசாய நம:
ஓம் சது: ஷஷ்டி கலாமயாய நம:
ஓம் ரிக்யஜுஸ்ஸாமாதர்வண ரூபிணே நம:
ஓம் மல்லகா ஸுரபஞ்ஜனாய நம:
ஓம் த்ரிமூர்த்தயே நம:
ஓம் தைத்ய மதனாய நம:
ஓம் ப்ரகருதயே நம:
ஓம் புருஷோத்தமாய நம:
ஓம் கால ஞானினே நம:
ஓம் மஹா ஞானினே நம:
ஓம் காமதாய நம:
ஓம் கமலேக்ஷணாய நம:
ஓம் கல்பவ்ருக்ஷாய நம:
ஓம் மஹாவ்ருக்ஷாய நம:
ஓம் வித்யா வ்ருக்ஷாய நம:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விபூதி தாய நம:
ஓம் ஸம்ஹார தாபவிச்சேத்ரே நம:
ஓம் பசுலோக பயங்கராய நம:
ஓம் ரோக ஹந்த்ரே நம:
ஓம் ப்ராண தாத்ரே நம:
ஓம் பரகர்வ விபஞ்ஜனாய நம:
ஓம் ஸர்வ சாஸ்த்ரார்த்த தத்வக்ஞாய நம:
ஓம் நீதி மதே நம:
ஓம் பாப பஞ்ஜனாய நம:
ஓம் புஷ்கலா பூர்ணா ஸம்யுக்தாய நம:
ஓம் பரமாத்மனே நம:
ஓம் ஸதாங்க தயே நம:
ஓம் அனந்தாதித்ய ஸம்காசாய நம:
ஓம் ஸுப்ரஹ்மண்யானு ஜாய நம:
ஓம் பலினே நம:
ஓம் பக்தானு கம்பினே நம:
ஓம் தேவே சாய நம:
ஓம் பகவதே நம:
ஓம் பக்த வத்ஸலாய நம:

"ஓம் நானாவித பரிமள பத்ர (மந்த்ர)
புஷ்பாணி ஸமர்ப்பயாமி"

●

குழந்தையுளம் கொண்டவர்க்கு
குளத்துப்புழைப் பாலனவன்
குலங்காத்துத் துணையிருப்பான்!
கோடிசுகம் தினந்தருவான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# அருள்மிகு ஸ்ரீ ஐயப்பன் நூற்றெட்டு சரணக் கோவை

ஓம் கன்னிமூல கணபதி பகவானே சரணம் ஐயப்பா
ஓம் காந்தமலை ஜோதியே சரணம் ஐயப்பா
ஓம் ஹரிஹர சுதனே சரணம் ஐயப்பா
ஓம் அன்னதான பிரபுவே சரணம் ஐயப்பா
ஓம் ஆறுமுகன் சோதரனே சரணம் ஐயப்பா
ஓம் ஆபத்தில் காப்போனே சரணம் ஐயப்பா
ஓம் இன்தமிழ்ச் சுவையே சரணம் ஐயப்பா
ஓம் இச்சை தவிர்ப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் ஈசனின் திருமகனே சரணம் ஐயப்பா
ஓம் ஈடில்லாத் தெய்வமே சரணம் ஐயப்பா
ஓம் உண்மைப் பரம் பொருளே சரணம் ஐயப்பா
ஓம் உலகாளும் காவலனே சரணம் ஐயப்பா
ஓம் ஊமைக்கருள் புரிந்தவனே சரணம் ஐயப்பா
ஓம் ஊழ்வினை அழிப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் எளியோர்க்கு அருள்பவனே சரணம் ஐயப்பா
ஓம் எங்கள் குலதெய்வமே சரணம் ஐயப்பா
ஓம் ஏழைப் பங்காளனே சரணம் ஐயப்பா
ஓம் ஏகாந்த மூர்த்தியே சரணம் ஐயப்பா
ஓம் ஐங்கரன் தம்பியே சரணம் ஐயப்பா
ஓம் ஐயமெல்லாம் தீர்ப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் ஒப்பில்லாத் திருமணியே சரணம் ஐயப்பா
ஓம் ஒளிரும் திருவிளக்கே சரணம் ஐயப்பா
ஓம் ஓங்காரப் பரம்பொருளே சரணம் ஐயப்பா
ஓம் ஓதும் மறைபொருளே சரணம் ஐயப்பா
ஓம் ஔடதங்கள் அருள்பவனே சரணம் ஐயப்பா
ஓம் சௌபாக்கியம் அளிப்பவனே சரணம் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் கலியுக வரதனே சரணம் ஐயப்பா
ஓம் சபரிமலை சாஸ்தாவே சரணம் ஐயப்பா
ஓம் சிவன் மால் திருமகனே சரணம் ஐயப்பா
ஓம் சிவவைணவ ஐக்கியமே சரணம் ஐயப்பா
ஓம் அச்சங்கோவில் அரசே சரணம் ஐயப்பா
ஓம் ஆரியங்காவு ஐயாவே சரணம் ஐயப்பா
ஓம் குளத்துப் புழைப் பாலனே சரணம் ஐயப்பா
ஓம் பொன்னம்பல வாசனே சரணம் ஐயப்பா
ஓம் வில்லாளி வீரனே சரணம் ஐயப்பா
ஓம் வீரமணி கண்டனே சரணம் ஐயப்பா
ஓம் உத்திரத்தில் உதித்தவனே சரணம் ஐயப்பா
ஓம் உத்தமனே சத்தியனே சரணம் ஐயப்பா
ஓம் பம்பையிலே பிறந்தவனே சரணம் ஐயப்பா
ஓம் பந்தள மாமணியே சரணம் ஐயப்பா
ஓம் சகலகலை வல்லோனே சரணம் ஐயப்பா
ஓம் சாந்தம் நிறை மெய்பொருளே சரணம் ஐயப்பா
ஓம் குருமகனின் குறைதீர்த்தவனே சரணம் ஐயப்பா
ஓம் குருதட்சணை அளித்தவனே சரணம் ஐயப்பா
ஓம் புலிப்பாலைக் கொணர்ந்தவனே சரணம் ஐயப்பா
ஓம் வன்புலியின் வாகனனே சரணம் ஐயப்பா
ஓம் தாயின் நோய் தீர்த்தவனே சரணம் ஐயப்பா
ஓம் குருவின் குருவே சரணம் ஐயப்பா
ஓம் வாபரின் தோழனே சரணம் ஐயப்பா
ஓம் துளசிமணி மார்பனே சரணம் ஐயப்பா
ஓம் தூயவுள்ளம் அளிப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் இருமுடிப் பிரியனே சரணம் ஐயப்பா
ஓம் எருமேலி சாஸ்தாவே சரணம் ஐயப்பா
ஓம் நித்திய பிரம்மச்சாரியே சரணம் ஐயப்பா
ஓம் நீலவஸ்திர தாரியே சரணம் ஐயப்பா
ஓம் பேட்டை துள்ளும் பேரருளே சரணம் ஐயப்பா
ஓம் பெரும் ஆணவத்தை அழிப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் சாஸ்தாவின் நந்தவனமே சரணம் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சாந்திதரும் பேரழகே சரணம் ஐயப்பா
ஓம் பேருத்தோடு தரிசனமே சரணம் ஐயப்பா
ஓம் பேதமையை ஒழிப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் காளை கட்டி நிலையமே சரணம் ஐயப்பா
ஓம் அதிர்வேட்டுப் பிரியனே சரணம் ஐயப்பா
ஓம் அழுதமலை ஏற்றமே சரணம் ஐயப்பா
ஓம் ஆனந்தமிகு பஜனைப் பிரியனே சரணம் ஐயப்பா
ஓம் கல்லிடும் குன்றே சரணம் ஐயப்பா
ஓம் உடும்பாறைக் கோட்டையே சரணம் ஐயப்பா
ஓம் இஞ்சிப் பாரைக் கோட்டையே சரணம் ஐயப்பா
ஓம் கரியிலந் தோடே சரணம் ஐயப்பா
ஓம் கரிமலை ஏற்றமே சரணம் ஐயப்பா
ஓம் கரிமலை இறக்கமே சரணம் ஐயப்பா
ஓம் பெரியானை வட்டமே சரணம் ஐயப்பா
ஓம் சிறியானை வட்டமே சரணம் ஐயப்பா
ஓம் பம்பா நதி தீர்த்தமே சரணம் ஐயப்பா
ஓம் பாவமெல்லாம் அழிப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் திருவேணி சங்கமமே சரணம் ஐயப்பா
ஓம் ஸ்ரீ இராமர் பாதமே சரணம் ஐயப்பா
ஓம் சக்தி பூஜைக் கொண்டவனே சரணம் ஐயப்பா
ஓம் சபரிக்கு அருள் செய்தவனே சரணம் ஐயப்பா
ஓம் தீப ஜோதித் திரு ஒளியே சரணம் ஐயப்பா
ஓம் தீராத நோய் தீர்ப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் பம்பா விளக்கே சரணம் ஐயப்பா
ஓம் பழவினைகள் ஒழிப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் தென்புலத்தார் வழிபாடே சரணம் ஐயப்பா
ஓம் திருபம்பையின் புண்ணியமே சரணம் ஐயப்பா
ஓம் நீலிமலை ஏற்றமே சரணம் ஐயப்பா
ஓம் நிறைவுள்ளம் தருபவனே சரணம் ஐயப்பா
ஓம் அப்பாச்சி மேடே சரணம் ஐயப்பா
ஓம் இப்பாச்சிக் குழியே சரணம் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஓம் சபரி பீடமே சரணம் ஐயப்பா
ஓம் சரங்குத்தி ஆலே சரணம் ஐயப்பா
ஓம் உரல்குழி தீர்த்தமே சரணம் ஐயப்பா
ஓம் கருப்பன்ன சாமியே சரணம் ஐயப்பா
ஓம் கடுத்த சாமியே சரணம் ஐயப்பா
ஓம் பதினெட்டாம் படியே சரணம் ஐயப்பா
ஓம் பகவானின் சந்நிதியே சரணம் ஐயப்பா
ஓம் பரவசப் பேருணர்வே சரணம் ஐயப்பா
ஓம் பசுவின் நெய் அபிஷேகமே சரணம் ஐயப்பா
ஓம் கற்பூரப் பிரியனே சரணம் ஐயப்பா
ஓம் நாகராசப் பிரபுவே சரணம் ஐயப்பா
ஓம் மாளிகைப் புறத்தம்மனே சரணம் ஐயப்பா
ஓம் மஞ்சமாதா திருவருளே சரணம் ஐயப்பா
ஓம் அக்கினிக் குண்டமே சரணம் ஐயப்பா
ஓம் அலங்காரப் பிரியனே சரணம் ஐயப்பா
ஓம் பஸ்மக் குளமே சரணம் ஐயப்பா
ஓம் சற்குரு நாதனே சரணம் ஐயப்பா
ஓம் மகர ஜோதியே சரணம் ஐயப்பா
ஓம் மங்கள மூர்த்தியே சரணம் ஐயப்பா

**அறிந்தும், அறியாமலும், தெரிந்தும், தெரியாமலும், செய்த சகல குற்றங்களையும் பொறுத்துக் காத்து ரட்சிக்க வேண்டும். ஓம் ஸ்ரீ சத்தியமான பொன்னு பதினெட்டாம்படி மேல் வாழும் ஓம் ஸ்ரீ அரிஹர சுதன் ஆனந்த சித்தன் ஐயன் ஐயப்ப சுவாமியே சரணம் ஐயப்பா. காசி, ராமேஸ்வரம், பாண்டி, மலையாளம் அடக்கி ஆளும் ஓம் ஸ்ரீ அரிஹரசுதன் ஆனந்த சித்தன் ஐயன் ஐயப்ப சுவாமியே சரணம் ஐயப்பா.**

**தினமும் ஐயன் 103 சரண கோவையை காலை, மாலை பாராயணம் செய்து இஷ்டசித்திகளை அடையுங்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




With Best Compliments From


**MANONS VIDEO**

**No. 62, Hill Street,**
**Colombo 13.**

**VOLVO TAILORS**

**No. 140, Hill Street,**
**Colombo 13.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Shanthi GOLD HOUSE
T.P. 031-2292
சாந்தி கோல்ட் ஹவுஸ்
ශාන්ති ගෝල්ඩ් හවුස්

22 KT GENUINE GOLD JEWELLERY
ALL ARTICLES ARE GUARANTEED

224-B Main Street,
Negombo.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விநாயகர் பாடல்

மூஷிக வாகன மோதக ஹஸ்த
சாமரகர்ண விலம்பித ஸூத்ர
வாமனரூப மஹேஸ்வர புத்ர
விக்ன வினாயக பாத நமஸ்தே
ஓம் கன்னிமூல கணபதி பகவானே சரணம் ஐயப்பா

★

வெள்ளிக் கொம்பன் விநாயகனே
வினைகள் தீர்க்கும் ஐங்கரனே
அன்னை பராசக்தி அருந்தவ புதல்வா
ஆனைமுகத்து விநாயகனே (வெள்ளிக்)

அகமும் புறமும் இருப்பவனே
அடியார் துயர்தனை துடைப்பவனே
ஆற்றோரத்திலும் குளக்கரை தனிலும்
அமர்ந்து அரசாட்சி புரிபவனே (வெள்ளிக்)

அகந்தை அழித்திடும் ஐங்கரனே
அன்பில் உறைந்திடும் குணநிதியே
அன்னை தந்தையையும் வலமாக வந்து
அருள் மாங்கனியை பெற்றவனே (வெள்ளிக்)

★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணேச சரணம் சரணம் கணேசா
கணேச சரணம் சரணம் கணேசா
கணேச சரணம் சரணம் கணேசா
கணேச சரணம் சரணம் கணேசா

மூஷிக வாஹன சரணம் கணேசா
மோதகஹஸ்தா சரணம் கணேசா
வாமன ரூபா சரணம் கணேசா
மஹேஸ்வர புத்ரா சரணம் கணேசா (கணேச சரணம்)

சங்கர சுதனே சரணம் கணேசா
சக்தியின் மைந்தா சரணம் கணேசா
சாமர கர்ணா சரணம் கணேசா
விளம்பித சூத்ரா சரணம் கணேசா (கணேச சரணம்)

★

கணபதியே சுவாமி கணபதியே
காத்தருள வேண்டுமையா கணபதியே (கணபதியே)

மூலமுதற் பொருளே கணபதியே
முன் நின்று காத்திடுவாய் கணபதியே (கணபதியே)

மூஷிக வாகனனே கணபதியே
முக்கண்ணனார் தன் மகனே கணபதியே (கணபதியே)

சத்தனத்தில் குளித்திடுவான் கணபதியே
சந்தம் மெம்மை காத்திடுவான் கணபதியே (கணபதியே)

சர்வலோக நாயகனாம் கணபதியே
சஞ்சலங்கள் நீக்கிடுவான் கணபதியே (கணபதியே)

★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரீ நந்தன கஜானனா ||
கிரிஜா நந்தன நிரஞ்சனா ||
பார்வதி நந்தன சுபானனா ||.
பாஹிப்ர போமாம் பாஹிபிரசன்னா || (கௌரி)

✶

ஜெய் ஜெய் ஜெய் ஜெய் கணபதி தேவா ||
மாதா பார்வதி பிதா மஹா தேவா ||
கஜானனா கஜானனா ||
கஜானனா ஜெய் கணபதி தேவா || (ஜெய்)

✶

பாஹி பாஹி கஜானனா – பார்வதி புத்ரா கஜானனா
மூஷிகவாகன கஜானனா – மோதகஹஸ்தா கஜானனா
ஸ்யாமளகர்ண கஜானனா – விளம்பித சூத்ரா கஜானனா
வாமன ரூபா கஜானனா – மஹேஸ்வர புத்ரா கஜானனா
விக்னவிநாயக கஜானனா – தவபாத நமஸ்தே கஜானனா

✶

ஜெய் கணேச ஜெய் கணேச ஜெய் கணேச பாஹிமாம்
ஜெய் கணேச ஜெய் கணேச ஜெய் கணேச ரக்ஷமாம்

வாரணத்து நாயகா வலம்புரி விநாயகா ||
பாரில் சக்தி சிவனணைக்கும் வல்லபை விநாயகா ||
கருணை செய் கிருபாகரா கார்த்திகேயன் ஸோதரா ||
ஓம் எழுத்தின் தத்வ ப்ரணவ ரூபனே விநாயகா
ஜெய் கணேச ஜெய் கணேச ஜெய் கணேச பாஹிமாம்
ஜெய் கணேச ஜெய் கணேச ஜெய் கணேச ரக்ஷமாம்

✶



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## முருகன் பாடல்

வேல் வேல் வேலவனே வேலாயுதா – எங்கள்
வினைகள் எல்லாம் தீர்த்திடுவாய் வேலாயுதா
(வேல் வேல்)

கந்தா கடம்பா வேலாயுதா – எங்கள்
கதிர்காம வேலவனே வேலாயுதா (வேல் வேல்)

திருசெந்தூர் வேலவனே வேலாயுதா – எங்கள்
திருபரங்கித்திரனே வேலாயுதா (வேல் வேல்)

சோலமலை கிழவனே வேலாயுதா – எங்கள்
சொகுசுகார குமரனே வேலாயுதா (வேல் வேல்)

பழநிமலை முருகனே வேலாயுதா – எங்கள்
பலவிணையை நீக்கிடுவாய் வேலாயுதா (வேல் வேல்)

சுவாமிமலை நாதனே வேலாயுதா - எங்கள்
சுப்பிரமண்ய சுவாமியே வேலாயுதா (வேல் வேல்)

திருத்தனிகை முருகனே வேலாயுதா – எங்கள்
திருமுருக வேலவனே வேலாயுதா (வேல் வேல்)

✶

ஓம் முருகா ஜெய ஓம் முருகா //
சரவணா சண்முகா சிவசக்த் பாலா //
(ஓம்முருகா)

ஓம் சரவணபவ தேவாஸ்கந்தா //
சூரசம்ஹாரா மாயோன் மருகா //
(ஓம் முருகா)

✶



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




With Best Compliments From

**THE OSSIANIC TRADERS**

**F 41, People's Park Complex,**
**Gas Works Street, Colombo 11,**
**Sri Lanka.**
**Phone: 445745 Fax: (941) 445745 Telex: 22993 Rojair CE**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



With Best Compliments From

**NITHYA JEWELLERS**

**No. 9, FERNANDO AVENUE,**

**NEGOMBO.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவடியாம் காவடி கந்த வேலன் காவடி //
காவடியாம் காவடி காண வேண்டும் கண் கோடி //
வேல்முருகன் நாமத்திலே வித விதமாய் காவடி //
வெற்றி வேலன் காவடி வீரவேலன் காவடி //
சிங்கார வேலனுக்கு சின்ன சின்ன காவடி //
சுவாமிமலை நாதனுக்கு சந்தனத்தில் காவடி //
பழநிமலை பாலனுக்கு பால் குடத்தால் காவடி //
தென்பழநி வேலனுக்கு தேன் குடத்தால் காவடி //
ஆறுமுக வேலனுக்கு அழகு மயில் காவடி //
வண்ண வண்ண காவடி கந்த வேலன் காவடி //
(காவடியாம்)

★

சரவணா சிவகுமாரா சண்முகநாதா ஜெய் ஜெய்
சண்முகநாதா //
சுப்பிரமண்யா கார்த்திகேயா கதிர்வேலா //
சண்முகநாதா ஜெய்ஜெய் சண்முகநாதா //
சரணம் சரணம் சண்முகநாதா — ஓம்
சரணம் சரணம் சண்முகநாதா

★

வள்ளி மோஹனா புள்ளி மயில் வாகனா //
ஆறுமுகக் கந்தனே சுந்தர வதனா //
குமர குரு பரசண்முக வடிவேலவா //
முருகா ஹரி முருகா சிவசக்தி பாலகா //
(வள்ளி மோஹனா)

★

சரவணபவ குக ஓம் முருகா //
இருவினை கெடவர அருள் முருகா //
பக்திபுரிவாசா சாயி முருகா //
சிவ முருகா ஹர ஹர முருகா //

★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுப்ரமண்யம் சுப்ரமண்யம்
சண்முகநாதா சுப்ரமண்யம்
சுப்ரமண்யம் சுப்ரமண்யம்
சண்முகநாதா சுப்ரமண்யம்
சிவ சிவ சிவ சிவ சுப்ரமண்யம்
ஹர ஹர ஹர ஹர சுப்ரமண்யம்
சிவ சிவ ஹர ஹர சுப்ரமண்யம்
ஹர ஹர சிவ சிவ சுப்ரமண்யம்
சிவ சரவணபவ சுப்ரமண்யம்
குரு சரவணபவ சுப்ரமண்யம்
சிவ சிவ ஹர ஹர சுப்ரமண்யம்
ஹர ஹர சிவ சிவ சுப்ரமண்யம்

★

அன்பருக்கு அன்பனே நீ வா வா முருகா
ஆறுபடை வீடுடையாய் நீ வா வா முருகா
இன்பமய ஜோதியே நீ வா வா முருகா
ஈசனுமை பாலகனே நீ வா வா முருகா
உலகநாதன் மருகனே நீ வா வா முருகா
ஊமைக்கருள் புரிந்தவனே நீ வா வா முருகா
எட்டுக்குடி வேலவனே நீ வா வா முருகா
ஏறுமயில் ஏறியே நீ வா வா முருகா
ஐங்கரனுக் கிளையவனே நீ வா வா முருகா
ஒய்யாரி வள்ளி லோலா நீ வா வா முருகா
ஓங்கார தத்துவமே நீ வா வா முருகா
ஔவைக் குபதே சித்தவா நீ வா வா முருகா
அகில லோக நாயகனே நீ வா வா முருகா
ஹரக ரோகரா சாமி ஹரக ரோகரா
ஹரக ரோகரா சாமி ஹரக ரோகரா

★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அம்மன் பாடல்

*சமயபுரத்தாளே மாரியம்மா — அம்மா*
*சங்கரியே எங்கள் முன்னே வாருமம்மா*
*(சமயபுரத்தாளே)*

*மல்லிகைச் சரம் தொடுத்து மாலையிட்டோம்*
*அரிசி மாவிளக்கு ஏற்றி வைத்து*
*பொங்கலும் வைத்தோம்*
*துள்ளியே எங்கள் முன்னே வாருமம்மா*
*அம்மா தூயவளே என் தாயே மாரியம்மா*
*(சமயபுரத்தாளே)*

*பட்டு பீதாம்பரத்தில் தாவணியும் — உனக்கு*
*பாவாடை சேலைகளும் கொண்டு வந்தோம்*
*எட்டு திசைகளையும் ஆள்பவளே*
*அம்மா ஈஸ்வரியே என் தாயே மாரியம்மா*
*(சமயபுரத்தாளே)*

*கத்தி கதறுகிறோம் கேட்கலையோ*
*தாயே கல்லேதான் உன் மனமும் கரையலையோ*
*உலகமே ஆடுதம்மா உன் சிரிப்பிலே*
*எங்கள் உமையவளே தாயே மாரியம்மா*
*(சமயபுரத்தாளே)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலிற் சலங்கை ஒலி காதைத் துளைக்குதம்மா
பாவாடை தாவணியும் தானாக ஆடுதம்மா
பூவாடை வீசுதம்மா பூமகளே உனக்கு
பாமாலை கொண்டு வந்தோம் பாரம்மா
(சமயபுரத்தாளே)

★

சந்ரமௌலீஸ்வரி சங்கரி சங்கரி ||
மங்களப்ரதாயினி மதனகோடி சுந்தரி ||
மாதவஹரி சோதரி தேவி ஜெகன் மோகினி ||
(சந்ரமௌளி)

★

அஞ்சாத செஞ்டாச்சி மாகாளி
ஆதிசிவன் பத்தினியே திரிசூலி (அஞ்சாத)
கொஞ்சும் சதங்கை ஒலி கேட்குதம்மா - உன்
கெண்டை கூத்துக்கண்டு மனம் குளிருதம்மா (அஞ்சாத)
செஞ்சடையை அலங்கரிக்கும் நாகம்மா - உன்
தேகமெல்லாம் விளையாடும் நாகம்மா (அஞ்சாத)
பாலாபிஷேகம் செய்து மாகாளி - உந்தன்
பாதம் தனை தொழுதிடுவோம் திரிசூலி (அஞ்சாத)
தேனாபிஷேகம் செய்து மாகாளி - உன்
சேவடியை சேவித்திடுவோம் திரிசூலி (அஞ்சாத)
செவ்வரளி மாலை போட்டு மாகாளி - உனக்கு
செய்திடுவோம் பூஜைகளும் திரிசூலி (அஞ்சாத)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல்லிகைப்பூ சரம் தொடுத்து மாகாளி - உந்தன்
மலரடியை தொழுதிடுவோம் திரிசூலி (அஞ்சாத)
சமயபுர மாரியம்மா மாகாளி - எங்கள்
சஞ்சலங்கள் தீர்த்திடுவாய் திரிசூலி (அஞ்சாத)
வேற்காட்டு கருமாரி மாகாளி - அம்மா
எங்களை நீ காத்திடுவாய் திரிசூலி (அஞ்சாத)
தஞ்சமென்று வருவோர்க்கு மாகாளி - உந்தன்
கண் திறந்து காட்சி தருவாய் திரிசூலி (அஞ்சாத)

★

அம்மா மஞ்சமாதா எங்கள் அழகு மஞ்சமாதா
ஆனந்தமாய் விற்றிருப்பாள் அன்னை மஞ்சமாதா
எங்கும் நிறைந்திருப்பாள் எங்கள் மஞ்சமாதா
எங்கள் குலம் காக்க வந்திடுவாள் அன்னை மஞ்சமாதா
(அம்மா)

மஞ்சள் முகத்தழகி எங்கள் மஞ்சமாதா
மங்காத ஜோதி அவள் எங்கள் மஞ்சமாதா
உலகனைத்தும் காப்பவளே அம்மா மஞ்சமாதா
உன்பாதம் சரணடைந்தோம் அம்மா மஞ்சமாதா
(அம்மா)

சபரியிலே கோயில் கொண்ட எங்கள் மஞ்சமாதா
மங்கயரை காத்தருளும் அன்னை மஞ்சமாதா
மாங்கல்யம் தந்திடுவாய் எங்கள் மஞ்சமாதா
மாளிகை புரத்தழகி அன்னை மஞ்சமாதா (அம்மா)

★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவன் பாடல்

சிவாய பரமேஸ்வராய சசி சேகராய நம ஓம் ||
பவாய குணசம்பவாய சிவ தாண்டவாய நம ஓம் ||
(சிவாய)

★

ஓம் சிவாய நமசிவாய ஓம் சிவாய சங்கரா ||
சசிகரனே சுந்தரனே ஓம் சிவாய சங்கரா ||
ஆடும்பாம்பை அணிந்தவனே ஓம் சிவாய சங்கரா ||
கங்கையை தரித்தவனே ஓம் சிவாய சங்கரா ||
(ஓம் சிவாய)

★



கிருஸ்ணன் பாடல்

மதுர மதுர முரளி கனஸ்யாமா
மதுராதி பதே ராதே ஸ்யாமா
சூரதாச பிரபு ஹே கிரிதாரி
மீராகே பிரபு ஹ்ருதய விஹாரி (மதுர)

★

கோவிந்த கிருஷ்ண விட்டலே - வேணு ||
கோபால கிருஷ்ண விட்டலே - ஸ்ரீ ||
ரங்க ரங்க விட்டலே - ஸ்ரீ ||
பாண்டு ரங்க விட்டலே ||

★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனந்த ஸாகரா முரளீ தரா
மீரா பிரபு ராதே ஸ்யாம வேணு கோபாலா
நந்த யசோதா ஆனந்த கிசோரா
ஜெய் ஜெய் கோகுல பாலா ஜெய் ராஜ கோபாலா

*



மீனாட்க்ஷி பாடல்

யாதுமாகி நின்றாய் — தாயே
எங்கும் நீ நிறைந்தாய்
தீது நன்மை யெல்லாம் - நின்றன்
செயல் களன்றி யில்லை
போதுமிங்கு மாந்தர் - வாழும்
பொய்மை வாழ்க்கை யெல்லாம்
ஆதிசக்தி தாயே என் மீ
தருள்புரிந்து காப்பாய் (யாது)

எந்த நாளும் நின்மேல் - தாயே
இசைகள் பாடி வாழ்வேன்
கந்த னைப்ப யந்தாய் - தாயே
கருணை வெள்ள மானாய்
மந்த மாரு தத்தில் - வானில்
மலையினுச்சி மீதில்
சிந்தை யெங்கு செல்லும் - அங்குன்
செம்மை தோன்றுமன்றே (யாது)

*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தமனாம் சத்தியனாம்
ஐயப்பனே துணை



SRI LANKA STORES

*19 Dam Street*
*Colombo-12*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



With Best Compliments From

**NADHIKA JEWELLERY**

22 Kt. Manufacturers & Jewellers

**No. 7, Grand Street,**
**Negombo.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




With Best Compliments From

**ROHINI MOTORS**

Dealers in Volkswagen and Peugeot Spares.

**251 / 10, SRI SANGARAJA MAWATHA,**

**COLOMBO 10**

**699**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கன்னிமூல கணபதியை வேண்டிக்கிட்டு

கன்னிமூல கணபதியை வேண்டிக்குட்டு – நாங்க
கார்த்திகை மொததேதி மாலை இட்டோம் – நாங்க //
அய்யப்பா அய்யப்பா என்றே சொல்லி – நாங்க
ஆறுவாரம் தானே நோம்பிருந்தோம் – நாங்க (கன்னி)

எங்க குருசாமி துணைகொண்டு அவர்பாதம் நம்பிக்கிட்டு
இருமுடியை சொமந்துகிட்டு வந்தோமய்யா
ஆறுபடை வீடு சென்று கந்தனையே வேண்டிக்கிட்டு
யாத்திறையாய் நடந்து வந்தோமய்யா (கன்னி)

குருவாயூர் கோயில் முதல் கன்யாகுமரிவரை
தரிசனமே செய்துவிட்டு வந்தோமய்யா
எருமேலிபேட்டைதுள்ளி வாவரையும் வேண்டிக்கிட்டு
பேரூர்தோட்டில் பொரிபோட்டு வந்தோமய்யா (கன்னி)

காளைகட்டி அஞ்சல் வந்து அழுதாமலை ஏறிகிட்டு
கரிமலையின் உச்சியிலே வந்தோமய்யா
பம்பையிலே குளிச்சிப்புட்டு பாவங்களைத் தொலச்சுப்புட்டு
நீலிமலை ஏறிக்கிட்டு வந்தோமய்யா (கன்னி)

பதினெட்டாம் படிதாண்டி பகவானே உனைவேண்டி
கற்பூரஜோதிதனைக் கண்டோமய்யா
மகரஜோதியைக் கண்டு மனமாரச் சரணம் போட்டு
மணிகண்டா உன்மகிமை அறிந்தோமய்யா (கன்னி)

★

## கண்திறந்து பாரப்பா

ஓம் ஓம் ஐயப்பா – ஓம்குருநாதா ஐயப்பா
அரானர் பாலா ஐயப்பா – அம்பிகை பாலா ஐயப்பா
ஈசன் மகனே ஐயப்பா – ஈஸ்வரிமைந்தா ஐயப்பா
உமையாள் பாலா ஐயப்பா – உறுதுணை நீயே ஐயப்பா
பம்பையின் பாலா ஐயப்பா – பந்தள வேந்தே ஐயப்பா
சபரிகிரிசா ஐயப்பா – சாந்த சொரூபா ஐயப்பா
மோகினி பாலா ஐயப்பா – மோகனரூபா ஐயப்பா

★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சரணம் சரணம் என்றால் சபரிமலை கிடுகிடுக்கும்

சரணம் சரணம் என்றால் சபரிமலை கிடுகிடுங்க
மூல முதற்பொருள் விநாயகனை வணங்கிடுவோம்
ஜெயந்திநகர் முருகனுக்கு மேளதாளம் முழங்கிடுவோம்
ஆத்தாள் ஈஸ்வரியை அன்புடனே அழைத்திடுவோம்
ஐயப்ப சுவாமிக்கு சரணகோஷம் முழங்கிடுவோம்
(சரணம்)

கார்த்திகையில் மாலையிட்டு கடும்விரதம் இருந்துவந்தோம்
மார்கழியிலை கட்டும்கட்டி மகரஜோதி காண வந்தோம்
எருமேலி பேட்டைதுள்ளி இன்பமுடன் ஆடிவந்தோம்
பேரூர்த்தோட்டில் பொரிபோட்டு பேரின்பம் அடைந்து
வந்தோம் (சரணம்)

அழுதமலை ஏற்றத்திலே ஆனந்தமாய் ஏறி வந்தோம்
கரிமலையின் உச்சியிலே பகவதியை வேண்டி வந்தோம்
பம்பா நதிக்கரையில் சக்திபூசை நடத்தி வந்தோம்
நீலிமலை ஏற்றத்திலே நின்பாதம் சரணடைந்தோம்
(சரணம்)

சபரிபீடம் சரங்குத்தியில் சரத்தைப்போட்டு வணங்கி
வந்தோம்
பதினெட்டாம் படியடைந்து பக்தியுடன் ஏறி வந்தோம்
நெய் அபிஷேகம் செய்து நாங்க செஞ்சுருக வேண்டி
வந்தோம் (சரணம்)

✶

## ஸ்ரீ சபரிவாசா பாஹிமாம்

ஸ்ரீ சபரிவாசா பாஹிமாம்
ஸ்ரீ ஆனந்த ரூபனே பாஹிமாம்
ஸ்ரீ மோகன ரூபனே பாஹிமாம்
ஸ்ரீ ஜோதிஸ்வ ரூபனே பாஹிமாம் (ஸ்ரீ சபரிவாசா)
நானிருக்க பயமேன் என்றே சொல்வார்
நாடிவந்தோரைக் காத்திடுவார்
உன்னை எண்ணியெண்ணி நெஞ்சம் உருகினேன்

✶



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னை எங்கெங்கோ தேடி நான் ஓடினேன்
பண்ணிசைத்து உன்புகழ் பாடினேன்
பிரபே பாராமுகம் இது நியாயமா (ஸ்ரீ சபரிவாசா)

✶

## சந்தனமுனா சந்தனம்

சந்தனமுனா சந்தனம் சபரிமலை சந்தனம் — அந்த
சந்தனத்த பூசிகிட்டு சரண கோஷம் போடுங்க
அத்தருனா அத்தரு அழுதமலை அத்தரு – அந்த
அத்தரத்தான் பூசிகிட்டு ஆனந்தம்மா ஆடுங்க
பன்னிருனா பன்னிரு பம்பா நதி பன்னிரு அந்த
பன்னீரத்தான் தெளிச்சிகிட்டு பாவங்களை போக்கிடுக்க
குங்குமம்முனா குங்குமம் குழத்துப்புழ குங்குமம் - அந்த
குங்குமத்தை வைச்சிகிட்டு கூட்டமாக ஆடுங்க

சத்தியமான படியுங்க ஐயன் பதினெட்டாம் படியுங்க
படியில் தேங்கா உடையுங்க பகவான வேண்டுங்க
நெய்யபிஷேகம் செய்திடுங்க நெஞ்சுருக வேண்டுங்க
நெனச்சதெல்லாம் தருவார் நம்ம நீலிமல வாசனுங்க

★

## பதினெட்டு படிகள்

அதோ தெரியு பதினெட்டு படிகள்
ஐயப்ப சுவாமியின் அருள் திருவடிகள்
அறிந்தோ அன்றியோ செய்திட்ட பிழைகள்
அனைத்தையும் மன்னிக்கும் அவன் மலர் விழிகள் (அதோ)

சதா சஞ்சலம் கொள் நெஞ்சிற்கு மருந்து
சுவாமியே சரணம் நாவிற்கு விருந்து
எது வந்தால் என்ன எனச்சொல்லி
இருமுடி சுமந்து அமிதத்தை அருந்து (அதோ)

ஒரே உறுதி கொள் மலையில் ஏறு
ஒரு நினைவாக அவன் புகழ்
மகர ஜோதியும் சுழலுது பாரு
அவன் புகழை அனைவருக்கும் கூறு (அதோ)

★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆயிரம் தீபங்கள் ஆயிரம் தீபங்கள்

ஆயிரம் தீபங்கள் ஆயிரம் தீபங்கள் கண்ணில் தெரியுது
பம்பையாற்றில்
மணிகண்டன் பிறந்தது பம்பையாற்றில் (கோஷ்டி)

சரணம் சரணம் ஐயப்பா சரணாகரனே ஐயப்பா
சரணம் சரணம் சரணாகரனே ஸ்ரீ மணிகண்டா ஐயப்பா
(கோஷ்டி)

எரிமேலிதானே சென்றிடுவோம் பேட்டைதானே
துள்ளிடுவோம்
பேட்டைதுள்ளி வாவரை வணங்கி வனத்தின் நடுவே
சென்றிடுவோம் (ஆயிரம் தீபங்கள்)

அழுதா நதியை அடைந்திடுவோம் அளவில்லா இன்பம்
கொண்டிடுவோம்
அழுதையில் மூழ்கி கல்லினை எடுத்து கல்லிடும் குன்றில்
இட்டிடுவோம் (ஆயிரம் தீபங்கள்)

கரிமலை ஏற்றம் ஏறிடுவோம் கரிமலை அம்மனை
வணங்கிடுவோம்
கரிமலை அம்மனை வணங்கி கொண்டு வனத்தின் நடுவே
சென்றிடுவோம் (ஆயிரம் தீபங்கள்)

கரிமலை இறக்கம் இறங்கிடுவோம்
பம்பா நதியை அடைந்திடுவோம் பம்பா சக்தி
நடத்திடுவோம்
பம்பா சக்தி நடத்தி சென்று பம்பா வாசனை
வேண்டிடுவோம் (ஆயிரம் தீபங்கள்)

பதினெட்டுப் படியை அடைந்திடுவோம் படியில் தேங்காய்
உடைத்திடுவோம்
படியில் தேங்காய் உடைத்து சென்று
நெய்யபிஷேகம் செய்திடுவோம்

✶



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்க சாமி

எங்க சாமி தங்க ஐயப்பசாமி — அந்த
சபரிமலை மீதிருக்கும் மெய்யப்பசாமி
சஞ்சலங்கள் தீர்த்து வைக்கும் ஐயப்பசாமி — எங்க
சரணகோஷம் கேட்டு வரும் மெய்யப்பசாமி
குழு : (எங்க சாமி)

பம்பா நதிக்கரையில் ஐயப்பசாமி — எங்க
பாவங்களை தீர்த்துவைக்கும் மெய்யப்பசாமி
காந்தமலை மீதினிலே ஐயப்பசாமி — எங்க
மனங்குளிர காட்சி தரும் மெய்யப்பசாமி
குழு : (எங்க சாமி)

நெய்யாலே குளிச்சிடுவான் ஐயப்பசாமி — எங்க
நெஞ்சினிலே நிறைந்திடுவான் மெய்யப்பசாமி
கனிவோடு காத்தருளும் ஐயப்பசாமி — எங்க
கண்கண்ட தெய்வம் நீயே மெய்யப்பசாமி
குழு : (எங்க சாமி)

★

## கூடவரும் ஐயப்பா

காட்டில் உண்டு கொடிய மிருகங்கள்
காட்டானைகள் கடுவாய் புலிகள்
கூட்டமோடு வரும் நேரம்
கூட வரும் ஐயப்பா உங்களுடன்
கூட வரும் ஐயப்பா (காட்டில் உண்டு)

கல்லும் முல்லும் கடந்து வந்தோம்
கரிமலை ஏற்றம் ஏறி வந்தோம்
கலியுகத்தினிலே புலியின் மேலே
சவாரி செய்யும் ஐயப்பா காட்சிதரும் ஐயப்பா
எங்களுடன் கூடவரும் ஐயப்பா (காட்டில் உண்டு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காடும் மலையும் உன்னுடைய ராஜ்யம்
காலம் வந்தால் நம்முடை ராஜ்யம்
கருணாநிதியே கருணாகரனே
காத்தருளும் ஐயப்பா
எங்களுடன் கூடவரும் ஐயப்பா (காட்டில் உண்டு)

★

திம் தகத்தோம் திம் தகத்தோம் ஐயப்பா
தெய்வத்தில் நீ ஒருவன் மெய்யப்பா
தேடினோம் கூடினோம் கருணை செய்யப்பா
தினம் உனை நாடினோம் சாமி ஐயப்பா (திம்)

மார்கழியில் நாங்களெல்லாம் பேட்டைதுள்ளினோம்
மலைமீது ஏறி வந்து உன்னைப்பாடுவோம்
வரிசையுடன் பம்பை நதி நீரில் ஆடுவோம்
வாவரெனும் துணைவனையும் வணங்கக் கூடுவோம்

மனதில் எமக்கு இடம் கொடுத்து உதவி செய்யப்பா
மகர விளக்கைக் காண வேண்டும் சாமி ஐயப்பா

சாமி திம் தகத்தோம் – தோம்
ஐயப்ப திம் தகத்தோம் (சாமி)
சாமியே ஐயப்பா
சாமியே ஐயப்பா

கடலும் வானும் உன்னாலே காற்றும் மழையும் உன்னாலே
உடலின் உறுதி உன்னாலே உள்ளம் செழிப்பதும் உன்னாலே
கன்னிபுரத்து மாதவி காவலிருப்பதும் உன்னாலே
கார்த்திகை மாதம் வந்தாலே சேவா சங்கம் உன்னோட
வாக்கும் வலிமையும் நீயப்பா வாழ்வை தருவாய் ஐயப்பா
வீரமும் செல்வமும் நீயப்பா வெற்றியைத் தருவாய் ஐயப்பா

சாமி திம் தகத்தோம் – தோம்
ஐயப்ப திம் தகத்தோம் (சாமி)
சாமியே சரணம் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வந்தோமையா சபரி வந்தோமையா

வந்தோமையா சபரி வந்தோமையா
கட்டேந்தி சபரிக்கு வந்தோமையா
கார்த்திகை நல்ல நாளில் மாலையிட்டு
மார்கழி நல்ல நாளில் கட்டும் கட்டி (வந்தோ)

குங்குமபொட்டு சந்தன பொட்டு வைச்சுகிட்டு
கூட்டமாக சபரிமலை ஏறிகிட்டு
சாமி சரணம் நாமம் அதை சொல்லிக்கிட்டு
சாமியே திந்தமிக்க ஐயப்பா திந்தமிக்க
ஜிகுதாளம் போட்டுகிட்டு பேட்டைதுள்ளி ஆடிகிட்டு
(வந்தோ)

காட்டானை கூட்டத்த பார்த்துவிட்டு
கடுவாய் புலிகளையும் நோக்கிகிட்டு
சாமி சரணம் நாமம் அதை சொல்லிகிட்டு
சாமியே தீந்தமிக்க ஐயப்பா தீந்தமிக்க
ஜிகுதாளம் போட்டுகிட்டு பேட்டைதுள்ளி ஆடிகிட்டு
(வந்தோ)

★

## பக்தர் குறையை தீர்த்தருள்வாய்

சரணம் சரணம் சரணம் சரணம் சாமி ஐயப்பா
எங்கள் சந்ததியே உமக்கடிமை சரணம் ஐயப்பா
பக்தியுடன் உனை பணிந்தோம் சாமி ஐயப்பா
இந்த பக்தர் குறை தீர்த்தருள்வாய் சரணம் ஐயப்பா
கார்த்திகையில் மாலையிட்டோம் சாமி ஐயப்பா
நாங்க கடும் விரதம் இருந்து வந்தோம் சரணம் ஐயப்பா
கடுமலை கடந்து வந்தோம் சாமி ஐயப்பா
உணை காண நாங்கள் ஓடி வந்தோம் சரணம் ஐயப்பா
ஜாதி மதம் பேதம் இல்லை சாமி ஐயப்பா
அந்த ஜாதி சமயம் கடந்தவனே சரணம் ஐயப்பா
கறுப்பாடை அணிந்து வந்தோம் சாமி ஐயப்பா
எங்களை காத்தருள வேண்டும் ஐயா சரணம் ஐயப்பா

★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தந்தனத்தான் பாடுங்கள்

தந்தனத்தான் பாடுங்க தாளம் போட்டு ஆடுங்க
சபரிமலைக்கு வாருங்க சன்னிதியை பாருங்க
(தந்தனத்தான்)

எருமேலிக்கு வாருங்க பேட்டை துள்ளி ஆடுங்க
சாமிதிந்தகதோம் தோம் ஐயப்பதிந்தக்க தோம் தோம்
வாவரையும் கேளுங்க வந்திடுவார் துணைக்குங்க
(தந்தனத்தான்)

அழுதமலையில் ஏறுங்க ஆனந்தமாய் இறங்குங்க
கரிமலையை கடந்து பம்பா நதிக்கரைக்கு வாருங்க
பாவம்தீர குளியுங்க தாகம்தீர குடியுங்க
மூப்பு, நோய் பிணியாவும் நொடி பொழுதில் மறையுங்க
ஊமைகளும் பேசுங்க ஊழ்வினையும் களையுங்க
உத்திரத்தில் உதித்த அந்த உத்தமனை பாடுங்க
(தந்தனத்தான்)

★

## சரணம் ஐயப்பா

சரணம் சரணம் ஐயப்பா
சபரிமலை சாஸ்தாவே ஜோதி நீயப்பா (சரணம்)

தந்தனத்தான் பாடும் மலை
சரண கோஷம் முழங்கும் மலை
சஞ்சலங்கள் தீர்க்கும் மலை
சாமி வாழும் சபரிமலை (சரணம்)

பப்பை நதி ஓடும் மலை
பம்பா வாசன் வாழும் மலை
பாவங்கள் போக்கும் மலை
சாமி வாழும் சபரிமலை (சரணம்)

★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிலாவில் ஒளிவீசும்

நிலாவில் ஒளிவீசும் நின்னுடைய
நீலவானம் ஐயா — இந்த
உலகில் அனைவரையும் ஒன்றாக்கும்
உந்தன் நாமம் ஐயா (நிலா)

மலைகள் கடந்து வந்தோம் — ஐயப்பா
மனமிரங்கி வருவாய்
அலையும் மனதினிலே ஐயப்பா
அமைதி தாராயோ (நிலா)

வனங்கள் கடந்து வந்தோம்
எமக்கொரு மார்க்கம் அருளாயோ
இருளை அகற்றிடவே என் வாழ்வில்
இன்பம் தாராயோ (நிலா)

நியமம் ஒன்றறியேன் நின்னடியார்
நிழலில் நின்றறியேன்
சுயவன் நானறியேன் ஐயப்பா
கருணை புரியாயோ (நிலா)

மதுராபுரி வதனா ஐயப்பா
மதன மோகனனே — வணங்கும்
குருமுனிவன் நன் மொழியால்
மகிழும் சிவமணியே (நிலா)

★

## கானகத்தில் வாழ்கின்ற ஐயன்

கானகத்தில் வாழுகின்ற ஐயனப்பா — சபரி
காடு மலை கடந்து வரச் சொன்னானப்பா
ஞான மொழி பேசுகின்ற பாலனப்பா — எங்கும்
கானமழை பொழிகின்ற சீலனப்பா (கான)

காவியத்தில் பம்பை புகழ் பாலனப்பா
ஒவியத்தில் காந்தமலை ஜோதியப்பா
மானிலத்தை ஆளவந்த மன்னனப்பா — கண்ணன்
மாயவனார் பெற்றெடுத்த மைந்தனப்பா (கான)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பும் வில்லும் ஏந்தி வரும் வீரனப்பா — எங்கும்
அமரர் குலம் காக்க வரும் மெய்யனப்பா
ஐம்புலனை அடக்கி ஆளும் ஐயனப்பா — எங்கள்
ஐயம் எல்லாம் தீர்த்திடவே வந்தானப்பா (கான)

★

## காட்சி தரும் ஐயப்பா

கற்பூர சுடர் ஒளியில் காட்சி தரும் ஐயப்பா
கனிவுடனே அருள் வழியால் காத்திடுவாய் ஐயப்பா
அற்புதமாய் சபரிமலை அமர்ந்திருக்கும் ஐயப்பா
பொற்பதங்கள் சரணம் என்றும் போற்றிடுவோம் ஐயப்பா
(கற்பூர)

எண்ணியதை திண்ணமுற செய்திடுவாய் ஐயப்பா
என்றும் உள்ள பரம் பொருளே இனியவனே ஐயப்பா
விண் அதிர மண் அதிர பாடி வந்தோம் ஐயப்பா
விருப்பமோடு பதினெட்டாம்படி ஏறிவந்தோம் ஐயப்பா
(கற்பூர)

நெய் குளித்து மெய் விளங்க நீயிருப்பாய் ஐயப்பா
நெஞ்சுருகி பாடி உன்னை தேடி வந்தோம் ஐயப்பா
தை மாத ஜோதி தரும் தரிசனமே ஐயப்பா
தருணமிகு கருணையுடன் அருள் தருவாய் ஐயப்பா

★

## ஆடுராஜா எங்கள் நாகராஜா

ஆடுராஜா பிரபு நாகராஜா — எங்கள்
ஐயப்பன் பேரை சொல்லி ஆடுராஜா
பாடுராஜா பிரபு நாகராஜா — எங்கள்
ஐயப்பன் பேரை சொல்லி பாடுராஜா
குழு : (ஆடுராஜா)

சரண கோஷம் போட்டுவரும் பக்தர பாரு
சன்னிதியை நாடிவரும் கூட்டத்த பாரு
ஐயப்பன பாடும் கன்னி சாமியப் பாரு
காட்டில் கருணையுடன் வழி நமக்கு கொடுதிடு பாரு
குழு : (ஆடுராஜா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐயப்பன் அழகை பாருங்க

சரணம் சரணம் என்று சொல்லிப் பாருங்க — அந்த
சபரிமலைக்கு நீங்க வந்து பாருங்க (சரணம்)

அச்சன் கோயில் அரசனையும் வந்து பாருங்க - அந்த
ஹரிஹர புத்திரனின் அழகை பாருங்க (சரணம்)

ஆரியங்கா ஐயாவையும் வந்து பாருங்க - அந்த
ஆனந்த ரூபன் அவன் அழகைப் பாருங்க (சரணம்)

குழத்துபுழ பாலனையும் வந்து பாருங்க — அந்த
குலம் காக்கும் குழந்தை அவன் அழகைப் பாருங்க
(சரணம்)

பந்தளத்து வேந்தனையும் வந்து பாருங்க — அந்த
பால் வடியும் பாலகனின் அழகைப் பாருங்க (சரணம்)

எருமேலி சாஸ்த்தாவையும் வந்து பாருங்க — அந்த
ஏகாந்த வாசன் அவன் அழகைப் பாருங்க (சரணம்)

சபரிமலை சாஸ்த்தாவை வந்து பாருங்க — அந்த
சாந்தஸ்வ ரூபன் அவன் அழகை பாருங்க (சரணம்)

★

## ஆடி பாடி வந்திடுவோம்

அப்படி இப்படி ஆடிபாடி ஆனந்தம் கொண்டு நாம
எப்படியும் சபரிமலை வந்திடுவோம்
கார்த்திகையில் மாலைபோட்டு கடுவிரதம் இருந்து நாம
மார்கழியில் கட்டும் கட்டு மணிகண்டன் பார்த்து நாம
எருமேலி பேட்டைத் துள்ளி பேருத் தோடை பார்க்க நாம
அழுதையிலே குளித்துப்புட்டு அழுதமலை ஏறி நாம
(அப்படி இப்படி)

கரிமலையில் ஏறிகிட்டு பகவதியை பார்த்து நாம
பம்பா நதி தீர்த்தத்திலே பாவம் யாவும் போக்கி நாம
நீலிமலை ஏறி அன்னை சபரியையும் பார்த்து நாம
சரங்குத்தியில் சரத்தை போட்டு சன்னதியை பார்த்து நாம
சரண கோஷம் முழங்குவோம் சாஸ்த்தாவை பாடுவோம்
(அப்படி இப்படி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துளசிமணிமாலை போட்டிடுங்க

துளசிமணிமாலை அணிந்திடுங்க
நம்ம ஐயன் ஐயப்பனை பாடிடுங்க
சந்தன மாலையும் போட்டிடுங்க
நல்ல சரணக்கோஷம் சொல்லி வேண்டிடுங்க
(துளசிமணிமாலை)

பந்தள வேந்தனை பாத்திடுங்க – அவன்
பாதார விந்தத்தை வணங்கிடுங்க
வில்லாளி வீரனை போற்றிடுங்க – அந்த
வீரனை பணிந்து கும்பிடுங்க
(துளசிமணிமாலை)

இருமுடி சுமந்து சென்றிடுங்க - அந்த
எருமேலி பேட்டை துள்ளிடுங்க
கரிமலை ஏற்றம் ஏறிடுங்க – அந்த
கரிமுகன் தம்பியை கண்டிடுங்க
(துளசிமணிமாலை)

பம்பை நதியினில் குளிச்சிடுங்க – நம்ம
பாவங்கள் யாவையும் போக்கிடுங்க
நெய் அபிஷேகம் செய்திடுங்க – வெற்றி
நிச்சயம் உண்டு நம்பிடுங்க

சாமியே சரணம் ஐயப்ப சரணம்
சாமியே சரணம் ஐயப்பா

✶

## பள்ளிக்கூடம் சபரிமலை

பள்ளிக்கூடம் சபரிமலையிங்க
படிக்கும் பாடமெல்லாம் சரணகோஷங்க
சொல்லித் தந்தார் குருசாமிங்க
நாமும் சொல்லச் சொல்லக் கோடி நன்மைங்க
(பள்ளிக்கூடம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்த்திகையிலே மாலை போடுங்க
மார்கழி கடைசியிலே புறப்பட்டு வாங்க
ஊர்வலம் போல் ஏறும் கூட்டமுங்க
அன்பால் ஒன்றுபட்ட ஐயப்பன் மாருங்க
(பள்ளிகூடம்)

பம்பை கரையில் வந்த தெய்வங்க
அந்த பந்தளத்தில் வளர்ந்த சாமிங்க
நம்பி வந்தால் இன்பம் தானுங்க
இதுவே நல்லோர்கள் சொன்னச் சொல்லுங்க
(பள்ளிகூடம்)

நீண்டு வரும் காடு மலையிங்க
எங்கும் நிறைந்து வரும் சாமிமாருங்க
பொன்னான ஜோதி பாருங்க
நாம கண் படைச்ச பயன் அதுதாங்க

★

## ஐயப்ப நாமம் சொல்லு

கருப்பனும் முன்னே வர கருத்தசாமி பின்னே வர
வாபரும் கூட வர வந்தோமய்யா சபரிமலை
ஐயப்ப நாமம் சொல்லு நல்ல சரண கோஷம் போடு ||
சந்தனக் காட்டினிலே புலிகள் எல்லாம் வழி கொடுக்க
கரிமுகன் துணைக்கு வர வந்தோம் ஐயா சபரிமலை
ஐயப்ப நாமம் சொல்லு நல்ல சரண கோஷம் போடு ||
நீலகண்டன் துணைபுரிய நீலிமலை ஏறி வர
நாகராஜா அருள் புரிய வந்தோம் ஐயா சபரிமலை
ஐயப்ப நாமம் சொல்லு நல்ல சரண கோஷம் போடு ||
சரங்குத்தி ஆலினிலே சரத்தை போட்டு வணங்கிவர
மஞ்சமாதா வரம் அருள வந்தோம் ஐயா சபரிமலை
ஐயப்ப நாமம் சொல்லு நல்ல சரண கோஷம் போடு ||

★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருப்பன் வாரான்

கருப்பன் வாரான் கருப்பன் வாரான் கறுப்பசாமி
அவர் கார்மேகம் போல வாரான் கறுப்பசாமி
முக்கொண்டைகாரன் வாரான் கறுப்பசாமி
அவன் முன்கோபக்காரன் வாரான் கறுப்பசாமி
பம்பா நதி காவல்காரன் கறுப்பசாமி
அந்த பதினெட்டு படிகாவல் கறுப்பசாமி
சந்தனப் பொட்டுகாரன் கறுப்பசாமி
அந்த சபரிமலை காவல்காரன் கறுப்பசாமி
கச்சையை கட்டிவாரான் கறுப்பசாமி
அவன் கை அறுவால் கொண்டுவாரான் கறுப்பசாமி
வில்லுபாட்டு பாடி வாரான் கறுப்பசாமி
அவன் விதவிதமாய் ஆடிவாரான் கறுப்பசாமி
மீசையை முறுக்கி வாரான் கறுப்பசாமி
அவன் முச்சந்தியில் ஆடி வாரான் கறுப்பசாமி
பந்தம் கையில் பிடித்துவாரான் கறுப்பசாமி
அவன் பரிவேட்டை யாடிவாரான் கறுப்பசாமி
முந்தியில் உறுமாறும் கறுப்பசாமி
அவன் முகத்தழகை காட்டிவாரான் கறுப்பசாமி
சந்தனத்தை பூசிவாரான் கறுப்பசாமி
அவன் சரண கோஷ போட்டுவாரான் கறுப்பசாமி

*

## எல்லாம் மணக்குது ஐயப்பன் மலையிலே

என்ன மணக்குது எங்கே மணக்குது
எல்லாம் மணக்குது ஐயப்பன் மலையிலே
அல்லிமலர் வாசமது எங்கே மணக்குது
ஹரிஹர புத்திரனின் மேலே மணக்குது
மல்லிகைப்பூ மரிக்கொழுந்து எங்கே மணக்குது
மணிகண்ட சாமியின் மேலே மணக்குது
சபரிகிரி வாசனின் மேலே மணக்குது
மஞ்சள் மகிமையது எங்கே மணக்குது
மஞ்சமாதா தேவியவள் மேலே மணக்குது
சத்தனமும் ஜவ்வாது எங்கே மணக்குது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முல்லைமலர் வாசமிது எங்கே மணக்குது
மோகினி பாலகனின் மேலே மணக்குது
காட்டுமல்லி நாட்டுமல்லி எங்கே மணக்குது
கருணாகர மூர்த்தியின் மேலே மணக்குது
கற்பூர வாசமது எங்கே மணக்குது
காந்தமலை வாசனவன் மேலே மணக்குது
குங்குமப்பூ ஜவ்வாது எங்கே மணக்குது
குளத்துப்புழை பாலகனின் மேலே மணக்குது

✶

## ஓடிவா ஐயப்பா

ஓடிவா ஐயப்பா ஓடிவா சுவாமி
நீ ஓடிவா ராஜா நீ ஓடிவா தேவா
நீ ஓடிவா கண்ணா - இந்த
பக்தர்கள் பஜனைக்கு ஓடிவா சுவாமி - அந்த
பம்பா நதி கடந்து ஓடிவா சுவாமி (ஓடிவா)

✶

## பதினெட்டாம் படிப் பாடல்

ஒன்றாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா — என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில்லை ஐயப்பா

இச் சுலோகங்களை ஒன்றிலிருந்து 18 வரை இதே போன்றே பாடவும் பதினெட்டாம் படி பாடிய பின்பு கீழே குறிப்பிட்டுள்ள சுலோகங்களையும் பாடி படிப்பாடலை நிறைவு செய்யவும்.

சத்தியத் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா — என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில்லை ஐயப்பா

✶



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி தொட்டு வந்தனம் சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா — என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில்லை ஐயப்பா

ஓம் சக்தியமான பொண்ணு பதினெட்டாம்
படிகளே சரணம் ஐயப்பா

★

ஓம் பூத நாதாய வித்மஹே
பவ நந்தனாய தீமஹி
தந்தோ சாஸ்தா பிரசோதயாத்

★

## சாஸ்தா பஞ்ச ரத்னம்

லோகவீரம் மஹா பூஜ்யம்
ஸர்வ ரக்ஷாகரம் விபும்
பார்வதீ ஹ்ருதயானந்தம்
சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம்
சுவாமியே சரணம் ஐயப்பா

விப்ர பூஜ்யம் விஸ்வ வந்த்யம்
விஷ்ணு சம்போ ப்ரியம்ஸுதம்
க்ஷிப்ர ப்ரசா'த நிரதம்'
சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம்
சுவாமியே சரணம் ஐயப்பா

மத்த மாதங்க கமணம்
காருண்யாம்ருத பூரிதம்
ஸர்வ விக்ன ஹரம்தேவம்
சாஸ்தாரம் பிரணமாம்யஹம்
சுவாமியே சுரணம் ஐயப்பா

அஸ்மத் குாலச்வரம் தேவம்
அஸ்மத் சத்ரு விநாசனம்
அஸ்மத் இஷ்ட ப்ரதா தாரம்
சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம்
சுவாமியே சரணம் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




With Best Compliments From

**VASUGHI TRADERS**

GENERAL MERCHANTS

**No. 12, DUDLEY SENANAYAKE MARKET,**
**NEGOMBO.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



With Best Compliments From

**NEW**

**NEGOMBO BRASS WORKS**

**No. 111, SEA STREET,**

**NEGOMBO.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாண்டியேச வம்ச திலகம்
கேரளே கேளி விக்ரஹம்
ஆர்த்த த்ராண பரம்தேவம்
சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம்
சுவாமியே சரணம் ஐயப்பா

ஸ்ரீ பூத நாத சதானந்த
ஸர்வ பூத தயாபரா
ரட்ச ரட்ச மஹா பாகு
சாஸ்ரே துப்யம் நமோ நமஹ:

★

# ஸ்ரீ ஐயப்பன் கவசம்

கவசம் என்றால் காப்பு என்று பொருள். போருக்கு போகிறவன் கவசம் அணிந்து செல்கிறான். தன்னை காத்துக்கொள்வதற்காக இந்த உலகத்தில் மனித வாழ்க்கையே ஒரு போராட்டமாக இருக்கிறது. அதிலிருந்து நம்மை காத்துக்கொள்ள இந்தக் கவசம் பெரிதும் பயன்படும். நம்பிக்கைதான் அடிப்படை! தெய்வ அருளும் வெற்றியும் கிட்டுவது உறுதி.

இக் கவசத்தை வழிமுறை தவறாது பாராயணம் செய்யுங்கள்.

## காப்பு

அரிஹர புத்தரனை, ஆனந்த ரூபனை
இருமூர்த்திமைந்தனை ஆறுமுகன் தம்பியை
சபரிகிரீசனை, சாந்த ஸ்வரூபனை
தினம் தினம் போற்றிப் பணிந்திடுவோமே

ஐயப்பா தேவன் கவச மிதனை
அநுதினம் சொல்ல அல்லல்கள் ஒழியும்
தினம் தினம் துதிக்கத் தீரும் வினையெல்லாம்
நாடிய பொருளும் நலமும் வருமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல்

மண்ணுல கெல்லாம் காத்தருள் செய்ய
மணிகண்ட தேவா வருக வருக
மாயோன் மைந்தா வருக வருக
ஐங்கரன் சோதரா ஐயப்பா வருக 1

புலிவாகனனே வருக வருக
மணிகண்ட தேவா வருக வருக
பூரணை நாதனே வருக வருக
புண்ணிய மூர்த்தியே வருக வருக 2

பூத நாயகா வருக வருக
புஷ்களை பதியே வருக வருக
பொன்னம்பலத்துறை ஈசா வருக
அடியாரைக் காக்க அன்புடன் வருக 3

வருக வருக வாசவன் மைந்தா
வருக வருக வீர மணிகண்டா
வஞ்சனை நீங்கிட வருக வருக
வல்வினை போக்கிட வருக வருக 4

ஐயம் தவிர்த்திட ஐயப்பா வருக
அச்சம் அகற்றிட அன்னே வருக
இருவினை களைந்தே எனையாட்கொள்ள
இருமூர்த்தி மைந்தா வருக வருக 5

பதினெண்படி யை மனதில் நினைக்க
பண்ணிய பாவம் பொடிப் பொடியாகும்
ஐயப்பா சரணம் என்றே கூறிட
ஐம்பூதங்களும் அடிபணிந்திடுமே 6

சபரிகிரீசனை நினைத்தே நீரிடத்
துன்பங்கள் எல்லாம் தூள்தூ ளாகும்
சரணம் சரணம் என்றே சொல்லிட
சித்திகள் யாவும் வந்தடைந்திடுமே 7

பம்பையின் பாலன்பெயர் சொல்லிடவும்
பகைவர்கள் எல்லாம் பணிந்தே வணங்குவர்
ஐயப்பன் பாதம் அநுதினம் நினைக்க
அவனியிலுள்ளோர் அடிபணித் தேத்துவர் 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணம் சரணம் ஐயப்பா
சரணம் சரணம் சபரிகிரீசா
சரணம் சரணம் சற்குரு நாதா
சரணம் சரணம் ஸ்வாமியே சரணம் 9

### வேண்டுதல்

சிவனார் மகன் என் சிரசினைக் காக்க
நெடுமால் மைந்தன் நெற்றியைக் காக்க
கஜமுகன் தம்பிஎன் கண்ணினைக் காக்க
நாரயணன் பாலன் நாசியைக் காக்க 10

இருமூர்த்தி மைந்தன்என் இருசெவிகாக்க
வாபரின் தோழன் வாயினைக் காக்க
பம்பையின் பாலன் பற்களைக் காக்க
நான் முகப் பூஜியன் நாவினைக் காக்க 11

கலியுக வரதன்என் கருத்தினைக் காக்க
குமரன் தம்பிஎன் குறல்வளை காக்க
புஷ்க்களை நாதன் புஜங்களைக் காக்க
முக்கண்ணன் பாலன் முழங்கையைக் காக்க 12

வீரமணிகண்டன் விரல்களைக் காக்க
மணிகண்ட தேவன் மார்பினைக் காக்க
கயிலை மைந்தன் கைகளைக் காக்க
வன்புலி வாகனன் வயிற்றினைக் காக்க 13

முழுமுதற் கடவுள் என் முதுகினைக் காக்க
இருமுடிப் பிரியன் என் இடுப்பினைக் காக்க
பிரம்பாயுதம் என் பிட்டங்கள் காக்க
தர்மசாஸ்தா துடைதனைக் காக்க 14

முருகன் சோதரன் முழங்கால் காக்க
கற்பூர ஜோதி என் கணைக்கால் காக்க
பந்தள பாலன் பாதத்தினைக் காக்க
விஜயகுமாரன் விரல்களை காக்க 15

அன்னதானப் பிரபு அங்மெல்லாம் காக்க
ஆரியங்கா ஜோதி அன்புடன் காக்க
காட்டா ளருபி காலையில் காக்க
நவக்ரஹ நாதன் நடுப்பகல் காக்க 16



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலின் மகனார் மாலையில் காக்க
அரிஹர சுதனார் அந்தியில் காக்க
இன்பமய ஜோதி இரவில் காக்க
எருமேலி சாஸ்தா என்றுமே காக்க 17

அரியின் மகனார் அநுதினம் காக்க
நடராஜன் பாலன் நாள்தோறும் காக்க
வாசவன் செல்வன் வலப்புறம் காக்க
இருமுடி ஈசன் இடப்புறம் காக்க 18

காக்ககாக்க கருணையால் காக்க
பார்க்கப் பார்க்க என் பாவம் பொடிபட
இம்மையும் மறுமையும் இல்லாதொழிந்திட
ஈசன் மகன்எனை என்றுமே காக்க 19

கொடிய விலங்குகளும் கொள்ளை நோய்களும்
குருதியைக் குடிக்கும் துஷ்டப் பேய்களும்
காந்மலை தனைக் கருத்தில் கொண்டிட
கலங்கி மறைந்திட கருணை புரிவாய் 20

பில்லி சூனியம் பலவித வஞ்சனை
